தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில்

மேற்குக் கோபுரம்





தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில்

வித்துவான்

கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

அப்பர் அருள்நெறிப் பதிப்பகம்

சென்னை - 41

முதல் பதிப்பு 1987

விலை ரூ. 10 - 00

அப்பர் அருள்நெறிப் பதிப்பகம்
9, முதன்மைச் சாலை,
டாக்டர் இராதாகிருஷ்ணநகர்,
திருவான்மியூர், சென்னை - 600 041.

பொருளடக்கம்

அணிந்துரை

கி. லக்ஷ்மணன்
முன்னாள் கல்வி இயக்குநர்
இலங்கை

உலகப் பிரசித்தி பெற்றதும் ஒப்பற்ற தனிச் சிறப்புகள் பல வற்றையுடையதுமான சிதம்பரம் நடராசர் சிவாலயத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பின் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் இந்த மிக அரிய தருணத்திலே அந்த அதி அற்புத சிவாலயத்தின வரலாறு களையும், அதைப்பற்றிய சகல விவரங்களையும் அதன் தனிச் சிறப்புகளையும், அவ்வாலய அம்சங்களிலே பொதிந்துள்ள சமய தத்துவ, கலை நுட்பங்களையும் திறம்படக் கூறும் அருமையான நூலொன்று வெளிவருவது பெரும் மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது.

இந்த அரிய நூலினைச் சிறப்புற எழுதித் தமிழ் உலகுக்கு வழங்கிய உயர்திரு **கோ. மு. முத்துசாமி பிள்ளை** அவர்கள் பல சிறப்புகளையுடையவர். கலெக்டராகப் பணியாற்றியவர். ஐ. ஏ. எஸ். பட்டம் பெற்றவர். தமிழிலும் சைவத்திலும் ஆழ்ந்த அறிவு நிரம்பியவர்; அவைஇரண்டிலும் மிகுந்த ஈடுபாடுடையவர், தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி இலக்கணத்திலும் ஆசறுதி யான பயிற்சியுடையவர். அரிய பல நூல்களை எழுதிப் பலரது பாராட்டைப் பெற்றவா. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வேண்டுதலுக்கிணங்கித் தற்போது தமிழகத்திலுள்ள ஆலயங் களைப் பற்றிய ஆராய்வில் ஈடுபட்டிருப்பவர்.

அவர் எழுதியுள்ள ''தில்லைச் சிற்றம்பலவனார் திருக் கோயில்'' என்னும இந்த நூல் அமைவு இடம், பெயர் விளக்கம், தலவரலாறுகள், தில்லையில் வழிபாடாற்றிய பேரருளாளர்கள், தலவிருட்சம், மூர்த்தங்கள், பஞ்ச சபைகள். கோவிந்தராசர் திருக் கோயில், தீர்த்தங்கள், கோபுரங்கள், பிராகாரங்கள், மண்டபங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள், கோயில் பணிகள், பூசை களும் திருவிழாக்களும், சமயம் கலை சமுதாயம் பண்பாடு ஆகிய பிரிவுகளைக் கொண்டது.

ஒவ்வொரு பிரிவிலும் இலகுவிற் பெறமுடியாத எத்தனையோ விவரங்களையும் நுட்பங்களையும் ஆசிரியா முத்துசாமி அவர்கள் நீண்ட நாள்களாக அரும்பாடுபட்டும் அரிதில் முயன்றும் தம் மதி நுட்பம் கொண்டு கூர்ந்து கவனித்தும மிகுந்த சிரமப்பட்டுச் சேக ரித்து அழகுபட ஒழுங்குபடுத்தித்தந்துளளமை பெரிதும் பாராட்டுக் குரியது.

ஆசிரியர் இந்நூலிலே தந்துள்ளவை வெறும் விவரச் சேகரிப்பு களோ விவரத் தொகுப்புகளோ மட்டுமல்ல. ஆங்காங்கு அரிய பல

விளக்கங்களும் தந்துள்ளார். சிதம்பரத்தையொட்டி இதுவரை நிலவி வரும் கருத்துகளில் பொருந்தாதனவையாகவோ பொருத்தக் குறைவானவையாகவோ தமக்குப்பட்டவற்றைக் குறிப்பிட்டுப் பொருத்தமெனத் தாம் கருதுவனவற்றைக் காரணங்களோடு காட்டியுள்ளார். சிதம்பரத்தின் தனிச்சிறப்புகள் பலவற்றை விதந்து குறிப்பிட்டுள்ளார். உதாரணத்துக்காக ஓரிரு இடங்களை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

சிற்றம்பலம் சிதம்பரம் என மாறிற்று என்னும் கருத்தைக் குறிப்பிட்ட ஆசிரியர் சிற்றம்பலம் சிறுமை — அம்பலம் எனப் பிரிபடும் எனவும் சிறுமை என்பது நுண்ணியது எனக்கொண்டு அக்கருத்திலே சிவபெருமானை 'நுண்ணியான்' எனத் திருஞான சம்பந்தரும் மாணிக்கவாசகரும் தம் பாசுரங்களிலே பாடியுள்ளனர் எனவும் காட்டியமை குறிப்பிடத்தக்கது. (பக்கம் 1)

ஆதியில் சிதம்பரத்தில்தில்லைமரங்கள்அடர்ந்திருந்தமையால் தில்லை மரமே சிதம்பரத்தின் தலவிருட்சம் எனக் கருதப்பட்டு வந்ததெனினும் ஆலமரமே சிதம்பரத்தின் தலவிருட்சம் எனக் கொள்ளுதல் பொருத்தமாகுமெனக் குறிப்பிட்டுள்ளார் (பக்கம் 21)

சமய குரவர் நால்வரும் ஒரே கோபுர வழியாக உள்ளே செல்லாது வெவ்வேறு கோபுர வழியாக நடராசப் பெருமானைத் தரிசிக்கச் சென்றமைக்கு ஆசிரியர் கொடுத்துள்ள காரணங்கள் சுவையாயுள்ளன. (பக்கம் 15)

சமய குரவர் நால்வராலும் பாடப்பட்ட பெருமை, திருமுறைகளுள் பெரும்பாலானவற்றுக்குப் பொருளாயமைந்த மகிமை, பன்னிரண்டாம்திருமுறையாகப் பெரியபுராணம் தோன்றுவதற்கு இடமாக அமைந்த சிறப்பு, பதினான்கு சாத்திரங்களுள் பெரும்பாலானவை இயற்றப்படுவதற்கு இடமாயமைந்த சிறப்பு, அவற்றுள் ஒன்றாகிய 'சங்கற்ப நிராகரணம்' என்னும் நூலின் மூலம் அதனை இயற்றிய உமாபதி சிவாசாரியார் சைவத்தின் மேம்பாட்டை நிலைநாட்டுவதற்கு இடமாயமைந்த தனித்துவம் ஆகியன போன்ற சிதம்பரத்தின் தனிச் சிறப்புகளை ஆசிரியர் விதந்து குறிப்பிட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

சிதம்பரத்தின் சமயச் சிறப்புகளை விவரிப்பதோடு மட்டும் நின்று விடாது, வரலாறு, கல்வெட்டுகள், சிற்பம், ஓவியம், சமுதாய நலம் பேணல் ஆகிய பல துறைகளிலும், இவ்வாலயத்தின் தனிச் சிறப்புகளை ஆசிரியர் திறம்பட விவரித்துள்ளமை இந்த நூலினை மேலும் அதிக பயனுடையதாக்குகின்றது.

நூலின் பொருட்சிறப்போடு, அதன் தமிழ்நடைச் சிறப்பையும் குறிப்பிடுவது அவசியமாகும். தனித் தமிழ்ச் சொற்களையும் தமிழ் வடிவங்களையுமே மிகுதியும் கையாண்டு இலகுவான தமிழில் நூல் முழுவதையும் எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

சிதம்பரத்தையொட்டி நீண்டகாலமாக நிலவி வந்த பிணக்கொன்று தீர்த்து வைக்கப்பட்ட தருணத்திலே இந்த நூல்

வருவதையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும். சிதம்பர ஆலயத்தில் வடமொழி வேதங்கள் மட்டுமே கனகசபையிலிருந்து ஓதப்பட்டு வந்தன. தமிழிலுள்ள தேவார திருவாசகங்களும் ஏனைய திருமுறைகளும் கீழேயிருந்தே பாராயணம் செய்யப்பட்டு வந்தன. பல ஆண்டுகளாக நிலைத்து வந்த இந்த முறையை மாற்றித் தமிழ்த் திருமுறைகளையும் கனகசபையிலிருந்தே பாராயணம் செய்யத் தொடங்கியுள்ளதாக அண்மையில் வெளிவந்த செய்தி பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்த நூலினை வாசித்தபோது 1941-44 ஆண்டுகள் என் நினைவுக்கு வந்தன. அவ்வாண்டுகள் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் எம். ஏ. வகுப்பிலே பயின்று கொண்டிருந்த காலம். அக்காலம் முழுவதும் ஒவ்வொரு வாரமும் சிதம்பர ஆலயத்தைத் தரிசித்து வந்தேனாயினும் அவ்வாலயத்தைப் பற்றிய விவரம் எதையும் முறையாகத் தெரிந்திருக்கவில்லை. அக்காலத்தில் சகல விவரங்களும் அடங்கிய நூல் இல்லாத குறையை உணர்ந்தேன். இப்போதாவது அத்தகைய நூலொன்று வெளிவருவது மிகுந்த மனநிறைவைத் தருகின்றது

சிதம்பரத்தைப் பொறுத்தமட்டில் இந்த நூல் ஓர் அரிய கருவூலம் எனக் கூறுவது மிகையாகாது, அரும்பாடுபட்டு இதனை இயற்றிய பெருமதிப்புக்குரிய கோ.மு. முத்துசாமி அவர்கள் தமிழ் உலகின் பாராட்டுக்கும் நன்றிக்குமுரியவர்,

3 – 2 - 87 கி. லக்ஷ்மணன்

பெசன்ட் நகர், சென்னை

பதிப்புரை

திருச்சிற்றம்பலவனார் திருக்கோயில் கும்பாபிடேக விழா வின்போது இக்கோயிலைப் பற்றி ஒரு நூல் வெளியிட வேண்டும் என்னும் கருத்தை முதலில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரசுச் செயலாளர் திரு. சுகவனேசுவர் அவர்கள் தெரிவித்தார் இக்கருத்தை ஏற்றுக்கொண்ட தஞ்சாவூர்த்தமிழ்ப்பல்கலைக்கழகத் தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி. அய். சுப்பிரமணியம் அவர்கள் இத்தகையதொரு நூலை எழுதுமாறு என்னிடம் கூறினார். யான் எழுதிவரும் கோயிற்களஞ்சியத்திற்கும் பயன் படுத்தத்தக்கதாக அமையுமாறு இந்நூலை யான் தொகுத்தேன்.

இக்கோயில் கும்பாபிடேகத்தின் போது, இந்நூலை வெளி யிடலாமா என்பது பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்குமாறு இக்கோயில் கும்பாபிடேகக் குழுவின் செயலாளர் திரு வாகீசம் பிள்ளை அவர்களுக்கு திரு சுகவனேசுவர் அவர்கள் கடிதம் எழுதினார். பின்னர் இதற்கேற்ப, திரு, ஜீ. வாகீசம் பிள்ளை அவர்கள் அழைப்பின்பேரில், யான் தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயிலுக்குச்சென்றேன். அப்போதுதிரு ஜீ. வாகீசம்பிள்ளை அவர்கள் சைவத் திருமுறை ஆராய்ச்சிப் பேராசியர் திரு. க. வெள்ளைவாரணன் அவர்களையும், தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில் அறங்காவலர் திரு. எஸ். வைத்தியநாத தீட்சிதர் அவர்களையும்வரவழைத்து,இந்தநூல்பற்றிஅவர்களின்கருத்துரை களைக் கேட்டறிந்தார். அம்மூதறிஞர்களின் கருத்துக்களும், திரு ஜீ. வாகீசம்பிள்ளை அவர்கள் தெரிவித்த திருத்தமும் ஏற்றுக்கொள்ளப் பட்டன. இதன் பின்னர் இந்நூல் அச்சிடப்படுவதற்குரிய நிலையை எய்திற்று. இம்மூவருக்கும் இவ்வகையில் என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை எவ்வாறு அச்சிட்டு வெளியிடுவது என்பது பற்றி தமிழ்ப் பல்கலைக்கழகத் தேத்துவமையக் கோயிற் களஞ்சியத்திற் காகத் திரட்டப்பட்ட விவரங்களைக் கொண்டு இந்நூல் எழுதப் படுகிறது என்பதைத் தெரிவிக்கும் வகையில் இந்நூலை இவ்வாறு அச்சிட்டுக்கொள்ளத் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர். ச. அகஸ்தியலிங்கம் அவர்கள் அன்புகூர்ந்து அனுமதி அளித்தார்கள். அவர்கள் அளித்த இவ்வநுமதியின் பேரில் இந்நூல் திருவான்மியூர் அப்பர் அருள்நெறிப் பதிப்பகத் தால் வெளியிடப்படுகிறது.

இவ்வகையில் துணைவேந்தர் டாக்டர். ச. அகஸ்தியலிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த என் நன்றியினைத் தெரிவித்துக் கொள் றேன்.

இந்நூலை எழுதும்போது எனக்கு அவ்வப்போது பல அரிய செய்திகளைத் தெரிவித்ததோடு யான் பார்த்துக்கொள்ளவேண்டி

பல நூல்களைக் கொடுத்துதவிய சைவப் பேரன்பர் திருவாளர் ஆ. சுப்பிரமணியம் அவர்களுக்கும்என் நன்றி உரித்து.


சில கருத்துகளை தெரிவித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் காஞ்சிபுரம் தத்துவமைய இயக்குநர் முனைவர், கூ. ரா. நஞ்சுண்டண அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதி நிலையில் இந்நூலை ஆழ்ந்து படித்துப் பார்த்து கவினுறு கருத்துகள் அடங்கிய அணிந்துரை ஒன்றை மனமுவந்து அளித்த முன்னாள் இலங்கைக்கல்வி இயக்குநர் கி. லக்ஷ்மணன் அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

9. முதன்மைச் சாலை
டாக்டர் இராதாகிருஷ்ண நகர்,
திருவான்மியூர், சென்னை-41.

கோ. மு. முத்துசாமி பிள்ளை

நடராசர் திருக்கோயில், சிதம்பரம். வரைப்படம்



மூர்த்தங்கள் : 1) சுப்பிரமணியர் 2) விநாயகர் தட்சிணாமூர்த்தி 3) நந்திதேவர் 4)முக்குறுணி விநாயசர் 5) கற்பக விநாயகர்6) முத்துக்குமாரசுவாமி 7) மீனாட்சி சுந்தரேசுவரர் 8) திருமூல விநாயகர் 9) குளக்கரை விநாயகர்கள் 10) சித்திரகுப்தர் 11) சிவகாமியம்மை 12) அகிலாண்டேசுவரி, துர்க்கையம்மன் 13) பாண்டிய நாயகர் 14) சுப்பிரமணியர் 15) நவலிங்கங்கள் 16) நந்திதேவர் 17) விநாயகர் 18) சுப்பிரமணியர் 19) ஊர்த்துவதாண்டவர் 20) மகாலட்சுமி 21) தாயுமானவர் திருமுறை காட்டிய விநாயகர் 22) நால்வர் 23) அறுபத்துமூவர் 24) அருணாசலேசுவரர் 25) திருமூலநாதர் 26) உமையபார்வதி 27, நவகிரகங்கள் 28) கருடர் 29) கோவிந்தராசப்பெருமாள் 30) பிட்சாடனர் 31) சண்டிகேசுவரர் 32) நடராசர்
மண்டபங்கள் : A) நூற்றுக்கால் மண்டபம் B) ஆயிரக்கால் மண்டபம் C) பத்தி மண்டபம் D) தேவ சபை. இராசகோபுரங்கள் : க) தெற்கு ங) மேற்கு ச) வடக்கு த) கிழக்கு தீர்த்தங்கள் : அ) சிவகங்கைத் தீர்த்தம் ஆ) பரமானந்த கூபம்

குறிப்பு : அளவுகள் ஏறத்தாழக் கணக்கிடப்பட்டவை.

___ஜே.எம். சோமசுந்தரம். சிதம்பரம் கோயில் வி. ஜி. ராமகிருஷ்ணய்ய

தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில்

1) அமைவு இடம்

கூத்தப்பெருமான் நடம் புரிந்தருளும் தில்லைத்தலம், சிதம்பரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மேற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருக்கின்றது. இதன் நான்கு கோபுரங்களையும் கொண்ட மதிற்சுவர்களிடையே உள்பரப்பு 261 மீட்டர் நீளமும் 210 மீட்டர் அகலமும் அமைந்த 54810 சதுர மீட்டராகும். இக்கோயிலின் புறப்பகுதிகள் அனைத்தும் சேர்த்துக் கணக்கிடும்போது இதன் பரப்பு 40 ஏக்கராகும்.

2) பெயர் விளக்கம்

2) 1. சிதம்பரமும் சிற்றம்பலமும்

''சித்'' ''அம்பரம்'' என்னும் இவ்விரு வடமொழிச் சொற்களும் ஒன்று சேரச் ''சிதம்பரம்'' என்னும் சொல் உருவாகிறது. ''சித்'' —ஞானம்; ''அம்பரம்''—ஆகாயம். ஆகாயம்- ஆகாசம் எனவும் குறிக்கப்பெறுகிறது. எனவே, சிதம்பரம் ஞானாகாசம். இதுவே ஞானவெளி.

ஆகாயம் பல்வேறு அண்டங்கள் நிலவுவதற்கு இருப்பிடம். பரந்துள்ள இவ்வெளியில் சிவபெருமானது திருவருளாகிய சிவ சக்தி கலந்திருப்பதால் இது ஞானவெளியாகச் சிதம்பரம் என்னும் பெயரில் விளங்குகிறது.

சிற்றம்பலம் என்னும் பெயரையும் சிதம்பரம் கொண்டுள்ளது. சிற்றம்பலம் சிதம்பரம் என மாறிற்று என்னும் கருத்தும் நிலவுகிறது. ஆனால், 'சிற்றம்பலம்' என்னும் சொல் சிறுமை, அம்பலம் ஆகிய இவ்விரு சொற்களால் ஆனது எனக் கொள்வது ஒரு தனி முறையாகும். இதில், தமிழ் இலக்கண முறையில் 'சிறுமை' என்னும் பண்புப் பெயரின் ஈற்றெழுத்தாகிய 'மை' விகுதி நீங்க, அடுத்துள்ள றகர ஒற்று இரட்டிக்கச் ''சிற்றம்பலம்'' என்னும் சொல் அமைகிறது. 'சிறுமை' என்னும் சொல் மிக நுண்ணிய ஆற்றலைக் குறிக்கிறது. இதன் உண்மை, ''நுண்ணியான்.. .மிகப் பெரியான் கணபதிச் சுரத்தானே'' எனத் திருஞானசம்பந்தர் அருளிய தமிழ்மறையிலும், ''நூலே நுழைவரியான் நுண்ணியன்'' என மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திலும் நன்கு விளங்குகிறது.

சிற்றம்பலத்தில் சிவபெருமான் உள்ளார் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதைச் ''சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க வெற்றம்பலம் தேடிவிட்டோமே'' என்றார் பட்டினத்தடிகள். ''பொதியின் மன்றம் பொதுச்சபை அம்பலம்'' எனப்பிங்கல நிகண்டு கூறுவதால், அம்பலம் என்னும் சொல் சபையைக் குறிக்கிறது. எனவே, சிற்றம்பலம், ''நுண்ணியனாகிய'' சிவபெருமான் எல்லா வற்றையும் இயக்க நடம்புரியும் புனித சபையைக் குறிக்கிறது. 'திரு' என்னும் அடைமொழி மேன்மைப் பொருளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கும் ''பலபொருள் ஒரு சொல்''. இந்த அடைமொழி சிற்றம்பலத்தோடு சேரும்போது திருச்சிற்றம்பலம் என்னும் பெருஞ் சொல்மந்திரம் தோன்றுகிறது. இம்மந்திரச் சொல்லே தமிழ்மறைப் பதிகங்களில் முதற்கண்ணும் கடைக் கண்ணும் நிலைப்படுத்தப் பெற்றுள்ளது.

இவ்வாறு சிதம்பரம் வடமொழி முறையிலும், சிற்றம்பலம் தமிழ் இலக்கண முறையிலும் அமைந்துள்ளன.

இத்தலத்திற்கு வியாக்கிரபுரம், புலியூர், பெரும்பற்றப்புலியூர் என்னும் பெயர்களும் உள்ளன. புலிநகப் பாதங்கள் பெற்றிருந்த முனிவர் 'வியாக்கிரபாதர்' என்னும் பெயரில் விளங்கினார். வியாக் கிரம் என்னும் சொல் வடமொழியில் புலியைக் குறிக்கிறது. இவர் பூசித்த இத்தலத்திற்கு 'வியாக்கிரபுரம்' என்னும் பெயரும்; 'புலியூர்' எனனும் பெயரும் அமைந்தன.

உட்பற்று, புறப்பற்று ஆகியவை நீங்கப்பெற்ற பெரும்பேறா கிய ஞானப்பற்றுக்கு இடமாய்ச் சிற்றம்பலம் விளங்குவதால், இது 'பெரும்பற்றப் புலியூர்' என்னும் பெயரையும் பெற்றுள்ளது.

3) தல வரலாறுகள்

பண்டைக்காலத்துப் பெருமை தாங்கியுள்ள சிதம்பர மகாத் மியமும், கி.பி.14 ஆம் நூற்றாண்டின் முதல்பகுதியில் வாழ்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பெற்ற கோயில் புராணமும், 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பெற்ற சிதம்பர புராணமும், சைவத்திரு முறைகள், கடவுண் மாமுனிவர் அருளிச்செய்த திருவாதவூரடிகள் புராணம் முதலியவையும் இத்தலத்தின் வரலாற்றுச் சிறப்புகளை விளக்குகின்றன.

தில்லையில் வழிபாடாற்றிய பேரருளாளர்கள்

3) 1. வியாக்கிரபாதர்

வடநாட்டுப் புனித கங்கைக் கரையில், முனிவர் மத்தியந்தினர் வாழ்ந்து வந்தார். அவர் புதல்வர் மாத்தியந்தினர் தம் தந்தை திரு வடியிலே சாத்திரங்களை நன்கு கற்றனர்; பின்னாத் துறவு பூண்டு மிக உன்னத இலட்சியத்தை அடைய விரும்பித் தம் தந்தையிடமே

தமது நோக்கத்தைத் தெரிவித்தார். தந்தையார் தம் தனயனை நோக்கி, ''மைந்தா சிவபெருமானை வழிபடுதலே மிக உயர்ந்த கோட்பாடாகக் கொள்வாயாக. சிவப்பரம்பொருள் எங்குமே இருப்பினும், குறிப்பிட்ட சில தலங்களில் மட்டும் அவர் சிறந்து விளங்குகிறார். எல்லாத் தலங்களுக்கும் மையமாகவும் முதன்மையாகவும் பொருந்தியுள்ளது புகழ்வாய்ந்த தில்லைத் தலமாகும். இங்கு அப்பெருமான் ஆகசலிங்கமாக இருந்து வருகிறார். அவரை வழிபட்டு உய்வாயாக'' என அறிவுறுத்தினார். இவ்வறிவுரையைத் தலைமேல் தாங்கிய மாத்தியந்தினா தில்லையைக் காணத் தென்னாடு நோக்கித் தில்லை மரங்கள் அடர்ந்திருந்த இடத்தை அடைந்தார். அங்குத் தாமரை மலர்கள் பூத்து விளங்கிய ஒரு குளத்தைக் கண்டனர்; அதுவே சிவகங்கைத் தீர்த்தம். அங்கு ஓர் ஆலமர நிழலில் சிவலிங்கம் ஒன்று சிறந்து விளங்கியதை அவா கண்டார்; (இதுவே சிதம்பரத் திருக்கோயிலில் தற்போதுள்ள திருமூலட்டானேசுவரர்). அந்நாள் முதல் இச்சிவலிங்க வழிபாட்டில் திளைத்தனர். இதேசமயத்தில் சிவகங்கைத் தீர்த்தம் என்னும் பெயரில் இருந்துவந்த இபபுனிதக்குளத்திற்குச் சற்று மேற்கில் தனிப்பட்ட முறையில் அவர் ஒரு சிவலிங்கம் நிறுவி அதனையும் வழிபட்டு வந்தார். (இதுவே சிதம்பரம் திருக்கோயிலுக்கு மேற்கில் தற்போதுள்ள இளையனாராக்கிய கோயிலாகும்.)

நாள்தோறும் சிவபெருமானை வழிபடுவதற்கெனத் தாம் பறித்து வந்த நறுமலர்களை மாத்தியந்தினர் ஒருநாள் ஆராய்த்துபார்த்தார். அப்போது அவற்றுள் பழயனவும் பழுதுபட்டனவுமாகிய பல மலர்கள் விரவியிருக்கக்கண்டு வருந்தி, ''விடிந்த பின்னர் மலரெடுப்பின் அவை வண்டுகள் ஊதியனவாக இருக்கும். இரவில் மலர் எடுக்க, மரமடர்ந்த இக்காட்டகத்தே பரவியுள்ள இருள் தடையாக இருக்கும். மரங்களில் ஏறி மலர்களைப் பறிக்க முற்பட்டாலும், பனிகாரணமாகக் கால்கள் வழுக்கும். என் செய்வேன்'' என அவர் உள்ளம் குழைந்து வருந்தினார். அவருக்கு இன்னருள் புரிய இறைவன் அவர் முன தோன்றினார். அப்போது அவரை நோக்கி ''ஐயா! உம்மை வழிபடத் தேவையான மலர்களைப் பறிக்க வைகறையில் மரங்களில் வழுவாமல் ஏற என் கைகள் கால்கள் ஆகியவற்றில் புலியின் வலிய நகங்கள் உடையவையாகவும் வழி தெரிந்து மரங்களில் ஏறுவதற்கும் பழுதற்ற மலர்களைத் தெரிந்து கொய்வதற்கும் என் கைகள் கால்கள் ஆகியவற்றின நகங்களில் கண்கள் அமைவதற்கும் அருள் புரிக'' என மாத்தியந்தினர் வேண்டினார். சிவபெருமானும் அவ்வாறே ஆகுமாறுஅருள்புரிந்து மறைந்தார். அன்று முதல் மாத்தியந்தினர் வியாக்கிரபாதர். (புலிக்கால் முனிவர்) என்னும் பெயர் தாங்கினார். இவ்வாறு புலிக்கால் முனிவர் வழிபட்ட காரணமாகத் தில்லைத்தலம் புலியூர் எனவிளங்குவதாயிற்று.

இவ்வாறு வியாக்கிரபாதர் வாழ்ந்து வந்தபோது, தம் தந்தையார் விருப்பத்திற்கேற்ப, வசிட்ட முனிவரின் தங்கையாரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்கள் இருவரும் தாம் ஆற்றிவந்த அருந் தவவாழ்வு காரணமாக உபமன்னியர் என்னும் ஆண்மகவு

பெற்றெடுத்தனர். இக்குழந்தையை வசிட்டரின் துணைவியர் தம் இல்லத்திற்கு எடுத்துச்சென்று தம்மிடத்திலிருந்த காமதேனுவின் பாலூட்டி வளர்த்துவந்தார். பின்னர் வியாக்கிரபாதரும் அவர் துணைவியரும் தம் மகவைத் தமதில்லத்திற்குக் கொணர்வித்தனர். இக்குழந்தைதனக்குஅளிக்கப்பெற்ற ஆவின்பாலை உண்ணாது அழப் பெற்றோர் இருவரும் அக்குழந்தையை தில்லை இறைவன் சந்நிதியில் விடுத்தனர். இறைவன் அருள் சுரந்து அக்குழந்தைக்குத் தெய்வப் பாற்கடற்பாலையே ஊட்டினர். அதனை அக்குழந்தை இனிதாகப் பருகிக் களித்தது. பின்னர் இக்குழந்தை வளர்ந்து கலைகள் பலகற்று ஞானியாகத் திகழ்ந்து வந்ததால், இவ்வகையில் கவலை தீர்ந்த வியாக்கிரபாதர். சிவயோகத்தில் அமர்ந்து சிவன் திருவடியில் கருத்தொன்றுபட்டிருந்தார் அப்போது அவர் "தில்லை பெருமான் தில்லையிலேயே தமது கூத்தினை நிகழ்த்துவார். அதனை யான் காணப்பெறுவேன்" என உறுதிகொண்டார்.

3) 2. பதஞ்சலி முனிவர்

வியாக்கிரபாதர் வரலாறு போன்றே பதஞ்சலி வரலாறும் இத்தலத்துடன் நெருங்கியமுறையில் அமைந்துள்ளது.

தம் மீது பள்ளி கொண்டிருந்த திருமால் உள்ளம் பூரித்ததை உணர்ந்து கொண்ட ஆதிசேடன், இதைப்பற்றித் திருமாலிடமே வினவினர். தாம் சிவபெருமான் திருநடனத்தைக் கண்டு ஆனந்த முற்றதை நினைத்து மகிழ்ச்சி அடைந்ததாகத் திருமால் ஆதிசேடனுக்குத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சி பற்றித் தமக்கு முழுமையாகக் கூறுமாறு ஆதிசேடன் திருமாலிடம் வேண்டினர். இவ்வேண்டுகோளை மறுக்கமுடியாத நிலையில், திருமால் ஆதிசேடனை நோக்கி, 'ஆதிசேட! சிவபெருமானது இன்னருள் பெற யான் முன்னொரு காலத்தில் கயிலாயம் சென்றிருந்தேன். அப்போது அவர், 'தாருகாவன முனிவர்கள் புரிந்துவந்ததவறுகளை எடுத்துரைத்துத் தாங்கள் புரியும் நற்செயல்களே தங்களுக்கு நற்பயன் அளிக்கும் எனவும் இறையருள் வேண்டத்தக்கதன்று என்னும் கொள்கையுடையராக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் எனவும் அவர்களைத் திருத்தத் தாம் அங்குச் செல்வதாகவும் கூறினர். அப்போது யானும் அவருடன் வருவதாகத் தெரிவித்து அவ்வாறே சென்றேன், பிச்சை ஏற்கும் நிலையில் பிட்சாடனராக அவர் அங்குச் சென்றார். யான் அழகிய மோகினி வடிவில் அவரைப் பின்தொடர்ந்தேன். இவ்வாறு யாங்கள் வந்ததைக் கண்டவுடன், முனிவர்கள் என் அழகில் ஈடுபட்டு என்னை அணுகினர், அவர்கள் துணைவியரோ பிட்சாடனராக அங்கு வந்திருந்த சிவபெருமான் அழகில் கட்டுண்டனர். சிறிது நேரத்தில் தங்கள் நுண்ணறிவு கொண்டு எங்கள் வடிவில் ஐயங்கொண்டு உண்மை நிலையை உணர்ந்து அவர்கள் வெட்கமெய்திப் பின் எங்களை அழிக்க முயன்றனர். இதற்காக உடனே முனிவர்கள் ஒரு வேள்வி தொடங்கினர்; அப்போது அவ்வேள்வியிலிருந்து கொடிய புலி ஒன்று தோன்றிச் சிவபெருமானை எதிர்க்கத் தொடங்கிற்று. அப்புலியைச் சிவபெருமான் அமைதியாய்ப்பற்றி

அதன்தோலை உரித்துத்தம் இடையில் சுற்றிக் கொண்டார். பின்னர் அவ்வேள்வியிலிருந்து எழுந்த பெரிய பாம்பை அவர் தம் கழுத்தில் சுற்றிக்கொண்டார். இறுதியில் அவ்வேள்வியில் குள்ள வடிவில் தோன்றிய முயலகனை அவர் தம் திருவடி கொண்டு மிதித்தார். இதன் பின்னர், இந்நிலையில் அவர் தம்சடை தாழத் துணங்கைக் கூத்து ஆடினர். இக்கூத்தின் கடுமையைப் பொறுக்கலாற்றாது அம்முனிவர்கள் ஒருங்கே அயர்ந்துவிழ, இறைவன் இரக்கம் கொண்டு அக்கடுங்கூற்றை மாற்றி இன்பக் கூத்தினை இயற்றினார். இந்த நடனத்தை யான் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்நடனத்தை உமை பிராட்டியார் தேவர்கள் உட்படப்பலரும்கண்டு பேருவகை அடைந்தனர். முனிவர்களும் தம் அயர்வு தீர்ந்து இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றனர்.

இத்திருநடனத்தைக் கண்டபின் முனிவர்களும் அவர்கள் துணைவியரும் திருந்திச் சிவபூசையை ஏற்றுக்கொண்டார்கள். சிவபெருமானும் கயிலைக்குச் சென்றார். யானும் திரும்பினேன். ''சிவபெருமான் புரிந்த நடனத்தை எண்ணி இன்று பெருமகிழ்ச்சி எய்தினேன்'' எனக்கூறினர். இந்நிகழ்ச்சி பற்றி இவ்வாறு தெரிந்து கொண்ட ஆதிசேடன். தாமும் இந்நடனத்தைக் காணப் பெரிதும் விரும்பினார். இவ்விருப்பத்தை உணர்ந்த திருமால் 'இறைவனுக்கு நீ அன்பன் ஆனாய். இனி உன்னை அணையாகக் கொள்ளேன்' எனக்கூறித் தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுமாறு திருமால் ஆதிசேடனுக்கு அனுமதி தந்தார். திருமாலிடம் தாம் புரிந்துவந்த பணியிலிருந்து ஆதிசேடன் விடுதலைபெற்றுக் கொண்டதும் தாம் புரிந்துவந்த பணியைத் தம் புதல்வனிடம் ஒப்புவித்துவிட்டுக்கயிலைக்குச் சென்றார். சிவபெருமான் ஆடலைத் தாம் காணவேண்டும் என்பதற்காக ஆதிசேடன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். ஆதிசேடன் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவர்முன் தோன்றி, ''அன்ப! முன்னாள் யாம் தாருகவனத்தில் நடனம் புரிந்தோம். தாருகவனம் இந்நிலவுலகத்திற்கு மையத்தில் அமையாததால், யாம் அங்கு நடனம் புரிந்தபோது அது அசைந்தது. அதுகாரணமாக, யாம் புரிந்த நடனத்தினைச் சிறிது பொழுதில் முடித்துக்கொண்டோம். நீ விரும்பிய நடனம், மைய நிலையமாகிய தில்லையில் மூலட்டத்தானத்திற்கு தெற்கிலுள்ள அம்பலத்தில் நிகழ்த்தப்பெறும். தில்லை மன்றத்தில் நடத்தப்பெறவுள்ள இன்பக்கூத்து ஐந்தொழில்களையும் தன்னுள் கொளும். உடம்பும் உலகமும் அமைப்பில் ஒத்துள்ளன. இடை, பிங்கலை, சுழுமுனை என உடம்பில் உள்ளோடும் மூன்று நாடிகளில் சுழுமுனை உடம்பில் நடுவே ஓடுகிறது. நெஞ்சத்தாமரையின் அருள் வெளியில் யாம் ஓயாது அருட்கூத்து நிகழ்த்துவது போன்று, தில்லையில் புறத்தே ஓயாது திருக்கூத்து இயற்றுவோம். அறிவுடையோர் இதனைக்கண்டு பிறவித் துன்பம் ஒழிப்பார். இந் நடனத்தைக் காண நீ தனி உருக்கொண்டு தில்லையை அடைதல் வேண்டும். ஏனெனில், உன் ஆயிரம் தலைகளுடன் நீ செல்வாயெனில் உன்னைக்காண மக்கள் அஞ்சுவார்கள். ஆதலினால் நீ ஐந்து தலைப் பாம்பாக உருமாற வேண்டும். இதற்காக ஒரு வழி உண்டு. உன்னைப் புதல்வனாகப் பெறத் திருமாலிடம் வரப்

பெற்ற அத்திரி முனிவரும் அவர் துணைவி அனுசூயையும் உன்னைப் பெற்றுக்கொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் சமயம் பார்த்து அனுசூயை கையில் நீ எய்திடுவாய். அம்மாது உன் உருவத்தைக் கண்டு அஞ்சி உன்னைத் தம் பாதத்தில் விட்டுவிடுவார். இவ்வாறு நீ அவர் பாதத்தில் விழும் காரணமாக நீ பதஞ்சலி என்னும் பெயர் பெறுவாய். இப்பெயரோடு நீ, பொருத்தமான தொரு வழியில் பாதாளம் சென்றிடுவாய், அங்கொரு மலை இருக்கின்றது. அதற்குத் தென்புறம் ஒரு பிலத்துவாரம் உண்டு. அதன் வழியாக மேலே இந்நிலவுலகிற்கு எய்துவாயெனில், தில்லைவனத்தினை அடைவாய். அங்கே ஓர் ஆலின் கீழ் மூலத்தானச் சிவலிங்க மூர்த்தியைக்காண்பாய். அங்கு வியாக்கிரபாதர் வழிபாடு செய்து கொண்டிருப்பார். அவ்விடத்தில் யாம் தைப்பூச வியாழக் கிழமை உச்சிவேளையில் ஆனந்த நடனம் புரிவோம். இதனைத் தரிசனம் செய்வாயாக'' எனச் சிவபெருமான அறிவுறுத்தினார். இவ்வறிவுரைக்கேற்ப,ஆதிசேடன் பதஞ்சலி என்னும பெயர் தாங்கிப் பாதாளத்திற்குச் சென்று, அங்கிருந்து தில்லையை அடைந்தார். அங்கு வியாக்கிரபாதரைக் கண்டு அவருடன் நட்புரிமை கொண்டார். இந் நிலையில் அவர் நடராசர் திருநடனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

தில்லைச் சிற்றம்பலவனார் திருநடனம்

தாம் குறிப்பிட்ட வியாழக்கிழமை நாளில் சிவபெருமான் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனம் புரியத்தொடங்கினார்.

இந்நடனக் காட்சியில் நடராசப்பெருமான், நின்ற நீள்திருவடியும், தூக்கிய திருவடியும், அத்திருவடிகளில் விளங்கிய திருச்சிலம்பும், இடையில் பொலிவுற்ற புலித்தோலாடையும், திருவுந்தியில் உயரப் பொருந்திய உதர பந்தமும், வீசியருளிய வள்ளல் கையும் பரநாதம் எழுப்பும் தமரகத் திருக்கையும், திரண்ட திருத்தோள்களும், அனல் ஏந்திய திருக்கரமும், நிலவொளி படர்ந்த திருமிடறும், திருத்தோடும் சங்கக் குழையும் பொருந்திய திருச்செவிகளும், கொவ்வைச் செவ்வாயும், குமிண் சிரிப்பும், உமையம்மையை உற்று நோக்கும் திருநயனங்களும், அழகு பொலியும் திருப்புருவமும், அகன்ற திருநெற்றியும், பின்தாழ்ந்து விழுந்து படரும் கற்றைச் சடையும், பாம்பும், கங்கையும் சந்திரனும் சூடிய சிரசும், உடலில் பால் வெண்ணீறும் விளங்க, ஆனந்த திருநடனம் புரிந்தார்.

அப்போது, சிவகாம சுந்தரி திருச்சிலம்பு அணிந்த திருவடிகளும், துடியை ஒத்த திருமருங்கும்,அழகிய செங்கழுநீர்ப் பூவேந்திய திருக்கையும், மூங்கிலையொத்த தோளும், பொலிவினையுடைய மங்கல நாண் அணிந்த கழுத்தும், பசிய திருமேனியும், வில்லையொத்த திருப்புருவங்களும், மணம் பொருந்திய மலர்கள் அணிந்த திருமுடியும் விளங்கச் சிவபெருமான் புரிந்த திருநடனத்தை வியப்புடன் கண்டருளினார். இக்காட்சியைக் கண்ட வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் சிரத்தில் கைம்மலர் பொருந்த,விழிநீர் தாரைகொள்ள உரைகுழறி இன்பக் கடலில் மூழ்கினர். அரி, அயன், தேவர்கள்,

முனிவர்கள் முதலியவர்களெல்லாரும் இத்திருநடனத்தைக் கண்டு களித்தனர்; பலவாறாகப் போற்றினர்.

ஆன்மாக்கள் வெளியாரத் தரிசனம் செய்து உய்யும் பொருட்டு நடராசர் தம் சக்தியோடு அன்றுமுதல் என்றுமே இவ்வம்பலத்தில் நிருத்தத்தைப் புலப்படுத்திக்கொண்டே அருள்புரிந்து வரவேண்டும் எனப் பதஞ்சலி வேண்ட, அவ்வாறே அங்குத் திருவருள் புரிவதாகச் சிவபெருமான் தெரிவித்தார். அத்திருவாக்குக்கேற்பச் சிவபெருமான் இங்குத் திருவம்பலத்தில் திருநடனம் செய்துகொண்டே இருக்கிறார்.

3) 3. இரணியவன்மன்

வடக்கே கௌட நாட்டை ஆண்டு வந்த கௌடேசன் என்னும் மன்னனின் முதல் புதல்வன் சிங்கவன்மன். சிங்கவன்மனுக்குப் பின் தோன்றியவர்கள் இருவர். தான்உடல் குறையுற்றதை முன்னிட்டுச் சிங்கவன்மன் தன் தந்தையிடம் விடை பெற்றுப் பல புனிதத் தீர்த்தங்களில் நீராடி இறைவழிபாடு செய்யத் திட்டம் பூண்டு வடதிசையிலிருந்து தென்னாடு அடைந்து காளத்தியை நெருங்கினான். ஆங்கு வேடன் ஒருவன் தெரிவித்த விவரங்களைக் கொண்டு வியாக்கிரபர்தர் வழிபாடாற்றி வந்த தில்லை இடத்தை ஒருவாறு தெரிந்துகொண்டு அங்குவந்து சேர்ந்தனன். சிவபெருமான் அருளிய வாக்கிற்கேற்ப, வியாக்கிரபாதரும், பதஞ்சலியும்,அவன் நீராடுமாறு அறிவுரை வழங்கினர்.அவ்வாறு அவன் சிவகங்கையில் நீராடியதும் பொற்சொரூபமாய் எழுந்தான். அதுகண்டு அங்குள்ளோர் அவனுக்கு ''இரணியவன்மன்'' என்னும் பெயர் சூட்டினார். பின்னர், வியாக்கிரபாதர் இரணியவன்மனுக்குப் பஞ்சாட்சரம் உபதேசம் செய்து சிதம்பரநாதர் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். தில்லை ஆனந்தச் செல்வரும் இரணியவன்மனுக்கு ஆனந்த நடனத்தைப் புலப்படுத்தினார். இரணியவன்மன் அந்நடனத்தில் மூழ்கிப் பலவாறாக இறைவனைப் போற்றினான். சிவபெருமானும் இரணியவன்மன் பேரன்பினைப் பாராட்டி ''இனி நீ வியாக்கிரபாதருக்கும் பதஞ்சலிக்கும் தில்லைவாழ் அந்தணர்களுக்கும் பணி செய்வாயாக' என்றனர். இதன்பின்னர், இரணியவன்மனுக்கு வியாக்கிரபாதர் பல உண்மைகளை விளக்கினார்.

பின்னர்க் கௌடநாட்டின் அரசேற்குமாறு கௌடநாட்டிலிருந்து தனக்கு அழைப்பு வந்ததை இரணியவன்மன் ஏற்கவில்லை. ஆனால், கௌடநாடு சென்று ஆங்கு அரசுப்பதவி ஏற்குமாறும் அதன்பின்னர்த்தம் உறவினர், உற்றார், அலுவலர்கள் ஆகியோர் சூழ்தரப் பல்வகைப்பொருள்களுடன் தில்லைக்கு மீண்டு வருமாறும் வியாகிரபாதர் இரணியவன்மனுக்கு அறிவுரைவழங்கினார். மற்றும் அவ்வாறு வரும்போது, முன்னர் அந்தர்வேதியில் பிரமதேவர் புரிந்த வேள்விக்குச் சென்றிருந்த தில்லைவாழ் அந்தணர்களையும் தில்லைக்கு அழைத்து வருமாறும் அவர் அறிவுறுத்தினார். இவ்வறிவுரைக்கேற்ப, இரணியவன்மன் தன் நாடு சென்று அரசேற்றுத் தம்முடன் அந்நாட்டு மக்கள் பலருடன் தில்லை நோக்கி வருமுன

தில்லை மூவாயிரவரையும் அழைத்துத் தில்லை வந்து சேர்ந்தான். இவ்வாறு தில்லையை அடைந்த அந்தணர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்தது. இவ்வகையில் எஞ்சியவர் யார் என்னும் வினா எழுந்தது. அவ்வாறு காணாத நிலையில் இருந்தவர் சிவபெருமான் என்பதை அருள்வாக்குத் தெரிவித்தது. இவ்வாறு தில்லைவாழ் அந்தணர்கள் முதலிய பெரியோர் தில்லையம்பலத்தைச்சூழ்ந்திருக்க இரணியவன்மன் சிதம்பரத்திற்குக் கிழக்கே கொற்றவன்குடியில் படைவீடு அமைத்து அங்குக் கட்டப்பட்ட மாளிகையில் வாழ்ந்து வந்தான்.

இக்காலத்தில் இத்தலத்தில் பல திருப்பணிகள் இவன் புரிந்த தோடு நாள்வழிபாடுகளும், பலதிருவிழாக்களும் சிறப்புற நடத்தினான்.

3) 4. காளி

முன்னொருகாலத்தில் தாருகன் என்னும் அரக்கனை அழிக்கும் பொருட்டுத்துர்க்கை தன்னிடத்துத் தோன்றிய காளியை அனுப்பி னாள். அவ்வாறு ஏவப்பட்ட காளி அவனோடு போராடி அவனது உடலைக் கிழித்தாள். அவ்வகையில் கீழே சிந்திய குருதியிலிருந்து அரக்கர் பலர் உண்டாவதைக்கண்ட காளி அவனது செங்குருதியைத் தானே பருக அதுகாரணமாக வெறிகொண்டு, உலகுயிர்களை யெல்லாம் அழிக்கத் தொடங்கினாள். இதைக்கண்ட முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அக்காளி முன்தோன்றிக் கூத்து இயற்ற, அக்கூத்தின் வன்மையால் காளி தனது வெறி அடங்கப்பெற்றாள், பின்னர் இறைவன் அருளையும் பெற்றாள். இதனை,

> ''வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
> கன்றிவரு கோபமிகு காளி கதம்ஓவ
> நின்றுநடம் ஆடியிட நீடுமலர் மேலால்
> மன்றல் மலியும் பொழில்கொள் வண்திருவையாறே !

எனத் திருஞானசம்பந்தர் எடுத்துக்காட்டுகிறார்.

மாணிக்கவாசகரும்,

> எழில்பெறும் இமயத்தியல் புடையம் பொன்
> பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
> கனிதரு செவ்வாயு மையொடு காளிக்
> கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
> இறைவன் ஈண்டிய அடியவரோடும்
> பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்

(கீர்த்தித் திருவகவல் 140-145)

எனவும்

தேன்புக்க தண்பணை சூழ்தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடி
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டங்கர்ண் சாழலோ

எனவும் பாடியருளியுள்ளார். (திருச்சாழல்-14)

தில்லைச் சிற்றம்பலவர் கோயிலுக்கு வடக்கில் காளிகோயில் இருப்பது இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது.

3) 5. திருமூலர்

அகத்தியரைக் காணக் கயிலையிலிருந்து தென்திசை நோக்கி வந்த திருமூலர், காஞ்சி, காளத்தி முதலிய திருத்தலங்களில் வழிபடாற்றிப் பின்னர்த்தில்லைச் சிற்றம்பலத்தை எய்தி, அம்பலவாணர் ஆனந்தத் திருத்தாண்டவத்தைக் கண்டு பேரின்பத்தில் மூழ்கினார். இதனைச் சேக்கிழார்,

எவ்வுலகும் உய்ய எழுந்தருளிய சேவடியாரைச்
செவ்விய அன்புற வணங்கிச் சிந்தை களிவரத்திளைத்து
வவ்விய மெய்யுணர்வின் கண்வரும் ஆனந்தக்கூத்தை
அவ்வியல்பில்கும்பிட்டங் காராமை அமர்ந்திருந்தார்

(திருமூலநாயனார் புராணம் 7)

என்பதாகத் தெரிவித்துள்ளார்.

3) 6. முனிவர்கள்

வியாச முனிவர், சுக முனிவர், சூதமுனிவர் ஆகியோர் இங்குத் தில்லைச் சிற்றம்பலவரை வழிபட்டு நற்பேறு பெற்றார்கள். சைமினி முனிவர் மூன்றடி தம்கவியாகவும், ஈற்றடி வேதமாகவும் அமைந்த பாடல்களை ஓதிவழிபாடாற்றி நலம்பல எய்தினார். இவர் இயற்றிய நூலுக்குவேதபாதஸ்தவம்என்பது பெயராகும்.

3) 7. துன்மதன் முதலியோர்

துன்மதன, துச்சகன், துற்றெரிசனன் முதலிய அநேகர் இங்கு வழிபாடாற்றித் தங்கள் பாவங்கள் தீங்கப் பெற்றனர்; பின்னர் முக்தியெய்தினார்கள்.

3) 8. திருநீலகண்டர்

தில்லைச் சிற்றம்பலத்திற்குத் தொடர்புடைய நாயன்மார்களைப் பற்றிப் பெரிய புராணம் விளக்கம் அளிக்கிறது. தில்லைவாழ் அந்தணரை முதல் முதலில் குறிப்பிட்ட திருத்தொண்டத் தொகை அடுத்துத் தில்லையில் வாழ்ந்த திருநீலகண்டரைப் போற்றுகிறது

இவர் சிவனடியார்களுக்குப் பிச்சைப்பாத்திரங்களாகிய திருவோடுகளைக் கொடுத்து வந்தார்; இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் சிற்றின்பத் துறையில் தம்மைஎளியராக்கிக் கொண்டார். இதன் காரணமாகக்கற்பிற் சிறந்த இவர் மனைவியர், தம்மை அவர் தீண்டக்கூடாது எனத்தம் கணவருக்குத் தடை விதிக்கும்வகையில், ''எம்மைத் தீண்டுவாராயின் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டார். இவர் இதனை நன்குணர்ந்து தம் மனைவியிடம் யாதொரு உடலுறவு கொள்ளாது பல ஆண்டுகள் வாழ்ந்துவந்தார். இதனைப் பிறர் எவரும் அறிந்திலர். இவர்கள்பெருமையைவெளிப்படுத்த, இறைவர் முதியவர் வடிவில் தோன்றி, தம்மிடமிருந்த ஓட்டினை நாயனாரிடம் தந்து அதனைப் பின்னர்த்தம்மிடம் ஒப்புவிக்குமாறு கூறிப் போந்தனர்.

ஆனால், அந்த ஓட்டினை இறைவன் அகலப் போக்கினார். அவ்வோட்டினைத் தம்மிடம் தந்த முதியவரிடம் அதனை ஒப்புவிக்க இயலாத நிலையில் நாயனார் வருந்தியபோது, தம் மனைவி கையைப்பற்றி ஆங்குள்ள குளத்தில் மூழ்கி அந்தஓடு இழக்கப்பட்டதாகச் சபதம் செய்யுமாறு வற்புறுத்தினார். ஒருவாறு இவர் தம் மனைவியோடு குளத்தில் மூழ்கினார். அப்போது சிவபெருமான் இவ்விருவர் முன்தோன்றி அவர்கள் பெருமையை விளக்க இருவரையும் இளமையாக்கினார் என்பது தில்லை நடராசர் கோயிலுக்கு மேற்கிலுள்ள இளமையாக்கினார் கோயில் புலப்படுத்துகிறது. இவர்கள் திருவுருவங்கள் அங்குள்ள திருக்குளத்து உட்சுவரில் அழகுற அமைந்துள்ளன.

3) 9 திருநாளைப்போவார்

இவர் கொள்ளிடக் கரையிலுள்ள ஆதனூரில் இழிகுலம் எனக் கருதப்பட்ட புலையர் குலத்தில் தோன்றியவர். உணர்வு வந்த நாள் முதல் இவர், சிவபெருமானிடத்து வைத்த ஆசையினால், செம்மைபுரி சிந்தையினராகி, மறந்தும் வேறு நினைவில்லாமல் சிவத்தொண்டிலே ஒழுகுவாராயினர். தில்லை அம்பலவாணரை ''நாளை தரிசனம் செய்வேன். நாளை தரிசனம் செய்வேன்'' என இவர்கூறிக்கொண்டு வந்ததால், இவருக்குத்திருநாளைப்போவார் என்னும்பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறு முற்பட்ட இவர்ஒரு நாள் தில்லையின் எல்லையை இரவு பகலாக வலம் வந்தார். துன்பம் தரும் இழிந்த அப்பிறவியே தமக்குத் தடையாக இருந்தது என எண்ணித் துயில் கொண்ட அவரது கனவில், இறைவர் தோன்றி, ''இப்பிறவி நோய் நீங்க நீ தீயில்மூழ்கி மறையவருடன் முன் அணைவாயாக'' என்று புன்முறுவலுடன் அருள் புரிந்தார். மேலும் அவ்வாறே தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் தனித்தனியாக எழுந்தருளித் திருநாளைப் போவாருக்குத்தீ அமைத்துக் கொடுக்குமாறு அருளினார். அவ்வாறு மறையவர்கள் அமைத்த தீக்குழியினைத் திருநாளைப் போவார் நண்ணி இறைவர் தாளை மனங்கொண்டு எரியினை வலம் வந்து கை தொழுதார்: பின்னர் அவ்வழலினுள் புகுந்தார்: பின்பு அத்தீயிலிருந்து புண்ணிய முனி

வராய் எழுந்தனர். திருமன்றில் நடனம் காண விரைந்து சென்றார். அதன் பின்னர் அவரை யாரும் காணவில்லை. இவ்வாறு சிவபெருமான் தம்முடைய திருவடிகளைத் தொழுதிருக்கும் இன்ப நிலையை அவருக்கு அருளினார்.

3) 10 சேரமான் பெருமாள் நாயனார்

சேரமான் பெருமாள் நாயனார் சேரர் குல மன்னர். இவர் யாரும் யாவும் கழறுவன (பேசுவன) அனைத்தும் அறியும் உணர்வினைப் பெற்றிருந்தமையால் இவர் கழறிற்றறிவார் நாயனார் என்னும் பெயரில் விளங்கினார். இவர் தில்லைக்கு வந்து சிற்றம்பலவரைப் போற்றிப் பொன்வண்ணத்தந்தாதி பாடியருளினார். இவர் தாம் புரிந்து வந்த சிவவழிபாட்டின் முடிவில் தில்லை நடராசர் ஆடல் சிலம்பின் ஒலி கேட்கும் வாய்ப்புப் பெற்றிருந்தார். ஒருநாள் பூசையில் கழற் சிலம்பொலி அவருக்குக் கேட்கவில்லை. தாம் செய்த தவறு காரணமாக இத்நிலை ஏற்பட்டதெனத் தம்மை மாய்த்துக்கொள்ளத்தம் உடைவாளைத் தம் திருமார்பில் நாட்ட, ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஒலி இசைப்பித்தார். இச்சிலம்பொலி இசைப்பதற்கு ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணம் விளம்புமாறு சேரமான் சிவபெருமானிடம் வினவ, ''வன் தொண்டர் (சுந்தரர்) தில்லை மன்றத்தில் நம்மைப் போற்றிப் பதிகம் பாடியதைக் கேட்டு வரத் தாழ்த்தோம்'' எனச் சிவபெருமான் விடை பகர்ந்தனர். இதன் பின்னரே சேரமான் பெருமாள் சுந்தரர் பெருமையை உணர்ந்து அவரிடம் நட்புரிமை கொண்டார். இத்தகைய நட்புரிமைக்கு வழிவகுத்தவர் சிற்றம்பலநாதரே ஆவர்.

3) 11 கூற்றுவ நாயனார்

இவர் களந்தை நகரில் களப்பிர மன்னர் மரபில் தோன்றினவர்: சிவநாமத்தையும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓதுவதை மேற்கொண்டு சிவனடியார்களுக்குத் திருத்தொண்டும், சிவன் கோயில் திருப்பணிகளும் செய்தவர். இவர் தமக்கு முடிசூட்டுமாறு தில்லைவாழ் அந்தணர்களிடம் வேண்டினர். தில்லைவாழ் அந்தணர்கள் இம்மன்னர் வேண்டியவாறு செயற்படவில்லை. அவர்கள் ''யாம் சோழ மன்னர்களுக்கல்லாமல் பிறர் எவர்க்கும் முடிசூட்டோம்'' எனக் கூறி விட்டனர். பின்னர் அம்மன்னர் தாம் புரிந்தது தவறு என உணர்ந்து மனம் தளர்ந்து நடராசர் கழல் பணிந்து துயில, அம்மன்னர் கனவில் நடராசர் தோன்றித் தம் பாதமலரை அவருக்குச் சூட்டினர். இவ்வாறு முடிசூட்டப்பட்ட கூற்றுவர், பல ஆண்டுகள் நாடாண்டு முத்தி எய்தினர்.

3) 12 ஐயடிகள் காடவர்கோன்

இப்பல்லவ மன்னர் தம் ஆட்சியைத் தம் புதல்வரிடம் ஒப்புவித்துவிட்டுச் சிவத்தலங்களில் வழிபாடாற்றியவர்; க்ஷேத்திர வெண்பாக்கள் இயற்றியவர்; தில்லைப் பெருமானிடம் பேரன்பு கொண்டவர்.

3) 13 கணம்புல்லர்

சிவன் கோயில்களில் வழிபாடு செய்துவருவதை இவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். சிவன் கோயில் புல்லறுத்து அதனை விற்று அதன் வருவாயைக்கொண்டு கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்கி வந்தார். இவ்வாறு செயலாற்றி வந்தபோது, தில்லையில் ஒரு நாள், தாம் அறுத்த புல் விற்பனையாகவில்லை. எண்ணெய்வாங்கஅவரிடம்பொருள்இல்லை,எனினும்தமதுசிகையை நெருப்பில் கொளுத்தி இவர் விளக்கெரித்தார். இவரது பேரன்பை விளக்குவார்போல்இவரைத் தில்லைப்பெருமான் ஆட்கொண்டார்.

3) 14 கோச்செங்கட் சோழன் நாயனார்

"எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட திருக்குலத்து வளச்சோழன்" எனத் திருமங்கையாழ்வாரால் போற்றப் பெற்றவரும் நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஒருவருமாகிய கோச்செங்கட்சோழன் வரலாறு தில்லைச் சிற்றம்பலவர் திருக்கோயிலுடன் இணைந்துள்ளது.

தொன்மைச் சோழர்குலத்தரசன் சுபதேவன் தம் துணைவி கமலவதியோடு திருத்தில்லைப் பெருமானை வழிபட்டபோது, மக்கட்பேறின்மையால் வாட்டமுற்ற மாதேவி மகப்பேறு வரம் வேண்ட, நெடுஞ்சடைக் கூத்தர் திருவுள்ளம் அருளினார் எனவும் அத்திருவருளினால் கமலவதி வயிற்றில் அணிமகவாய்க் கோச்செங்கணான் பிறந்தார் எனவும் பின்னர்ச் சிவத்தொண்டுகள் பல புரிந்து இறுதியில் திருத்தில்லை வேந்தர் கழலடி நிழல் சேர்ந்தார எனவும் சேக்கிழார் கூறுகிறார்.

3) 15 தேவார ஆசிரியர்கள்

1. திருஞானசம்பந்தர்

தேவார ஆசிரியர்களில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் தில்லையையெய்திச் சிற்றம்பலவர் திருக்கோயிலின் தெற்குக் கோபுரத்தின் வழியாகக் கோயினுள் புகுந்ததை "மாட மாளிகை ஓங்கி, நெருங்கு தில்லைசூழ் நெடுமதில் தென் திருவாயில் நேரணித்தாக" எனச் சேக்கிழார் எடுத்துக்காட்டுகிறார். பின்னர்ச் சிந்தை ஆர்வம் பெருகிடச்சென்னியின் மீதுகரங்களைக் கூப்பித்தொழுது அவர் ஆனந்தக் கூத்தினைத் தரிசித்துச் சிவானந்தத்தில் மூழ்கியதை

"அண்ணலார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யான அம்பல முந்தம்
உண்ணி றைந்தஞான த்தெழும் ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்களிப்பொடுங்கடற்காழிப்
புண்ணியக் கொழுந்த தனையவர் போற்றுவார்புனிதராடியபொற்பு

''உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
ஏத்திமுன் எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர்;
ஆடினர்; பொழிந்தனர்; விழிமாரி,''

எனக் சேக்கிழார் எடுத்தியம்புகிறார். (பெரியபுராணம் - திருஞான சம்பந்தர் புராணம் 160, 161)

2) திருநாவுக்கரசு நாயனார்

திருநாவுக்கரசு நாயனார் தில்லைத் திருநகர் எல்லையை அடைந்து ''நெடுமதில் சூழ் குடதிசை மணிவாயில் புறம் வந்துற்றார்'' எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இவர் மேற்குக் கோபுரத்தின் வழியாக இக்கோயிலினுள் நுழைந்து தில்லைச் சிற்றம்பலவரைக் கண்டு பேரானந்தத்தில் ஆழ்ந்ததை

''நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி
நிறைஅம் பலம்நினை வுறநேரே,
கூடும் படிவரும் அன்பால் இன்புறு
குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலுந் தேவரும்
முதலாம் யோனிகள் தெளிவொன்றா
ஆடுங்கழல்புரி அமுதத்திருநடம்
ஆராவகைதொழு தார்கின்றார்''

''கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங்களும் உடன் உருகும்
பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்;
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்''

எனச் சேக்கிழார் இயம்புகின்றார். (பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் 166, 167

3) சுந்தரமூர்த்திசுவாமிகள்

சுந்தரமூர்த்தி நாயனார் தில்லையை அடைந்து இக்கோயிலுக்கு வடக்கு வாயில் வழியாக வந்ததைச் சேக்கிழார் ''தில்லை, ஊர் விளங்கு திருவாயில்கள் நான்கின உத்தர திசை வாயில்முன் எய்தி' எனக்குறிப்பிடுகிறார். திருக்கோபுரத்தை வணங்கித் திருப்பேரம்பலத்தை வலங்கொண்டு, பின்னர்ச் சிற்றம்பலத்தின் முன் அணுகித்திருக்களிற்றுப்படி அருகில் சென்று சிவபோகத்தில் அழுந்தியதை,

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும்
ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"

"தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்"

என்னும் பாடல்களில் சேக்கிழார் சிறப்பிக்கிறார். (பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம் 106, 107)

4) மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் தில்லைத் திருவீதிகளைக் கடந்து கிழக்குக் கோபுரத்தின் வழியாக அழகிய கனகசபையை நேரே நின்று கண்ணீர் மல்க வணங்கியதைத் திருவாதவூரடிகள் புராணம்

" பொன்னார்ர்பொது நின்றாடிய புனிதன்றனை முடிமேல்
அந்நாளடி வைக்கும்பர னாகும்படி கண்டார்
மன்னாவுயி ரன்னாய்மணி மன்றாசர ணென்றே
சொன்னார்பல காலன்பொடு தொழுதார் மிகவழுதார் "

" விண்டேயிரு கண்ணீர்விழ வீழ்ந்தின்னடி முடிமேற்
கொண்டேபி னெழுந்தன்பொடு குறையாவரு ள்நிறையா
வண்டேர்குழ லுமைபங்கனை வண்தில்லையு ள்இன்னே
கண்டேனென நற்பாடல் கருத்தார உரைத்தார் "

" குன்றாவருள் மூலந்திகழ் குறியாகிய சுடரும்
மன்றாகிய வெளியூடு மகிழ்ந்தாடிய வொளியும்
ஒன்றாகிய வநுபூதியில் உற்றார்செய லற்றார்
நின்றாரசை வில்லாஒரு நிலையோவிய மானார் "

எனக்கூறுகிறது.- கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணம் திருஅம்பலச் சருக்கம் 54, 55, 56)

இவ்வாறு இங்கு அவர் வழிபட்டு வந்த காலத்தில் இலங்கை மன்னர் தம் அவையோர் பலருடன் தம் ஊமைப் புதல்வியை அழைத்துக்கொண்டு சிதம்பரம் வந்து சேர்ந்தார். தங்களோடு வாதாடச் சைவச் செம்மல் ஒருவரை அனுப்புமாறு இலங்கையி

லிருந்து வந்தவர்கள் வலியுறுத்தினர். இறைவர் திருவுள்ளப் பாங்கிற்கேற்ப, மாணிக்கவாசகர் இலங்கையருடன் வாதாடினர். அவர்கள் விடுத்த வினாக்களுக்கு இலங்கை ஊமைப்பெண்ணே விடையளிக்குமாறு மாணிக்கவாசகா செய்தனர். இப்பெண் அளித்த விடைகள் திருவாசகத்திலுள்ள 'திருச்சாழல்' பதிகத்தில் உள்ளன. இதன்பின்னர் இலங்கை மன்னர் சைவத்தை மேற் கொண்டார். ஊமைப்பெண்ணும் பேசும் திறன் பெற்றாள்.

இவர் அருளிய திருவாசகப் பாடல்களில் பல தில்லைப் பெரு மானைப் போற்றியுள்ளன. இறைவரே மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல்களை எழுதி வைத்துவிட்டு மறைய, அடுத்த நாள் காலையில் தில்லை அம்பலத்துப் பீடத்தின் கீழ், அவை பொதிந்து வைக்கப் பட்டிருந்தது பின்னர்த் தெரியவந்தது, இது மட்டுமன்றிக் "கோவை பாடுக" என இறைவன்ஆணையிட, மாணிக்கவாசகர்திருக்கோவையார் பெருநூலையும் அருளினார்.

சைவ சமய ஆசிரியர்கள் நால்வரில் ஒவ்வொருவரும் நான்கு கோபுர வாயில்களுள் ஒவ்வொரு கோபுர வாயிலின் வழியே கோயி லினுள் வந்து வழிப்பட்டமைக்குக் காரணங்கள் கற்பிக்கப்பெறு கின்றன. நான்கு மார்க்கங்களில் ஒன்றாகிய சற்புத்திர மார்க் கத்தை மேற்கொண்ட குழந்தைப் பருவத்தினராகிய திருஞான சம்பந்தர் தெற்குக் கோபுர வாயில் வழியாக நேர்முகமாக வடக்கு நோக்கி வந்து தெற்கு நோக்கிய நடராசரின் தாண்டவத்தைத் தரி சனம் செய்தார், தாசமார்க்கம் மேற்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் பணியாளர் போன்று அடக்கமாக மேற்குக் கோபுரத்தின் வழியாக வலம் வந்து வழிபட்டார். சிவபெருமானிடம் நட்புரிமை கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானிடம் தாம் கொண் டிருந்த உரிமை முறையில், அவரது பின்புறத்திலிருந்து வடக்குக் கோபுர வாயில் வழியாக வந்தார். நாயகன் நாயகி முறையில் மாணிக்கவாசகர் சிவபெருமானை வழிபடும் முறையில் அம்மையின் இடப்பக்கமாகிய கிழக்குத் திசைக் கோபுர வாயில் வழியாகக் கோயிலினுள் வந்து சேர்ந்தார்.

3) 16 இராசராச சோழன் (கி. பி. 985 - 1013)

இம்மன்னர் ஆடவல்லானுக்கு அடிமையாயினர். தஞ்சநாட் டில் நிலமளக்கும் கோலினுக்குச் "சிற்றம்பலக்கோல்" எனவும், கோயில் மரக்காலுக்கு "ஆடவல்லான்" எனவும் பெயரிட்டான். அக்காலத்தில் மறைந்துபோன தேவாரப் பாக்கள் அனைத்தை யும் மீண்டும் உலகிற்கு அளிக்க விரும்பினார். இதற்காகச் சோழ நாட்டுத் திருநாரையூர்த் தலத்துப் பிள்ளையாராகிய பொல்லாப் பிள்ளையார் உதவினார் இவர் துளைக்கப்படாத கற்சிலைப் பிள்ளையார். ஆதலினால் இப்பெயரில் இவர் போற்றப்பெற்றார். இப்பிள்ளையாருக்குப் பூசை செய்யும் வாய்ப்புப் பெற்றவர் இளமைப் பருவத்தினராய் இருந்த நம்பியாண்டார் நம்பி. அப் பிள்ளையார் தம் முன் வைக்கப்பட்ட நிவேதனத்தை அவர் உண்மையாகவே உட்கொள்வார் என எண்ணி அவர் அதனை

அமுது செய்ய வேண்டும் என நம்பியாண்டார் நம்பி வேண்டினார். ஆனால், பிள்ளையாரோ அவ்வாறு செய்யவில்லை. இதனால் நம்பியாண்டார் வருத்தமுற்றுத் தமது தலையை ஒரு கல்லின்மீது மோதிக்கொள்ள முற்பட்டபோது, பிள்ளையார் அச்செயலைத் தடுத்து அந்நிவேதனத்தை உட்கொண்டார். இந்தஅரிய நிகழ்ச்சி நாடெங்கும் பரவிற்று.இராச இராச சோழ மன்னன் தேவாரத்தை தேடத் தொடங்கி இதில் வெற்றிகாண இயலாது நம்பி ஆண்டார் நம்பியை அணுகினான். நம்பியாண்டார் நம்பியும் பொல்லாப் பிள்ளையாருக்கு வழிபாடாற்றித் தேவாரப்பதிகங்கள் கிடைக்க அருள்புரியுமாறு வேண்டினர். தேவாரப் பதிகங்கள் தில்லைப் பொன்னம்பலத்தின்அருகேமூவர்திருக்கைமுத்திரையுடன்உள்ளன என்பதைப் பிள்ளையார் நம்பி யாண்டார் நம்பிக்குத் தெரிவித்தார். இதன்பின்னர், இராச இராச சோழனும்நம்பி யாண்டார் நம்பியும் தில்லையை அடைந்து தேவார ஆசிரியர் மூவருக்கும் விழாநடத்தி னர். அப்போது பொல்லாப் பிள்ளையாரால் குறிப்பிடப்பட்ட இடத்தில், கரையானால் அரிக்கப் பட்டவை நீங்கலாகச் சில பதி கங்களே கிடைத்தன. தேவாரம்காட்டியபிள்ளையார், 'திருமுறை காட்டிய பிள்ளையார், என்னும் பெயரில் நடராசர் கோயில்இரண் டாம் பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு அமர்ந்திருக்கின்றார்.

3) 17. சேந்தனார்

ஒன்பதாம் சைவத் திருமுறைக்குரிய திருவிசைப்பா, திருப்பல் லாண்டு ஆசியவற்றை அருளிய ஆசிரியர்களில்இரண்டாமவ ராகத் திகழ்கிறார் சேந்தனார். பட்டினத்தடிகளின் கணக்கரா யிருந்த காலத்தில் அவரது ஏவலால் அவரது நிதியை எல்லாரும் எடுத்துச் செல்லுமாறு நிதி அறையைத் திறந்துவிட்டார். அப் போது பட்டினத்தடிகள் உறவினரின் முறையீட்டின் பேரில், அக் காலத்துச் சோழ மன்னன் சேந்தனாரைச் சிறையிலிட்டான். பட்டினத்தடிகள் அருளினால் சேந்தனார் சிறையிலிருந்து விடு தலை பெற்றார். பின்னர்த்தம் குடும்பத்தினருடன் தில்லைக்குச் சென்று விறகு வெட்டி, அதிலிருந்து கிடைத்த தொகை கொண்டு நாள்தோறும் சிவனடியாருக்கு அமுதிட்டு வந்தார். இவரது பெருமையை வெளிப்படுத்தக் கூத்தபிரான் ஒரு நாள் சிவனடியா ராக இவர் இல்லத்திற்கு எழுந்தருளிச் சேந்தனார் அளித்த களி உணவை உட்கொண்டு அதன் மிகுதியைத் தம் திருமேனியில் காட்டிச் சென்றனர். மறுமுறையும் தில்லை நடராசப் பெருமான் சேந்தனார் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்டவேண்டும் என் னும் அருள் நோக்கில் ஓராண்டுமார்கழித் திருவாதிரைத்திருத்தேர் விழாவின்போது தேர் நிலத்தில் அழுந்துமாறு செய்தார். அப்போது அன்பர்கள் அனைவரும் காணச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடத் தேர் தானே அசைந்து ஓடி அதன் நிலையை அடைந்தது. இப்பல்லாண்டு சிவன் கோயில்களில் ஓதப்பெறுகிறது.

3) 18 திருவிசைப்பா ஆசிரியர்கள்

திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார் புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் தில்லைச் சிற்றம்பலத்தைப் போற்றி அருள் பாடல்கள் பல இயற்றியுள்ளனர். திருவிசைப்பா ஒன்பதாம் சைவத் திருமுறைக்குரியது.

3) 19 சேக்கிழார்

இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் பெரியபுராணம் இயற்றத் தில்லை நடராசரே சேக்கிழார் பெருமானுக்கு "உலகெலாம்" என்னும் அரியதொரு அடியெடுத்துக் கொடுத்தார் இந்த அடியைப் பெரிய புராணத்தில் முதலிலும், இடையியிலும், இறுதியிலும் சேக்கிழார் பயன்படுத்தியுள்ளார். இவை முறையே இருளைப் போக்கி, இகத்துக்கு இன்பமும் பரத்துக்குப் பேரின்பமும் நல்குகின்றன கூத்தபிரான் எடுத்துக்கொடுத்த "உலகெலாம்" என்னும் அடியைப் புராணத்து முதலிலும், நடுவிலும், இறுதியிலும் கொண்டுள்ள மூன்று பாக்களும் பெரிய புராணத்தின் உயிர்நாடிகளாகும்.1

இத்தகைய பெருமை வாய்ந்த பெரியபுராணம் இக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றப்பெற்ற பின்னர், சேக்கிழாரையும் பெரியபுராணத்தையும் சோழமன்னன் யானை மீதேற்றி, பின்னிருந்து தன் துணைக் கரத்தால் இணைக் கவுரி வீசி, நகர் வலம் செய்வித்துச் சைவம்வளர்த்தது கூத்தப்பிரான் திருக்கருணையாகும்.

3) 20 திருக்களிற்றுப்படியார்

சித்தாந்த சாத்திரங்களிலொன்றாகிய திருக்களிற்றுப்படியாரெனுஞ் சாத்திரம் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனரால் இயற்றப்பெற்றது. இதனை இவர் திருக்களிற்றுப் பஞ்சாட்சரப்படியின் மீது வைக்க, அதுவே சிவபெருமானடி சேர வழி காட்டும் என்பது போல, அதனை அப்படியிருக்கத் களிறு, கை நிமிர்ந்தெடுத்து நடேசரது திருவடியில் சேர்ப்பித்த நிகழ்ச்சி சிற்றம்பலவர் திருக்கோயில் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

1\. (1) "உலகெலாம் உணர்ந்து ஓதற்க ரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்"

(2) "சோதி முத்தின் சிவிகை சூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்ற நின்(று)
ஆதி யார்அருளா தலின் அஞ்செழுந்(து)
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்"

(3) " என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும்ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம் "

3) 21 உமாபதி சிவாசாரியர்

இவர் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர். இவர் மறைஞான சம்பந்தரால் ஆட்கொள்ளப் பெற்றவர். சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழியைக் கடந்து நின்றவர். ஒருநாள் தம் மாணவராகிய உமாபதி சிவாசாரியரது பக்குவ நிலையை அறிதற்பொருட்டு மறைஞான சம்பந்தர், கைக்கோளர் தெருவிற் சென்று பாவில் செலுத்தப்பட்டிருந்த கூழின் மிச்சத்தை உட்கொண்டார். அப்போது அவர் புறங்கையில் ஒழுகிய மிச்சத்தை உமாபதிசிவம் பருகினார். உடனே மறைஞான சம்பந்தர் அவருக்கு ஞானோபதேசம் செய்தார். இவ்வாறு ஞானம் பெற்றதன் சிறப்பை உணராது தில்லைவாழ் அந்தணர்கள் இவரைக் குலமுறை பிறழ்ந்தவரெனக் கருதி, இகழ்ந்தனர். இதன்பின்னர் இவர் சிதம்பரத்திற்குக் கிழக்கில் உள்ள கொற்றவன் குடிக்குச் சென்று அங்கு ஒரு மடம் நிறுவி அடியார் சூழ வாழ்ந்து வந்தார்.

உமாபதி சிவாசாரியர் தில்லை நடராசருக்குப் பூசை செய்வதற்குரிய நாள் வந்தது. அவர் சிற்சபையை எய்தாதவாறு அவரை மற்றவர்கள் தடுத்துவிட்டனர். இந் நிலையில் அவர் தமது மடத்திற்குச் சென்று தளர்வுற்றிருந்தார் தில்லைவாழ் அந்தணர் சிலர் தில்லைச் சிற்றம்பலவர் திருமன்றிற்குச் சென்று பார்க்கும்போது அழகிய சிற்றம்பலவர் திருவடிவம் காணப்படவில்லை. தில்லைவாழ் அந்தணர்கள் திகைப்புற்றனர். அப்போது வானிலிருந்து "நம்மைப் பூசை செய்யத் தகுதி வாய்ந்த உமாபதியிடம் நாம் அமர்ந்தோம்" என ஓர் ஒலி எழுந்தது. அதன்பின்னர் தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதி சிவாசாரியரை அழைத்துவந்து அவரைக் கொண்டு பூசை செய்வித்தனர்.

பெற்றான் சாம்பான் உமாபதி சிவாசாரியர் மடத்திற்கு விறகு வழங்கும் பணியைச்செய்துவந்தவர். பக்குவம் எய்திய நிலையில் அவர் இருந்தமையால், சிவபெருமான் முதியவர் வடிவில் தோன்றி ஒருநாள், அவரிடம் ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தார். அச்சீட்டைப் பெற்றான் சாம்பான் சிவாசாரியரிடம் ஒப்புவித்தார். அச்சீட்டில்

" அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப் - படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை "

என்னும் திருப்பாட்டிருக்கக் கண்டு உமாபதி சிவாசாரியர் பெற்றான் சாம்பானுக்கு ஞான தீட்சை செய்தார். இதன் பயனாகப் பெற்றான் சாம்பான் முக்தியடைந்தார். பெற்றான்சாம்பான்

மறைந்ததற்குக் காரணம் உமாபதி சிவாசாரியர் செயலே எனப் பெற்றான்சாம்பானின் உறவினர் முறையிட்டனர். பெற்றான் சாம்பான் பக்குவமெய்தியதால் முத்தி பெற்றார் என்பதை மெய்ப் பிக்க, சிவபெருமானது திருமஞ்சன நீராலே வளர்ந்ததும் சிவலிங்கக் கோமுகையின் அருகிலிருந்ததுமாகிய ஒரு முள்ளிச் செடியின் மீது உமாபதி சிவாசாரியர் தமது அருட்பாவையைச் செலுத்தினார். அது ஒளிமயமாகி ஒரு பிழம்பாய் மேலெழுந்து மறைந்தது. இதன் பின்னர் உமாபதி சிவாசாரியார் மகிமை நன்கு புலப்பட்டது.

பின்னர் ஒருநாள் சிதம்பரத்துத் திருவிழாவின் கொடியேற்ற ஆங்கிருந்த அந்தணர்கள் முயன்றபோது கொடி'எழவில்லை. அப்போது ''உமாபதி வருவார் எனில் கொடி ஏறும்'' என ஒரு திருவாக்கு வானில் எழுந்தது. உடனே அந்தணர்பலர் உமாபதி சிவாசாரியரிடம் வேண்டினர். அவரும் அவ்வாறே தில்லைக்கு வந்து கொடிக்கவி நூலின் முதற்பாடலைப் பாடி முடித்ததும் கொடி தானாக ஏறிற்று.

இவர் சைவ சித்தாந்தத்து 14 சாத்திரங்களுள் சிவப்பிரகாசம், திரு வருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், ஆகிய சாத்திரங்களையும், திருத்தொண்டர் புராண சாரம், திரு முறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிக் கோவை ஆகிய நூல்களையும் இயற்றியவர்.

3) 22. இராமலிங்க சுவாமிகள்

சிதம்பரத்திற்கு 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மருதூரில் இராமலிங்க சுவாமிகள் தோன்றினார். இவர் ஓராண்டுப் பருவம் எய்தியபோது இவரை இவர் பெற்றோர்கள் தில்லை நடராசப் பெருமான் கோயிலுக்கு அழைத்துச்சென்றார்கள். அப்போது தீட்சி தர்கள் சிதம்பர இரகசியத் திரையை விலக்கி இவருக்குச் சிதம்பர தரிசனம் செய்வித்தார்கள். இவ்வாறு இராமலிங்க சுவாமிகள் சிறுவயதிலே தாம் சிதம்பரத்தில் கண்ட அனுபவப்பொருளையே, தமது நாற்பத்தொன்பதாம் வயதில் உத்தர ஞான சிதம்பரமாகிய வடலூரில் சத்திய ஞான சபையாக நிறுவினார்.

இராமலிங்க சுவாமிகள் தாம் அருளிய திருவருட்பாவின் பல பாடல்களில் நடராசப் பெருமானைப் போற்றியுள்ளார். சிதம்பரம் என்பதையே தமது பெயருடன் சேர்த்துக்கொண்டு ''சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்'' என்று கையெழுத்திட்டு வந்தார். நடராசப் பெருமானைச் சோதி வடிவில் அவர் கண்டு இன்புற்றுத் திளைத்தார்.

3) 23. ஆறுமுகநாவலர்

இலங்கையிலிருந்து சிதம்பரம் அடைந்து இவர் இங்குச் சைவப்பணி யும் தமிழ்ப்பணியும் மேற்கொண்டார். தில்லை நடராசர் வழிபாட்

டில் திளைத்தவர். சிதம்பரம் மகாத்மியம் என்னும் அரிய நூலை இயற்றியுள்ளனர்.

3) 24. முத்துத்தாண்டவர்

தில்லைத் தலத்தில் கூத்தப் பெருமான் திருவருள் பாலிக்கப் பெற்றவர்களுள் முத்துத் தாண்டவரும் ஒருவர். இவர் சீர்காழியில் வாழ்ந்து வந்தார். வறுமையாலும் நோயாலும் துன்புற்றிருந்தார். ஒருநாள் இரவு உணவின்றிச் சீர்காழி தோணியப்பர் கோயிலில் உறங்கி விட்டார். அந்நள்ளிரவில் தோணியப்பர் அம்பிகை ஆகியோர் திருவருளால் பாலன்னம் கிடைக்கப்பெற்றார். அதே சமயத்தில் '' நீ தில்லைக்குச் சென்று அங்கு இறைவனைப் பாடுவாயாக, உன் துன்பங்களெல்லாம் நீங்கும்'' என்னும் திருவாக்கு எழுந்தது. அவ்வாக்குக்கேற்ப, அவர் காலம் தாழ்த்தாது தில்லைக்குச் சென்று சிவகங்கையில் நீராடித் திருமூலநாதரை வழிபட்டுப் பின்னர் நடராசர் மீது பாட எண்ணினார். அப்போது அங்கு வழிபாடாற்ற வந்திருந்த ஒருவர் ''பூலோகக் கைலாசம்'' என்று உரக்கக் கூறினார். இத்தொடர் முத்துத்தாண்டவர் செவியில் விழுந்தது. உடனே முத்துத் தாண்டவர் தில்லைப்பெருமான் திருவருளாலே ''பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லாமல் புவனத்தில் வேறுமுண்டோ'' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். அப்போது இவரது உணவுச் செலவுக்காகப் படிக்காசு திருச்சந்நிதியில் இவருக்குக் கிடைத்தது. இவ்வாறு நடராசரைப் பாடியே இவர் முத்தியடைந்தார். இவருடைய பாட்டுகள் முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. இங்கு வழிபாடாற்றி இத்தலத்தைப் பற்றி அருள் நூல்கள் இயற்றிய மற்ற ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் இந்நூலின் இறுதியில் கொடுக்கப் பெற்றுள்ளன.

4) தலவிருட்சம்

ஆதியில் இத்தலத்தில் தில்லை மரங்கள் அடர்த்தியாக இருந்தமையால் இத்தலம் தில்லைவனம் எனவும் தில்லை எனவும் விளங்கி வந்தது. சிற்றம்பலவனாரை, மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில் 'தில்லைச்சிற்றம்பலவன்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்' எனத் தொடங்குகிறது. அவர் அருளிய திருச்சாழல் பாடல் ஒன்று. சேக்கிழார் இத்தலத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுகிறார். இக்கோயிலில்பொறிக்கப்பெற்றுள்ளகல்வெட்டுகள்பலஇத்தலத்தை தில்லை என்று குறிப்பிடுகின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டோ, வேறு குறிப்பு யாதாவதைக் கொண்டோ இக்கோயிலின் தலவிருட்சம் தில்லைமரம் எனக் கருதப்பெற்று வந்தது. இதனைக் குறிப்பிடும் முறையில், இரண்டாம் பிரகாரத்திலுள்ள திருமூலநாதர் கோயிலுக்குப் பின்புறத்தில் ஒரு கல்லமைப்பு உள்ளது.

ஆனால்இந்தஅமைப்புதில்லைமரத்தைக் குறிப்பதன்று. இக்கோயில் தலமரம் ஆலமரம் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும். இவர்கள் இதற்குக் காட்டும் ஆதாரம் ஆதியில் வியாக்கிரபாதர் வழிபட்ட சிவலிங்கம் ஓர் ஆலமரத்தின் கீழ் இருந்தது என்பதாகும். இதைப் பற்றி உமாபதி சிவாசாரியர் தாம் இயற்றிய கோயில் புராணத்தில் தெரிவித்துள்ளார். வியாக்கிரபாதர் பூசித்த சிவலிங்கம் ஆலமரத்தின் கீழ் இருந்தது, இதன் பின்னரே அவர் இச் சிவலிங்கத்திற்கு மேற்கே தில்லைச் செடிகளின் நிழலில் மற்றொரு சிவலிங்கம் நிறுவி வழிபட்டார். இவ்வாறு இவர் வழிபட்ட இடம் தில்லைச் சிற்றம்பலவர் கோயிலுக்கு மேற்கில் தற்போதுள்ள இளமையாக்கினார் கோயில் பகுதியாகும். இவ்வாதாரத்தைக் கொண்டு இக்கோயிலின் தலவிருட்சம் ஆலமரம் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

5) தில்லைச் சிற்றம்பலவர் கோயில் மூர்த்தங்கள்

திருக்கோயிலில் வழிபட வருவோர்கள் முதலில் கோபுரத்தை வணங்கிக் கோயிலின் உட்பிரகாரங்களில் வலம் வந்து, அப்பிர காரங்களில் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திகளை வழிபட்டு இறுதியில் மூலத்தானத்து மூர்த்திக்கு வழிபாடு இயற்றுவதுமுறை யாகும்.

இம்முறையில் தில்லைச் சிற்றம்பலவர் கோயிலின் தெற்குக் கோபுர வாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில் யாம் வழிபடும் மூர்த்தங்கள் :

5) 1. தெற்குக் கோபுர வெளிப்புற மூர்த்தங்கள்

தெற்குக்கோபுர வெளிப்புற வாயிலின் இருபுறங்களிலும் வலப்புறம் விநாயகர் திருவுருவமும் இடப்புறம் சுப்பிரமணியர் திருவுருவமும் நிலைப்படுத்தப் பெற்றுள்ளன.

விநாயகர் திருவுருவத்திற்கு மேற்குப் புறத்தில் அம்மன் சிறு சந்நிதியும் சுப்பிரமணியர் திருவுருவத்திற்குக்கிழக்கில் சிவலிங்கச் சந்நிதியும் உள்ளன. இக்கோபுர நுழைவாயிலுக்கு எதிரில் இரு புறங்களிலும் வடக்கு நோக்கியவாறு இரு நந்தி தேவர் திருவுரு வங்கள் உள்ளன.

5) 2. 1. மூன்றாம் பிராகாரத்துத் தெற்குப்பகுதி மூர்த் தங்கள்; கோட்ட விநாயகர், தட்சிணாமூர்த்தி

தெற்குக் கோபுர வாயிலின் வழியாகத் தெற்குப் பிரகாரத்தை அடையும்போது இங்குக் கோட்ட விநாயகர் - கோட்டத் தட்சிணா மூர்த்தி ஆகியோர் திருவுருவங்கள் தெற்கு நோக்கியவாறுள்ள சந்நிதியில் காண்கிறோம்.

5) 2. 2. நந்திதேவர்

கோட்ட விநாயகர் - கோட்ட தட்சிணாமூர்த்தி கோயிலுக்குப் பின்புறம் நந்திதேவர் திருவுருவம் 3மீட்டர் உயரத்தில் நிலை படுத்தப்பட்டுள்ளது.

5) 2. 3. சுப்பிரமணியர்

கோட்ட விநாயகர் - கோட்டத் தட்சிணாமூர்த்தி கோயிலுக்குத் தெற்கில் சுப்பிரமணியர் கோயில் வடக்கு நோக்கியவாறுள்ளது.

5) 2. 4. முக்குறுணி விநாயகர்

கோட்ட விநாயகர்-கோட்ட தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கு மேற்கில், கிழக்கு நோக்கியவாறு முக்குறுணி விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. இச்சந்நிதி 21 மீட்டர் நீளமும், 12 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இச்சந்நிதியில் 25 தூண்கள் உள்ளன. தில்லைக்குத் தெற்குக் கோபுரமே சிறந்த பெருவாயில். அவ்வழியாகப் பெரும்பான்மையினர் நடராசப்பெருமானை வழிபடச் செல்கிறார்கள். ஆதலால் முகப்பிலிருக்கும் பிள்ளையார் முகக் கட்டண விநாயகர் எனக் குறிப்பிடப்படுகிறார். முகக்கட்டண விநாயகர் என்னும் பெயர் முக்குறுணி விநாயகர் எனத் திரிபு எய்தியுள்ளது.

மூன்றாம் பிராகாரத்து மேற்குபகுதி மூர்த்தங்கள்

5) 2. 5. கற்பக விநாயகர்

முக்குறுணி விநாயகரை வழிபட்டு மேற்கு நோக்கிச் செல்லும் போது மேற்குக் கோபுரத்தை அடைகிறோம். இக்கோபுரத்தின் வெளிப்பகுதியில் கற்பக விநாயகர் சந்நிதி உள்ளது. இவ்விநாயகர் இக்கோயிலின் தலவிநாயகராகும். இவர் நர்த்தனர் கோலத்தில் உள்ளார்.

5) 2. 6. முத்துக்குமாரசுவாமி

மேற்குக் கோபுரத்தின் கிழக்குப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு முத்துகுமாரசுவாமி சந்நிதி இருக்கின்றது. முத்துக்குமாரசுவாமி திருவுருவம் 12 கைகளுடனும், வள்ளி தெய்வயானையுடனும், மயில மீது அமர்ந்த நிலையிலும் இருக்கின்றது.

5) 2. 7. மீனாட்சி சுந்தரேசுவரர்

முத்துக்குமாரசுவாமி சந்நிதிக்கு வடக்கில் மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

5) 2. 8. திருமூல விநாயகர்

மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதிக்கு வடக்கில் ஒற்றைக்கால் மண்டப விநாயகர் எனப்படுகிற திருமூலவிநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

5) 2. 9. அகிலாண்டேசுவரி

திருமூல விநாயகர் சந்நிதிக்கு வடக்கில் அகிலாண்டேசுவரி சந்நிதியைக் காணலாம். திருவானைக்காவில் எழுந்தருளிய அகிலாண்டேசுவரியை இந்தச் சந்நிதி நினைவுபடுத்துகிறது.

5) 2. 10. துர்க்கையம்மன்

அகிலாண்டேசுவரி சந்நிதியையடுத்துத் துர்க்கையம்மன் சந்நிதி உள்ளது. இச்சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது.

சிவன் கோயில்களில் கருவறை வடக்குச் சுவரில் துர்க்கையின் சந்நிதி அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனால் திருமூலட்டானேசுவரர் கொயிலைப் பொறுத்தவரையில் கருவறை வடக்குச் சுவரில் துர்க்கையின் சந்நிதி அமைக்கப்படவில்லை: ஆனால், திருமூலநாதர் கோயில் உட்பட நடராசர் கோயில் அமைப்பு முழுவதையும் கருத்தில் கொண்டால் இந்த அமைப்புக்கு வடக்கில் துர்க்கையம்மன் கோயில் இருப்பது விளங்குகிறது.

துர்க்கையம்மன் கோயிலின் முன் மண்டபம் 1941 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

5) 2. 11. பாண்டிநாயகர்

துர்க்கையம்மன் கோயிலுக்கு வடக்கே பாண்டிய நாயகர் கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இங்குச் சண்முகப் பெருமான் மயில் வாகனத்தின் மீது ஆறு முகங்களுடனும், பன்னிரண்டு கைகளுடனும் வள்ளி தெய்வயானையோடும் காட்சி அளிக்கிறார். சண்முகர் கோயிலின் முன் மயிலுருவம், பலிபீடம், கொடிமரம் ஆகியவை காணப்படுகின்றன. இக்கோயிலின் முன்புற மண்டபத்தில் இடும்பன், கடம்பன்ஆகியோர்திருவுருவங்கள் இருக்கின்றன.

5) 2. 12. சண்முகர்

பாண்டியநாயகர் சந்நிதிக்கு வடகிழக்கில் சண்முகர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு காணப்படுகிறது.

5) 3. சிவகாமி அம்மன்

5) 3. 1. சித்திரகுப்தர்

இக் கோயிலில் நுழைந்தவுடன் இடப்புறம் சித்திரகுப்தர் சந்நிதியைக் காணலாம். சித்திரகுப்தர் தமது இடக்கையில் ஏடும், வலக்கையில் ஆணியும் வைத்துள்ளார். ஒவ்வொருவர் புரிந்த நன்மைகளையும், தீமைகளையும் எழுதிவைத்து வருகிறார் என்பதை இத்திருவுருவம் காட்டுகிறது.

சிதம்பர புராணத்தில் துன்மதன் என்போன் வரலாறு சொல்லப்படுகிறது. இவன் தருமங்கள் புரிந்ததுண்டா என யமன் சித்திரகுப்தரிடம் வினவ, சித்திரகுப்தர் தமது கணக்கைப் பார்த்தபின் துன்மதன் ஒரு புண்ணியமும் செய்யவில்லைஎனவிடை பகர்ந்தான். இதன் நினைவாக இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.

5) 3. 2. நடுக்கம் தீர்த்த விநாயகர்

சித்திரகுப்தர் சந்நிதிக்கும் தென்மேற்குக் கோடியில்க் கிழக்கு நோக்கியவாறு நடுக்கந் தீர்த்த விநாயகர் சந்நிதிஉள்ளது. வழிபடும் அன்பர்கள் துன்பச் சூழ்நிலையில் நடுக்குறும்போது அவர்கள் நடுக்கத்தைத் தீர்ப்பவர் இவ்விநாயகர்.

5) 3. 3. சுப்பிரமணியர்

நடுக்கம் தீர்த்த விநாயகர் சந்நிதிக்கு வடக்கில் சுப்ரமணியர் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார்.

5) 3. 4. ஆதிசங்கரர்

சுப்பிரமணியர் சந்நிதியை அடுத்து ஆதிசங்கரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு 9.85 மீட்டர் நீளத்திலும், 6.15 மீட்டர் அகலத்திலும், 7 அடி உயரத்திலும், 9 படிகளுடனும் இருக்கின்றது. இங்கே சிதம்பரச்சக்கரம இருக்கின்றது.

5) 3. 5. அம்மன் திருவுருவங்கள்

சிவகாமிசுந்தரி கருவறைக்குத் தெற்கில் மாகேந்திரி, வராகி, வைணவி, கௌமாரி, மாகேசுவரி, பிராமீ, சாமுண்டி ஆகியோரின் திருவுருவுங்கள் வடக்கு நோக்கியவாறுள்ளன. சிவகாமி சுந்தரி கருவறைக்குத்தென்மேற்கில் விநாயகர் திருவுருவம் நிலைபடுத்தப்பட்டுள்ளது.

5 3. 6. சிவகாமி சுந்தரி அம்மன்

சிவகாமி சுந்தரி அருள்புரியும் திருக்கண்களோடு எழில்மிகு திருக்கோலத்தில் கிழக்கு முகமாக நின்ற கோலத்தில் திருக்காட்சி தருகிறார். இரு திருவடிகளும் உடுக்கைக்குஒப் புவுள்ள சிற்றிடையும், அந்த இடையில் விளங்கும் பட்டாடையும், மேலாபரணங்களும் நவரத்தினமயமாகிய கச்சும், பொன்னுலான நகைகளும் நீலோற்பல மலர்கள் போன்ற இருகண்களும், செவ்வாம்பல் மலருக்கு இணையாகிய பவள வாயும், வெண்ணிலவு பொலியும் புன்முறுவலும், பச்சை மூங்கிலுக்கு இணையாகிய தோள்களும், எக்காலத்திலும் நீங்காத திருமங்கல நாணும் செங்கழுநீர்மலர் ஏந்திய கையும் கொண்ட திருவழகுடன் விளங்குகிறார்.

5 3. 7. சண்டிகேசுவரி

கருவறையில் வடக்கு வெளிப்பகுதியில் சண்டிகேசுவரி சந்நிதி வடக்கு நோக்கியவாறு காணப்படுகிறது

மூன்றாம் பிராகாரத்து வடக்குப்பகுதி மூர்த்தங்கள்

5) 4. 1. நவலிங்கங்கள் கோயில்

இக்கோயில் மூன்றாம் பிராகாரத்தின் மேற்புறத்தில் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. சைவ நாயன்மார்களுள் ஒன்பது தொகை அடியார்களை ஒன்பது சிவலிங்கங்களின் வடிவு களில் வணங்குவதற்குரிய தலம் இது எனவும் இச்சிவலிங்கங்கங்கள் நவகிரகங்களால் வழிபட்டவை எனவும் கூறப்படுகிறது. ஆனால் இக்கருத்துகள் பொருத்தமாகத் தோன்றவில்லை.

சிவபெருமானுக்கு அருவம், அருவுருவம், உருவம் என மூவகை வடிவங்களைச் சைவ நூல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள் 1. சிவம், 2. சத்தி, 3. நாதம், 4. விந்து ஆகிய நான்கும் அருவம், 5. சதாசிவம் அருவுருவம், 6 மகேசன், 7. உருத்திரன் 8. திருமால், 9. பிரமதேவன் ஆகிய நால்வர் வடிவங்கள் உருவத் திருமேனிகள். இவற்றில் சிவபெருமான் எழுந்தருளி உயிர்களுக்குப் பாச நீக்கம் செய்து பேரின்பம் அருள்கிறார். சிவபெருமானுக்கு அருவம், அருவுருவம் உருவம் ஆகிய வடிவங்கள் உண்மையில் இல்லை. எனினும், அவற்றை உடையவர்போல் அவர் நடிப்பதால், அவரது நடனம் நவபேத நடனம் எனப்படும். இதனைத் திருமூலர்,

> ''சிவமொடு சக்தி திகழ்நாதம் விந்து
> தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
> பவமுறு மாலும் பதுமத் தோன் ஈறா
> நவமறை யாகி நடிப்பவன் தானே''

என்னும் திருப்பாடலில் திருமூலர் உணர்த்தியருள்கிறார். (திருமந்திரம்-1807; ஏழாம் தந்திரம்; திருவருள் வைப்புப்பாடல்-16 மேலும்,

"சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழுமீசன்
உவந் தருள் உருத்திரன் தான் மாலயன் ஒன்றின் ஒன்றாய்
பவந் தருமருவ நாலிங்குருவ நாலுபய மொன்றாம்
நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனென்பர்"

(சிவஞான சித்தியார்-164; 2-ஆம் சூத்திரம்

இவ்வொன்பது திருமேனிகளைச் சிவலிங்க வடிவில் வழிபட நவலிங்கக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்படதக்கது.

மூன்றாம் பிராகாரத்து வடக்குப்பகுதித் திருவுருவங்கள்

5) 4. 2. சிவகங்கைத் தீர்த்தக் கரை விநாயகர் சந்நிதிகள்

சிவகங்கைத் தீரத்தத்தில் நான்கு முனைகளிலும் விநாயகர் சந்நிதிகள் நான்கும், வடக்குப் பகுதியில் இறங்கு படிகளின் இரு புறம் விநாயகர் சந்நிதிகள் இரண்டும் மேற்குப் பகுதியில் மற்றொரு விநாயகர் சந்நிதியுமாக விநாயகர் சந்நிதிகள் ஏழு உள்ளன.

5) 4. 3. இரண்டு சிவலிங்கங்கள்

சிவகங்கைத் தீர்த்தக் கரையில் கிழக்குப் பகுதியில் இரண்டு சிவலிங்கங்கள் ஒருங்கே ஒரே சந்நிதியில் நிலைபடுத்தப் பெற்றுள்ளன.

மூன்றாம் பிராகாரத்துக் கிழக்குப் பகுதி மூர்த்தங்கள்

5) 5. 1. நந்திதேவர்

சிவகங்கைத் தீர்த்தக்குளத்திற்குத் தென்கிழக்கில் நந்தி தேவர் திருவுருவம் ஒரு சந்நிதியில் இரண்டு மீட்டர் உயரத்தில் மேற்கு நோக்கியவாறுள்ளது.

5) 5. 2. விநாயகர்

நந்தி தேவர் சந்நிதிக்குக் கிழக்கே கிழக்குக் கோபுர வாயிலின் முன் வலப்புறம் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது.

5) 5. 3. சுப்பிரமணியர்

விநாயகர் சந்நிதிக்கு வடக்கில் சுப்பிரமணியர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் நின்ற கோலத்தில் இங்குக்காட்சியளிக்கிறார்,

இரண்டாம் பிராகாரத்து மூர்த்தங்கள் (தெற்கு)

5) 6. 1. ஊர்த்தவத் தாண்டவர்

இரண்டாம் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் நிருத்த சபை, கிழக்கு நோக்கியுள்ளது. இங்குச்சிவபெருமான்ஊர்த்தவத் தாண்டவமூர்த்தியாய்க் கிழக்கு நோக்கியவாறுள்ளார்.

5) 6. 2. கால சம்மாரமூர்த்தி

ஊர்த்தவத்தாண்டவர் சந்நிதிக்குச் செல்லும் படி அமைப்பின் முன்புறம் காலசம்மாரமூர்த்தி மேற்கு நோக்கியவாறு அமர்ந்திருக்கிறார்.

5) 6. 3. விநாயகர், சுப்பிரமணியர்

ஊர்த்தவத் தாண்டவ மூர்த்தி சந்நிதியின் முன் வலப்புறம் விநாயகர் திருவுருவமும், இடப்புறம் சுப்பிரமணியர் திருவுருவமும் இருக்கின்றன.

5) 6. 4. சரபேசுவரர்

ஊர்த்தவத் தாண்டவ மூர்த்தி சந்நிதியின் தெற்கில் சரபேசுவரர் திருவுருவம் வடக்கு நோக்கியவாறு காணப் படுகின்றது.

5) 6. 5. தண்டாயுதபாணி

இரண்டாம் பிராகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் தண்டா யுதபாணி திருவுருவம் மேற்கு நோக்கியவாறு நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

இரண்டாம் பிராகாரத்தின் மேற்கு பகுதி மூர்த்தங்கள்

5) 7. 1. தாயுமானவர்

இரண்டாம் பிராகாரத்தின் மேற்கு வாயிலுக்கு நேராகத் தாயுமானவர் சுவாமி இலிங்க வடிவில் காட்சி அளிக்கிறார்.

5) 7. 2. திருமுறைகாட்டிய விநாயகர்

தாயுமானசுவாமி திருவுருவத்தை அடுத்துத் திருமுறை காட்டிய விநாயகர் மேற்கு முகமாக உள்ளார்.

5) 7. 3. மெய்கண்டார் அருணந்தி சிவம், மறைஞான சிவம், உமாபதிசிவம்

திருமுறை காட்டிய விநாயகர் சந்நிதிக்கு வடமேற்கில் சைவ சந்தான ஆசிரியர்களாகிய மெய்கண்டார், அருணந்தி சிவம், மறைஞான சிவம், உமாபதி சிவம் ஆகியோரின் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியவாறு நிலைபடுத்தப்பட்டுள்ளன.

5) 7. 4. நால்வர்

சந்தான ஆசிரியர்களை அடுத்துச் சைவசமய ஆசிரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியவாறு நிலை படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் பிராகாரத்து வடக்குப்பகுதி மூர்த்தங்கள்

5) 8. 1. துண்டி விநாயகர் முதலியோர் திருவுருவங்கள்

துண்டி விநாயகர், விசுவநாதர், விநாயகர், சிவலிங்கங்கள், கற்பக விருட்சம், வைத்தியநாதர், தையல்நாயகி, காலவயிரவர் ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியுள்ளன.

5) 8. 2. சண்டிகேசுவரர்

காலவயிரவரை அடுத்துச் சண்டேசுவரர் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இதனருகில் சண்டேசுவரர் மற்றொருவர் திருவுருவமும் தெற்கு நோக்கியவாறுள்ளது.

5) 8. 3. அறுபத்துமூவர்

மேலே குறிப்பிடப் பெற்றுள்ள சண்டிகேசுவரர் திருவுருவத்தையடுத்து அறுபத்துமூவர் திருவுருவங்கள் தெற்கு நோக்கியவாறு நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

5) 8. 4. அர்த்தநாரீசுவரர் முதலியோர்

அறுபத்துமூவர் திருவுருவங்களின் அருகில் அர்த்தநாரீசுவரர், விநாயகர், மகாலிங்கம், அம்மன், துவாபாலகர் ஆகியோரின் திருவுருவங்கள் தெற்கு நோக்கியவாறு காணப்படுகின்றன.

5) 8. 5 நம்பியாண்டார் நம்பி; சேக்கிழார்

துவாரபாலகர் திருவுருவத்தையடுத்து நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் புராணத்தை இயற்றியருளிய சேக்கிழார் ஆகியோரின் திருவங்களில் நம்பியாண்டார் நம்பி திருவுருவம் தெற்கு நோக்கியும், சேக்கிழாரின் திருவுருவம் மேற்கு நோக்கியும் உள்ளன.

''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்'' என்ச் சிவபெருமான் அடியெடுத்துத்தரச் சுந்தரர் அருளிய திருத்தொண் டத் தொகையைச் சுருக்கமாக வகுத்துக் கூறும் வகையில் நம்பி யாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றினார். இதனை நேர்முக ஆதாரமாகக் கொண்டு சேக்கிழார் திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றினார். இவ்வுண்மைகளைத் தெரிவிக்கும் வகையில், நம்பியாண்டார் நம்பிகள் திருவுருமும், சேக்கிழார் திருவுருவமும் அடுத்தடுத்து நிலைபடுத்தப்பெற்றுள்ளன.

5) 9. இரண்டாம் பிராகாரத்துக் கிழக்குப்பகுதி மூர்த்தங்கள்

5) 9. 1. அருணாசலேசுவரர்

சேக்கிழார் திருவுருவத்திற்குத் தெற்கில் அருணாசலேசுவரர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதியில் அருணாலே சுவரர் சிவலிங்க வடிவமாகக் காட்சி அருள்கிறார். இவரது திருவுருவத்தின் முன் சிறிய நந்தி உருவம் உள்ளது.

5) 9. 2. திருமூலநாதர்

அருணாசலேசுவரர் சந்நிதிக்கு நேரெதிரில் திருமூலநாதர் கோயில் சந்நிதி கிழக்கு முகமாக இருக்கிறது. திருமூல நாதர் ஆதிமூலமாய், சுயம்புமூர்த்தியாகச் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறையின் முன் இருவர் துவாரபாலகர் திருவுருவங்கள் இருக்கின்றன. அர்த்தசாமப் பூசை முடிந்தவுடன் எல்லாக்கோயில்களிலுமுள்ள சிவகலைகள் அனைத்தும் இங்குள்ள சிவலிங்கத்தில் ஒடுங்குவதால் இம் மூர்த்திக்கு திருமூலட்டான நாதர் என்னும் பெயர் அமைந்தது. மூலவருக்கு ஆற்றப்பெறும் பூசைகளெல்லாம் இங்குள்ள உற்சவ மூர்த்திக்கும் உரியன.

5) 9. 3. வியாக்கிரபாதரும், விநாயகரும் மற்றும் பதஞ்சலியும் சுப்பிரமணியரும்

திருமூலநாதர் கருவறையின் முன் வலப்புறம் வியாக்கிரபாதர் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறு உள்ளது. அதற்கருகில் விநாயகர் திருவுருவம் உள்ளது. இடப்புறத்தில் பதஞ்சலி, சுப்பிரமணியர் ஆகியோரின் திருவுருவங்கள் கிழக்கு நோக்கிய வாறு காணப்படுகின்றன.

5) 9. 4. சண்டேசுவரர்

சண்டேசுவரர் சந்நிதி திருமூலநாதர் கருவறையின் வடக்கு வெளிப்பகுதியில் தெற்கு முகமாகக் காணப்படுகிறது.

5) 9. 5. உமைபார்வதி

திருமூலநாதர் சந்நிதியின் முன் உமைபார்வதி சந்நிதி தெற்கு நோக்கியவாறு இருக்கின்றது. இங்குப் பார்வதி அம்மையார் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றார்.

5) 9. 6. தட்சிணாமூர்த்தி

திருமூலநாதர் கருவறையின் தெற்கு வெளிச்சுவரில் தட்சிணாமூர்த்தி திருவுருவம் சின்முத்திரையுடன் இருக்கின்றது.

5) 9. 7. வல்லப கணபதி

தட்சிணாமூர்த்தி திருவுருவத்திற்கு அருகில் வல்லபகணபதி சந்நிதி உள்ளது. வல்லப கணபதி தெற்கு முகமாக அருள் பாலிக்கிறார்.

5) 9. 8. பல்லிகேசுவரர்

வல்லப கணபதி சந்நிதியை அடுத்துப் பல்லிகேசுவரர் நின்ற கோலத்தில் இருப்பதைக் காணலாம்.

இரண்டாம் பிராகாரக் கிழக்குப் பகுதித் திருவுருவங்கள்

5) 9. 9. அர்த்தசாம அழகர்

திருமூலநாதர் சந்நிதியிலிருந்து பொன்னம்பலத்திற்கு வரும் வழியில் அர்த்த சாம அழகர் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. முற்காலத்தில் ஒவ்வொரு இரவும் கோயில் அர்த்தசாமப் பூசை நிறைவு பெற்றவுடன் பொன்னம்மலம் உட்படவுள்ள கோயில்களின் திறவுகோல்கள் அனைத்தையும் இப்பெருமான் திருவடிகளில் வைத்துவிட்டு அடுத்தநாள் காலையில் இத்திறவுகோல்களை எடுத்துக்கொள்வது வழக்கம். இப்போது இவ்வழக்கம் பின்பற்றப்படுவதில்லை;

5) 9. 10. நவக்கிரகங்கள், சனீசுவரர்

அர்த்தசாம அழகர் சந்நிதிக்குத் தெற்கில் நவக்கிரகங்கள் ஒரு மேடையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. நவக்கிரகங்களுக்கு மேற்கில் சனீசுவரர் காக வாகனத்தில் அமர்ந்தவாறு உள்ளார்.

இந்நவக்கிரகங்களைச் சுற்றி வந்து வழிபடுவதற்கு வசதியாக ஒரு சிறிய உட்பிரகாரம் இருக்கின்றது.

5) 9. 10. உற்சவ மூர்த்திகள்

திருமூலநாதர் சந்நிதிக்குத் தெற்கில் தேவசபையாகிய பேரம்பலம் என்னும் சபை இருக்கின்றது. இப்பேரம்பலத்தில் அனைத்து உற்சவ மூர்த்திகள் திருமேனிகள் எழுந்தருளிவிக்கப் பெற்றுள்ளன.

முதல் பிராகாரத்து மேற்குப்பகுதி மூர்த்தங்கள்

5) 10. 1. நர்த்தன விநாயகர்

முதல் பிராகாரத்தை வலம் வரும் வழியில் மேற்குப்பகுதியில் நர்த்தன விநாயகர் கிழக்கு முகமாகக் காட்சியளிக்கிறதைக் காணலாம்.

5) 10. 2. இலிங்கோற்பவர்

நர்த்தன விநாயகர் திருவுருவத்திற்கு வடக்கில் இலிங்கோத் பவர் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. இலிங்கோற்பவர் திருவுருவத்தின இருபுறங்களிலும் பிரமதேவர், திருமால் ஆகியோரின் திருவுருவங்களும், அருகில் வராகர் உருவமும் உள்ளன.

5) 10. 3. ஆறுமுகர்

இலிங்கோற்பவர் திருவுருவத்திற்கு வடக்கில் ஆறுமுகர் திருவுருவம் இருக்கின்றது. ஆறுமுகர் 12 கைகளுடன் காட்சி யளிக்கிறார்.

முதல் பிராகாரத்து வடக்குப் பகுதி மூர்த்தங்கள்

5) 11. 1. பள்ளியறை

ஆறுமுகர் சந்நிதிக்கு அருகில் தெற்கு நோக்கியவாறு பள்ளியறை உள்ளது. இங்கு நாள்தோறும் விடியற்காலையில் விசுவரூப தரிசனம் நடைபெறுகிறது.

5) 11. 2. பிட்சாடனர்

பள்ளியறைக்கு வடக்கில் பிட்சாடனர் திருவுருவம் இருக்கின்றது;

முதல் பிராகாரத்துக்கிழக்குப்பகுதி மூர்த்தங்கள்

5) 12. 1. கால வயிரவர்

பிட்சாடனர் திருவுருவத்தின் அருகில் காலவயிரவர் மேற்கு முகமாகக் காட்சியளிக்கிறார்.

5) 12. 2. சூரியன், சந்திரன்

காலவயிரவர் திருவுருவத்தினையடுத்து சூரியன், சந்திரன் ஆகியோர் திருவுருவங்கள் இருக்கின்றன.

5) 12. 3. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்

சந்திரன் திருவுருவத்தையடுத்து அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோர் திருவுருவங்கள் இருக்கின்றன.

5) 12. 4. சண்டிகேசுவரர், சண்டிகேசுவரி

இச்சந்நிதி தெற்கு நோக்கியவாறு கிழக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இச்சந்நிதியின் சண்டிகேசுவரர், சண்டிகேசுவரி ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன.

6) பஞ்ச சபைகள்

இக்கோயிலில் சிற்சபை, கனகசபை, தேவ சபை, நிருத்த சபை இராச சபை என்னும் ஐந்து சபைகள் உள்ளன.

6) 1. சிற் சபை

6) 1. 1. பெயர் விளக்கம்

சிற்றம்பலம் ''சித்சபை'' எனக் குறிப்பிடப்படுவதுண்டு. தமிழ் இலக்கண முறையில் இதிலுள்ள தகர மெய்யெழுத்து, சகர உயிர்மெய்யெழுத்துக்கு இணங்கி வரத்தக்கவாறு றகர மெய்யெழுத்தாக மாற்றப்படுகிறது. இம்முறையில் சித்-சபை சிற்சபையாகத் தமிழ் மொழியில் இடம் பெறுகிறது. இம்முறையைக் குமரகுருபரர் கைக்கொண்டு தாம் அருளிய சிதம்பர மும்மணிக் கோவையில், ''சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்த'' எனத் தில்லைச் சிற்றம்பலவரைப் போற்றுகிறார். இதே முறையைப் பின்பற்றிச் சேக்கிழார் '' கற்பனைக் கடந்த சோதி '' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலில், (சித்-பரம்) சிற்பரம் என்னும் சொல்லைப்பயன்படுத்தியுள்ளார்.

6) 1. 2. அமைப்பு

இச்சபையின் அடிப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி மரத்தாலும் கட்டப்பெற்றுள்ளது தூண்கள் தேக்க மரத்தால் ஆனவை. கூரைபொன்ஓடுகளால்வேயப்பெற்றுள்ளது. உட்புறத்தில்வெள்ளித் தகடுகள் இடப்பெற்ற பஞ்சபூதத்தம்பங்கள் உள்ளன. வடக்கே உள்ள பொன்மலை (உத்தரமேரு) போன்று தில்லைச் சிற்றம்பலமும் மன்னர்களால் பொன்வேயப்பெற்றதால், இதில் பொன் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இது தட்சிணமேரு என்னும் பெயர் தாங்கி நிற்கிறது. ஒவ்வொரு பொன் ஓட்டிலும் ''சிவாயநம'' என்னும் சூக்கும பஞ்சாட்சரம் எழுதப்பெற்றிருப்பதாகத் தில்லை உலா கூறுகிறது.

6) 1. 3. மூர்த்தங்கள்

இங்குச் சதாசிவ பீடத்தில் நடராசரும் சிவகாமிசுந்தரி அம்மையும் வழிபடப்பெறும் மூர்த்தங்களாக உள்ளார்கள். மற்றும் மாணிக்கமயமாகிய இரத்தின சபாபதியும் சுவர்ணகால வயிரவரும் காட்சி அளிக்கிறார்கள். இங்குள்ள படிகலிங்கத்தை அழகிய சிற்றம்பலமுடையார் எனவும் திருவம்பல உடையார் எனவும் போற்றுகிறார்கள்.

6) 1. 4. சிதம்பர ரகசியம்

சிற்சபை நடராசப் பெருமான் வலப்பக்கத்துச் சுவர்ப்புறத்தில் அரைவட்ட வடிவிலான திருவாசிக்குள் பிரணவ பீடத்தின் மீது ஆகாசலிங்கமாகிய சிதம்பர ரகசியம் மிக்க நுட்ப மந்திர சொரூபத் திருவம்பலச் சக்கரத்துடனும் வில்வமாலையுடனும் இருக்கின்றது.

6) 1. 5. சிற்சபை குறிக்கும் புனிதக் கோட்பாடுகள்

இச்சபையின் ஒவ்வொரு பகுதியும் சைவசமயத்தின் ஒவ்வொரு புனிதக் கோட்பாட்டையும் விளக்குகிறது. சிற்சபையிலுள்ள மூர்த்தங்கள் இறைவரின் உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று கோட்பாடுகளையும் குறிக்கின்றன. இவ்வகையில்நடராசர் திருவுருவம் உருவ நிலையையும், சிதம்பர ரகசியம் உருவமற்ற நிலையாகிய அருவத்தையும், படிகலிங்கம் இவ்விருநிருவங்களையும் குறிக்கின்றன.

படிகலிங்கத்துக்கு ஆறுகால அபிடேகம் நடைபெறுகிறது.

சிதம்பர ரகசியம் மந்திர சொரூபத்துடன் திருவம்பலச் சக்கரமாய் அமைக்கப்பெற்றுள்ள போதிலும் இதற்கு ஆண்டுக்கு ஒரு முறை புனுகுச் சட்டம் சாத்தப்படுகிறது.

சிற்சபையின் மீது விளங்கும் ஒன்பது கலசங்களும் ஒன்பது சக்திகளைக் குறிக்கின்றன.

இச்சபையின் மீது வேயப்பட்ட 21.600 பொன் ஓடுகள் ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளுக் குரிய 21,600 மூச்சுகளைக் குறிக்கின்றன. இச்சபையின் கைம் மரங்கள் 64 கலைகளைக் காட்டுகின்றன. இச்சபைக்குரிய ஐந்து படிகளும் ஐந்தெழுத்து மந்திரத்தைக் குறிக்கின்றன.

6) 1. 6. திருநடனத் தத்துவம்

நடராசரது திருவடி நகரம்; உதரம் மகரம்; தோள் சிகரம்; திரு முகம் வா; திருமுடி யகரம்; இதுதூலபஞ்சாக்கரமாகிய ''நமசிவாய'' மந்திரத்தைக் கொண்டுள்ளது. சூக்கும பஞ்சாட் சரமாகிய ''சிவாயநம'' என்பதற்கேற்ப, வலக்கையிலுள்ள துடி (தமருகம்) சிகாரம்; வீசிய கை, வா; அபயமளிக்கும் கை, யகரம்; இடக்கை அக்கினி நகரம்; ஊன்றிய திருவடியின் கீழ் முயலகன் தங்குமிடம் மகரம்; நடராசரை விட்டு நீங்காத திருவாசி ஓம் என் னும் பிரணவத்தைக் கொண்டது.

வலக்கையிலுள்ள தமருகத்து நாதத்தால் படைத்தலையும், அபயம் அளிக்கும் கையினால் காத்தல் தொழிலையும், இடக்கை யில் ஏந்திய அக்கினியால் அழித்தலையும், முயலகன்மீது ஊன்றிய திருவடியால் மறைத்தலையும், தூக்கிய திருவடியால் முத்தியாகிய அருளையும் நடராசர் புரிகிறார். இவ்வுண்மைகளைத் ''தோற்றம் துடியதனுள்'' எனத் தொடங்கும் உண்மை விளக்கப் பாடலும், ஸ்ரீகுமரகுருபரர் சிதம்பரமும்மணிக் கோவையும் எடுத்தியம்புகின்றன.

அமைத்த கை

இதை அபயகரம் எனக் குறிப்பதுண்டு. இதுவலக்கை. ''அஞ்சேல் நும்மைக் காப்போம்'' எனச் சிவபெருமான் தம் அடிய வர்களுக்குஆறுதல் கூறித்தேற்றும் நிலையை இக்கை காட்டுகிறது.

வீசிய கரம்

இது இடக்கை. இக்கை யானையின் துதிக்கை போன்று வளைந்திருக்கிறது இக்கையின் ஒருவிரல் தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது ''இத்திருவடியைத் தொழுக. இவ்வாறு செய்யின் ஈடேறுவீர்'' என்பதை இது காட்டுகிறது.

எடுத்த திருவடி

இது நடராசரின் இடப்பக்கத்துத் திருவடியாகும். இது உமையொருபாகன்(அர்த்தநாரீசுவரர்) வடிவிலுள்ள உமைஅம்மை பாகத்திற்குரியது. ''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' என எடுத்துக்காட்டுகிறது சைவசித்தாந்தம். இது நம்மை ஆட்கொள் வது எடுத்த திருவடி. இதனைத் ''தில்லைச்சிற்றம்பலத்து நட்டம்,

ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ, நம்மை ஆட்கொண்டதே'' என்கிறார் திருநாவுக்கரசர். இந்தக் காலுக்கு ''குஞ்சிதபாதம்'' என்பது பெயராகும். குஞ்சிதம் வளைந்தது என்னும் பொருள் தருகிறது. நம் தலை அரைவட்டமாக இருக்கின்றது. நம்மில் அநேகர் தலைகள் மீது வைத்து அருள் பாலித்தலால் இந்தக்கால் உள்வளைந்தது போலுள்ளது. இதுவே மீளா இன்பமாகிய முத்தி நிழல் தந்து உயிர்களை வாழ்விக்கும் திருவடி. இவ்வாறு அருள் புரிவன வீசிய கரமும் ஊன்றிய திருவடியுமாகும்.

இறைவரின் வலக்கால், முயலகனை மிதித்து அடக்கும் வகையில் அவன் மீது ஊன்றிய நிலையில் அமைந்திருக்கிறது.

முயலகன்

நடராசர் வலக்காலின் கீழ் மிதியுண்டு படுத்த நிலையில் இருப்பவன் முயலகன். இவன் பூதம், அசுரன் என்னும் பெயர்களில் குறிக்கப்படுகிறான். முயலகன் ஆணவத்திற்கு அறிகுறியாகும். ஆணவத்தால் உயிர்கள் வருந்தாவண்ணம் முயலகனை நன்கு மிதித்து அழித்துவிடாமலும் மிதியாமல் விட்டு விடாமலும் இந்நிலையில் முயலகனைச் சிவபெருமான் அடக்குகிறார். முயலகன் தலை நிமிர்ந்தவாறும், உடல் வேறு விதமாகத் திருகலாகவும், கால்கள் மற்றொருவகையில் திருகலாகவும்இருக்கின்றன.

மாதினை நோக்குதல்

நடராசர் வடிவம் அமைக்கும் சிற்பக் கலைஞர்கள் நடராசர் முகம் சற்றுச்சாய்ந்து நிற்கும் சிவகாமி சுந்தரியை நோக்கி ஆடுவது போன்று திருவுருவம் அமைக்கின்றார்கள். இதனைத் திருநாவுக்கரசு நாயனார்,

'' மானேர் நோக்கி,
அருமான வாண்முகத்தாள் அமர்ந்துகாண
அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானை ''

என அருளிச் செய்துள்ளார். (6–1-3)

'' மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்பலத் தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூ த்தாடும்
நாதனார் கழல்கள் ''

எனச் சேக்கிழார் அருளியுள்ளார். இங்ஙனம் அம்பிகையை நோக்கியே இறைவன் திருநடனம் புரிவதற்குக் குமரகுருபரர் ஒரு காரணம் காட்டுகிறார். தாம் பெற்றெடுத்த குழந்தையின் குடல்

மருந்தைச் செரிக்கும் ஆற்றல் பெற்றதன்று. ஆதலால் தாய் அம் மருந்தினை உண்டு அம்மருந்தின் பயனைத் தனது பால் வழியாக அக்குழந்தை நலம் பெறுமாறு செய்கிறாள். இவ்வழியில் குழந்தை நோய் நீக்கம் பெறுகிறது. இதனைக் குமரகுருபரர்,

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாய் உண்டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம் ஈன்றளித்த தெய்வக் கற்பின்
அருள் சூல்கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண்சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம்புரியும்
அற்புதக் கூத்த"

எனக் குறிப்பிடுகிறார். (சிதம்பர மும்மணிக்கோவை 2)

தெற்கு நோக்குதல்

எல்லாத்திருக் கோயில்களிலும் நடராசப் பெருமான் தெற்கு நோக்கியே அமைக்கப் பெற்றுள்ளார். தெற்கில் யமன் ஆட்சி புரிகிறான் அவன் பட்டணத்திற்குச் செல்லும் உயிர்களை நோக்கி "அங்குச் செல்லாதீர்கள். எம்மிடம் வந்து சேருங்கள்" என உடுக்கை கொண்டு ஒலிபரப்பிச்சிவபெருமான் அழைக்கிறார்.

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்" என்கிறார் மாணிக்கவாசகர் தாம் அருளிய திருச்சாழலில். சிவபெருமான் இவ்வாறு தெற்கு நோக்கி ஆடுவது அங்கு நிலவியுள்ள செந்தமிழையும் ஆங்கு வீசும் தென்றல் காற்றினையும் நுகர்வதற்காகும் எனப் பரஞ்சோதி முனிவர் தாம்இயற்றிய திருவிளையாடல் புராணத்தில்,

"கடுக்கவின் பெறு கண்டனும்
தென்றிசை நோக்கி
அடுக்க வந்து வந்து ஆடுவான்
ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால் திரு
முகத்திடை வீசி
மடுக்கவும் தமிழ்திருச்செவி
மாந்தவும் அன்றோ!"

எனப் பாடியுள்ளார்.

அண்டமும் பிண்டமும்

உலகம் ஆகிய அண்டம்(Macrocosm) அமைந்திருப்பதுபோல நம் உடம்பு ஆகிய பிண்டமும் (Microcosm) அமைந்துள்ளது. இறைவர் அண்ட வெளியில் திருநடனம் புரிதல்போல நம் உடம்பிலுள்ள பிண்டத்தின் கண்ணும் நடனம் புரிகிறார். அண்டவெளி நடனம் தில்லைச் சிதம்பரத்தில் நிகழ்கிறது.

அண்டத்தையும் பிண்டத்தையும் நடராசர் இயக்குவதைச் சிதம்பர புராணம் எடுத்துக்காட்டுகிறது.[1] அறிதற்கரிதாகி, நிச்சயமாய்ச் சித்தாகி, ஆனந்தமயமாகி, விகாரப்படாமல், வளர்ச்சிக்குரியதாய், எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பரம்பொருள் (பிரமம்) யோகிகள் உள்ளத்துக்குள்ளே காணப்படுவதால், இத்தேகம் பிரமபுரம் என்னும் பெயர் பெற்றுள்ளது.

தாமரை மலர் போன்ற இதயத்தில் பரம்பொருள் நிலையுற்றிருப்பதினால், இதயத் தாமரைக்குப் 'புண்டரிகபுரம்' என்னும் பெயர் அமைந்துள்ளது கண்ணினால் பார்க்கவும், வாக்கால் துதிக்கவும், மனத்தால் நினைக்கவும் அரிய பொருளாயிருப்பதால் சுத்தவெளியாகிய இதனை அறிந்து ஞானிகள் தியானம் செய்கிறார்கள். சாந்தோக்கிய உபநிடதம் பல தன்மைகளைக் கொண்டுள்ளது. இவ்வுபநிடதம் பிரமத்தின் தன்மையைப் படிப்படியாகவும், தெளிவாகவும் உணர்த்துகிறது. இதில் கூறப்படும் வித்தைகளில் இது முடிந்த முடிவாக அமைந்துள்ளது. இதன் எட்டாம் அத்தியாயத்தில் ''இந்தப் பிரமபுரத்தில் (இந்த உடம்பில்) சின்னஞ்சிறு மாளிகை உண்டு. அதிலுள்ளது எதுவோ அதனைத் தேடவேண்டும்'' என்பது கூறப்பட்டுள்ளது. இந்த உபநிடப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "புண்டரிகவேசமன்" என்பது ''வீடு'', ''ஆலயம்'' என்பனவற்றைப் புலப்படுத்துவதாகப் பாம்பன் சுவாமிகள் அமர சிம்ம நிகண்டை மேற்கோள் காட்டிக் கூறியுள்ளார். ''ஆலயம்'' என்பது மிகப் பொருத்தமாக உள்ளது.

இப்பரம்பொருள் அண்டங்களையெல்லாம் நினைத்த மாத்திரத்தில் உண்டாக்கும் பரிபூரணமான பொருளாகையால் அண்டங்களின் சொரூபமாகிய விராட் புருடனுக்கு இதயத் தாமரையாக இருப்பது புண்டரிகபுரம் என்னும் சிதாகாசமாகிய சிதம்பரம். இப்பரம்பொருள் இங்குப் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாசமாக மட்டும் அமையாமல் ஞான மயமாயும் எப்போதும் ஒளிவிட்டுக் கொண்டிருப்பவருமாகிய சபாபதி ஆவார். இவர் இங்குப்படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் இயக்கும் முறையில் ஆனந்தத் தாண்டவம் புரிகிறார். இவர் இவ்வாறு ஆனந்தத்தாண்டவம் புரியும்போது இவரிடம் மூன்று கண்களும் நீலகண்டம் முதலியவையும் விளங்குவதைச் சிவகாமசுந்தரி அம்மை கண்டு மகிழ்ச்சி மிகத் தம் நாயகனார் சந்நிதிக்கெதிரில் அவரது திருநடனத்தைக் களித்து '' இந்நடனத்தைத் தரிசனம் செய்வோர்கள் மேலான சிவகதி அடைக '' என வாழ்த்துகிறார்.

---

1. சிதம்பர புராணம் — பரஞ்சோதி முனிவர்
மான்மியச் சுருக்கம் — பாடல்கள் 60, 61, 63, 65, 70

6) 2. கனக சபை

கனக சபை சிற்சபைக்கு எதிரில் உள்ளது. இதன் அடிப்பகுதி கல்லாலும், மரத்தாலும் கட்டப்பட்டுள்ளது. இதற்கு இருபுறங் களிலும் உள்ள வாயில்களில் அறுகால் நிலைகளும் கதவுகளும் உள்ளன. கதவுகள் பித்தளைத் தகடுகளால் மூடப்பட்டுள்ளன.

இது சோதி சொரூபமான சபை, பொன்மயமான பரமத்தானம்; இங்குள்ள 18 தூண்களும் பதினெண் புராணங்களைக்குறிக்கின்றன. 96 வெள்ளிப் பலகணிகள் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் குறிப்பிடுகின்றன.

இங்கு நடராசப் பெருமானுக்கு நாள்தோறும் ஆறுகாலப் பூசைகளும் ஆண்டில் ஆறு திருமஞ்சனங்களும் நடைபெறுகின்றன.

இங்குச் சிற்றம்பலம் உடையாரும் இரத்தின சபாபதியாரும் நாள்தோறும் பகல் 10 மணி அளவில் அபிடேகமும் ஆராதனையும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

6) 3. நிருத்த சபை

இச்சபை இரண்டாம் பிராகாரத்தின் தெற்குப் பகுதியில் இருக்கின்றது, இது இருபுறங்களிலும் சக்கரங்கள் கொண்ட தேர் அமைப்பைக் கொண்டு குதிரைகளின் உருவங்கள் பாய்ந்து செல்லும் தோற்றத்தைக் கொண்டுள்ளன. இது "தேர்க் கோயில்" எனவும் இதனைத் தான் கட்டியதாக விக்கிரமாதித்த சோழன் (கி.பி. 1118—1136) உரிமை கொண்டாடியுள்ளான். இம்மண்டபம் அழகிய சித்திர வேலைப்பாட்மைந்த 2 1/2 மீட்டர் உயரமுடைய 56 தூண்களால் தாங்கப் பெற்றுள்ளது. அழகிய இமயத்திற்கு ஒப்பவுள்ளதும் பொலிவுற்றதுமான தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் புரியும் சிவபெருமான் உமையோடு காளிக்கு அருளிய வகையில் உவகை பூண்டு அடியவர்களோடு தில்லைப் புலியூரை அடைந்தார் என மாணிக்கவாசகர் தாம் அருளிய கீர்த்தித் திருவக வலில தெரிவித்துள்ளார்.

6) 4. தேவ சபை

தேவர்களுக்குத் தலைவர் சிவபெருமான். இவ்வகையில் இச் சபை ஓர் அம்பலமாகிறது. எனவே இச்சபை, வழக்கத்தில் பேரம்பலம் எனக் குறிக்கப்பெறுகிறது. இதன் ஒரு பகுதியில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளார்கள்.

அநபாய சோழ மன்னராகிய இரண்டாம் குலோத்துங்கன் தன் குலத்துமுன்னோர்கள்சிற்றம்பலத்தைபொன்மயமாக்கியுள்ளார் என வும் அவர்களைப் பின்பற்றி தான் இப்பேரம்பலத்தைப்பொன்னினால் மெழுகிப் பொன்மயமாக்கினான எனவும் பெரியபுராணம் கூறுகிறது. இச்சபையின் முன்புறத்தில் ஒரு மண்டபம் இருக்கின்றது இங்குத்தீட்சிதர்கள் அவ்வப்போது கூடி இக் கோயில் பற்றிய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

6) 5. இராச சபை

இராச சபை ஆயிரக்கால் மண்டபம் ஆகும். இது 103 மீட்டர் நீளமும் 58 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதில் ஒரு வரிசைக்கு இருபத்து நான்கு தூண்களாக நாற்பத்தொரு வரிசைத் தூண்கள் உள்ளன. மொத்தம் 984 தூண்கள் உள்ளன. மையத்தில் நந்தி மண்டபம் அமைக்கப்பட்டதால் இம்மண்டபத்தைச் சார்ந்துள்ள வெளிப்பகுதியிலுள்ள தூண்களையும் சேர்த்துக் கொண்டால் தூண்களின் எண்ணிக்கை ஆயிரமாகும்.

இத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருங்கல்லிலிருந்து அழகுறச் செதுக்கப்பட்டதாகும்.

ஆனி, மார்கழி ஆகிய இவ்விரு மாதங்களிலும் நிகழும் ஒன்பதாம் நாளில் நடராசப் பெருமான் திருத்தேரில் நான்கு வீதிகளிலும் உலா வந்த பின்னர், இரவில் இந்த மண்டபத்தில் வீற்றிருக்கிறார்; விடியற் காலத்தில் இங்குத் திருமஞ்சனம் கொண்டருள்கிறார்; பத்தாம் நாளில் மக்களுக்குத் திருக்காட்சி இங்கு அளிக்கிறார். பின்னர் இங்கிருந்து நடராசப் பெருமாள் முதலிலும் அவரைத் தொடர்ந்து தேவியும் நடனம் கோலத்தில் சிற்றம்பலம் சென்று அங்கு எழுந்தருள்கிறார்கள்.

இங்குத்தான் சேக்கிழார் பெரியபுராணத்தைத் தொடங்க முற்பட்டபோது, இறைவர் ''உலகெலாம்'' என்னும் அடியெடுத்துக் கொடுத்தார்.

ஆயிரக்கால் மண்டபத்தில் உச்சியில் 5 விமானங்கள் எடுப்பாகக் காணப்படுகின்றன. பெரிய விமானத்தில் 13 கலசங்களும் இதனை அடுத்துள்ள இரு விமானங்களில், ஒன்றில் 9 கலசங்களும் மற்றதில் 5 கலசங்களும் உள்ளன. இவற்றிற்கு மேற்கில் உள்ள விமானத்தில் 5 கலசங்களும் அதனை அடுத்த விமானத்தில் 3 கலசங்கள் காணப்படுகின்றன.

இரண்டாம் குலோத்துங்க சோழன் வேண்டுகோளுக்கிணங்க சிவனடியார் வரலாறுகளை ஒரு காவியமாகச் செய்து தருமாறு ஆர்வத்தோடு விடுத்தான் இவ்வேண்டுகோளுக்கிணங்கச் சேக்கிழார் நடராசப் பெருமான் கோயிலுக்குச் சென்று பணிந்து நின்று, ''அடிகளே உம் அடியார் சீர் அடியேன் உரைத்திட அடியெடுத்து அருள்க'' என வேண்ட, அப்பொழுது தில்லைச் சிற்றம்பலவர் திருவருளினால் அசரீரி வாக்கு ஒன்று, ''உலகெலாம்'' என்ற அடியெடுத்து உரைத்தது. இது நடராசரது சிதாகாயத்திருமேனியிலிருந்து எழுந்த பேரொலியாகும். இதனைத் துணைகொண்டு இந்த மண்டபத்தில் அமர்ந்திருந்த சேக்கிழார் பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தைப் பாடிமுடித்தார். நடராசப் பெருமான் முதலெடுத்துக் கொடுத்த ''உலகெலாம்'' என்னும் சிதாகாய மாகிய பிரணவ ஒலியும், சேக்கிழார் விரித்துரைத்த திருதொண்டர் வரலாற்று ஒலியும், இவ்வாயிரக்கால் மண்டபத்தில் ஒலியும் எதிரொலியுமாக ஒலித்துக்கொண்டிருந்ததை இதே ஆயிரக்கால் மண்டபம் தற்போது நினைவு படுத்துகின்றது.

சிவகங்கைத்தீர்த்தம் ஞான சொரூபமானது. இதற்குக்கிழக்கில் அமைந்து விளங்குவது, இத்திரு மண்டபம். சிவபெருமானுக்குரிய ஐந்து முகங்களில் ஒன்றாகிய ஈசான முகம் எல்லா வித்தைகளுக்கும் இருப்பிடமாக இருப்பது. இந்த ஈசானத் திருமுகத்தைக் குறிப்பது போல், இறைவன் ஞான சக்தியுடன். வீற்றிருக்கும் ஆயிரம் இதழ் தாமரைமலராக உருக்கொண்டு இருப்பது சிற்றம்பலத்தில் ஈசானத்தில்(வடகிழக்கில்) இராச சபையாகிய ஆயிரக்கால் மண்டபமாகும்

7) கோவிந்தராசர் திருக்கோயில்

7) 1 வரலாறு

சைவ சமய ஆசிரியர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் காலத்தில் சைவ சமயம் சிறப்புற்றது. இவர்கள் மூவரும் தில்லை நடராசர் கோயிலில் வழிபாடாற்றியுள்ளனர். இவர்களுள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.[1] சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும்.[2]

தென்னாடு, கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நந்திவர்மன் (கி. பி, 710 — 775) ஆளுகைக்குள் வந்தது. இம்மன்னர் வைணவத்தில் மிக்க ஈடுபாடுடையவர். காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலைக் கட்டியவர் இவரே. இம்மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் திருமங்கை ஆழ்வார்.[3]

---

1. பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி பக்கம் 376, க.வெள்ளைவாரணன் 1972 ஆம் பதிப்பு

2. பன்னிரு திருமுறை வரலாறு; முதற்பகுதி பக்கம் 395

3. திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோயிலில் இரண்டாம் நந்தி வர்மன் கி. பி. 772 ஆம்ஆண்டு கல்வெட்டு காணப்படுகிறது. தன் மகளை இரண்டாம் நந்திவர்மனுக்குத் திருமணம் செய்து கொடுத்த வச்சிரமேகனைத் திருமங்கைஆழ்வார்[குறிப்பிடுவதால் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் திருமங்கை ஆழ்வார் வாழ்ந்திருந்தார் எனக் கொள்ளலாம். திருமங்கையார் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனப் பேராசிரியர் கிருஷ்ணசாமி அய்யங்காரும் தாம் இயற்றிய பண்டைக்கால இந்திய நூலில் குறிப்பிட்டுள்ளார். (பக்கங்கள் 322–323)

திருமங்கையாழ்வார் தாம்அருளிய பெரிய திருமொழியில்,
"பைம் பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து
படை மன்னவன பல்லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத்
திருச் சித்ரக் கூடம் சென்று சேர்மின்களே"[4]

எனக் குறிப்பிடுதலாலும் இவர் காலத்திற்கு முன்பு தில்லைக் கோவிந்தராசர் கோயில் இருந்ததாக ஆதாரம் எதுவும் இல்லாததாலும், இக்கோயில் இப்பல்லவ மன்னரால் கட்டப்பட்டது எனக் கொள்ளலாம். மற்றும் இராமபிரான் தமது அவதார காலத்தில் சித்திரகூடம் வாசம் செய்ததை நினைவிற் கொண்டு, திருமங்கை ஆழ்வார்,

"மூவாயிர நான்மறையாளர் நாளும்
முறையாக் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரக் கூடம் சென்று சேர்மின்களே"[5]

எனவும்,

குலசேகர ஆழ்வார் தாம் அருளிய பத்தாவது திருமொழியில்
" செந்தளிர் நான்மறையாளர் நகைசேர் செழுந்தண்
சோலைத்
தில்லை நகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
அந்தணர்களொரு மூவாயிரவ ரேத்த
அணிமணி யாசனத்திருந்த அம்மான்தானே"[6]

எனக் குறிப்பிட்டுள்ளனர். இவற்றிலிருந்து தெரியவருவது அக்காலத்தில் இக்கோயிலில் தில்லைவாழ்அந்தணர்களே பூசை செய்து வந்தார்கள் என்பதுதாகும்.

இனித்திருமங்கையாழ்வார் காலத்தைஅடுத்து(கி.பி.792-835)[7] வாழ்ந்த மாணிக்கவாசகர் தாம் அருளிய திருக்கோவையாரில் பூமியை அளந்தவரும்.[8] ஆலிலை மேல் பள்ளி கொண்டவரும்[9] உலகை ஆண்டவரும்[10] மலரிட்டு வணங்கியவரும்[11] ஆகிய திருமால் தில்லை அம்பல முன்றில்[12] கிடந்தார்

4. பெரிய திருமொழி 3—23
5. பெரிய திருமொழி 3—28
6. பெருமாள் திருமொழி 10—2
7. பன்னிரு திருமுறை வரலாறு -2 ஆம் பகுதி; பக்கம்-104; பதிப்பு—1969
8. திருக்கோவையார் பாடல் 42
9. திருக்கோவையார் பாடல் - 105
10, ,, 132
11. ,, 157
12. ,, 86

எனக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கோவிந்தராசர் கோயில் கொண்டிருந்தது சிற்றம்பலத்திற்கு எதிரில் இருந்த முற்றம் என்பது தெரிய வருகிறது. அடுத்துத் தில்லைக் கோவிந்த ராசர் கோயிலைப் பற்றித் தெரிவிப்பன சோழ மன்னர் அவைப் புலவர் ஒட்டக்கூத்தர் பாடியுள்ள உலாக்களும் தக்கயாகப்பரணியு மாகும். சைவப் பற்று மிக்கவராகிய இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில், தில்லைக்கோவிந்தராசர்கோயில்அழிக்கப்பட்டதாகஇப் புலவர் இந்நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் கூற்றை மெய்ப்பிக்க வேறு ஆதாரங்கள் இல்லாததால் இவர் கூறியுள்ளது சைவப்பற்று மிக்க தம் மன்னரிடம் தாம் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசம் காரணமாக இப்புலவர் கற்பனையில் எழுந்ததாக இருக்கலாம் என எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித் துள்ளார்.[13]

வைணவ குரு பாரம்பரியம் கூறுவது இராமானுசர் காலத்தில் சித்திரகூடம் அழிக்கப்பட்டதுஎன்பதும் இங்கிருந்த கோவிந்தராசர் திருவுருவத்தை வைணவர்கள் திருப்பதிக்குக் கொண்டு சென்றார்கள் என்பதுமாகும். இவ்வாறு திருப்பதிக்கு அவர்கள் எடுத்துச் சென்றது கோவிந்தரா்சர் உற்சவத் திருமேனியாக இருக்கவேண்டும் என்னும் கருத்து நிலவியுள்ளது.

விசயநகர் மன்னர் கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509—1529) தென்னாட்டினை ஆண்ட காலத்தில் காஞ்சிக்கு வந்து வரதராச சுவாமி கோயிலுக்கும் ஏகாம்பர ஈசுவரர் கோயிலுக்கும் நன்கொடைகள் அளித்ததைக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.[14] ஆனால், இம்மன்னர் நடராசர் கோயிலில் வழிபட்டதோடு இக் கோயிலுக்கு நன்கொடைகள் பலஅளித்து இக்கோயிலின் வடக்குக் கோபுரத்தையும் அமைத்தார். ஆனால்; இம்மன்னர் கோவிந்த ராசர் கோயிலுக்கு யாதொரு நன்கொடையும் அளிக்கவில்லை. இதிலிருந்து தெரியவருவது கோவிந்தராசர் கோயிலில் இக்காலத் தில் வழிபாடு நடைபெறவில்லை என்பதாகும்.[15] கிருஷ்ண தேவ ராயருக்குப் பின் கி. பி. 1529 ஆம் ஆண்டில் அரசேற்ற அவர் தம்பி அச்சுதராயர் கோவிந்தராசர் திருவுருவம் இக்கோயிலில் நிலைநாட்டப்படவேண்டும் எனவும் இங்குக் கோவிந்தராசருக்கு வைகானச முறையில் பூசை நடத்தப்பட வேண்டும் எனவும் கி.பி. 1539 ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்தார். இப்பூசைக்காக நான்கு கிராமங்களின்வருவாயாகிய 500 பொன்னும் அளித்தார். பின்னர், அரசுப் பதவியேற்ற விசயநகர மன்னர் முதல் வேங்கட

13. பிற்காலத்திய சோழர்கள் - பக்கம் 51; பதிப்பு 1979
14. ஏ. ஆர். இ. 1920; பக்கங்கள் 112-113; 641; 1919.
15. ஆனால் செஞ்சிக் கோபண்ணராயரது உதவி கொண்டு தில்லைக் கோவிந்தராசர் கோயில் நிலைப்படுத்தப்பட்டது என்பதை வேதாந்த தேசிகர் வரலாறு குறிப்பிடுகிறது. ஆதலி னால், இரண்டாம் குலோத்துங்கன் எடுத்த நடவடிக்கையை எதிர்த்துக் கோவிந்தராசர் கோயிலும் அதன் வழிபாடும் ஏதோ ஒருவகையில் தொடர்ந்துவர அனுமதிக்கப்பட்டன என்பது தெரியவருகிறது.

டரும் (கி.பி. 1586-1614) மூன்றாம் அரங்கரும் (கி. பி. 1642—1680) பல கிராமங்களையே கோவிந்தராசர் கோயிலுக்கு அளித்தார்கள். முற்காலத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்த நிலங்கள் வரியிலி நிலங்களாக மாற்றப்பெற்றன. செஞ்சியில் அதிகாரம் செலுத்தி வந்த கிருஷ்ணப்ப நாயகர் இக்கோயிலில் பல மேம்பாடுகள் செய்து வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட விவாதங்களைக் கண்டிப்பான முறையில் தீர்த்து வைத்தார். அக்காலத்தில் தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி ஆகியவற்றில் விமானங்களும் பழுதுபார்க்கப்பட்டன.

கி. பி. 1797 ஆம் ஆண்டில் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையே விவாதம் மீண்டும் தோன்றிற்று. இதன் காரணமாகக் கோவிந்தராசர் கோயில் மூடப்பட்டதாகவும் அக்காலத்திய நவாப் அத்தகராற்றைத் தீர்த்து வைத்ததாக ஆர்க்காட்டு நவாபு பர்வானா தெரிவிக்கிறது.

கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் நடராசர் கோயிலுக்கும் கோவிந்தராசர் கோயிலுக்கும் இடையே வழக்குகள் தொடர்ந்து நடைபெற்றன. கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் தீட்சிதர்களுக்கும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைக் கேற்பத் திருச்சித்திரக் கூடத்தில் பல பகுதிகளுக்குத் திருப்பணிகள் செய்யப்பட்டன; வைணவர்களுக்கும் தீட்சிதர்களுக்கும் இடையே இருந்துவந்த தகராறு இவ்வாறு இறுதியடைந்தது.

7) 2. கருடாழ்வார்

கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றை அடுத்து இரண்டாம் பிராகாரத்தில் கிழக்குப் பகுதியில், கோவிந்தராசர் சந்நிதியை நோக்கியவாறு கருடர் சந்நிதி மேற்கு நோக்கியவண்ணம் இருக்கின்றது.

கோவிந்தராசப் பெருமாள்

கோவிந்தராசர் சந்நிதியை வலம்வரும்போது சுதர்சனர் உருக்குமணி சத்தியபாமைஆகியோருடன் வேணுகோபால் மற்றும் பதஞ்சலி, கண்ணுவர், உடையவர், யோக நரசிம்மர், கூரத்தாழ்வார், தெய்வப்புள் ஏறிவருவான், சக்கரத்தாழ்வார் ஆகியோருடைய திருவுருவங்களைக் காணலாம்.

மேற்கில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

வடக்கில் நம்மாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், மணவாளமாமுனிகள் ஆகியோர்கள் திருவுருவங்கள் தெற்கு நோக்கியுள்ளன. அடுத்துப் பெருமாள் திருவடிகள் ஒரு மேடை மீது காணப்படுகின்றன. சேனை முதலிகள் சந்நிதி தெற்கு நோக்கி இருக்கிறது.

கிழக்கில் ஆஞ்சநேயர் சந்நிதி மேற்குநோக்கியுள்ளது இங்கு ஆஞ்சநேயர் உற்சவர் திருவுருவமும் உள்ளது.

கோவிந்தராசர் ஏழு தலைப் பாம்பின் படத்தின் கீழ் நான்கு கைகளுடன் சங்கும், சக்கரமும்கொண்டுமார்பில்மகாலட்சுமியுடனும் நாபியில் பிரமதேவருடனும் சயனித்தவாறு காட்சியளிக்கிறார். இது அவரது அயர்ந்த கோலமாகும்.

பார்த்தசாரதி இருக்குமணியுடனும், சத்தியபாமையுடனும் அமர்ந்தகோலத்தில் காட்சியளிக்கிறார்.

மகாலட்சுமி (உற்சவர்)

நிருத்த சபையின் மேற்கில் மகாலட்சுமி உற்சவத் திருமேனி ஒரு சந்நிதியில் வடக்குநோக்கியவாறு நிலைநிறுத்தப்பட்டுள்ளது

மகாலட்சுமி

உற்சவ மகாலட்சுமி சந்நிதிக்கு மேற்கில் மகாலட்சுமி சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இவருக்குப் புண்டரீகவல்லித் தாயார் என்னும் பெயரும் உள்ளது.

இக்கோயிலின் விமானம் ''சாத்துவிக'' விமானம் என்னும் பெயர் கொண்டுள்ளது. இக்கோயிலின் தீர்த்தம் புண்டரீக தீர்த்தம். இக்கோயிலுக்கு அறங்காவலர் மூவர் உள்ளார். இக் கோயிலின் பூசைகள் வைகானச ஆகமமுறையில்தென்கலையாரால் நடத்தப்பெறுகின்றன. மங்களாசாசனம் பெற்றுள்ள பிற வைணவக் கோயில்களில் போன்று இங்குத்திருவீதி உலாக்களோடு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால், பிரம்மோற்சவம் மட்டும் நடைபெறுவதில்லை.

8) தீர்த்தங்கள்

8) 1. சிவகங்கைத் தீர்த்தம்

'' தீர்த்தம் என்பது சிவகங்கையே, ஏத்தருந்தலம் எழிற் புலியூரே, மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே'' என இரட்டையர் கலம்பகம் சிவகங்கைத் தீர்த்தத்தைச் சிறப்பாகக் கூறுகிறது.

பொன்மயமான சிற்றம்பலத்திற்கு நேர் வடக்கில் இருப்பது தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமோத்தமான தீர்த்தம் சிவகங்கை யாகும். இத்தீர்த்தம் திருச்சிற்றம்பலமுடையார் கோயிலுக்கும் சிவகாமிசுந்தரி அம்மை கோயிலுக்கும் இடையில் உள்ளது. இத்தீர்த்தம் 48 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் கொண்டுள் ளது. இதன் நீர் தூய்மையாக உள்ளது. இத்தீர்த்தக் கரையைச் சுற்றிலும் 2 மீட்டர் அகலத்தில் திருச்சுற்று மண்டபங்கள்

இருக்கின்றன. இத்திருச்சுற்றையும், படிகளையும் அமைத்தவர் சோழர் படைத்தலைவன் நரலோக வீரன் ஆவார். படிகலிங்க அபிடேக நீரும் சிவகங்கையில் வந்து சேருகிறது. இச்சிவலிங்க ஆவுடையாரிலிருந்து வெளிவரும் கோமுகி தெற்கில் இருக்கிறது. இச்சிவலிங்க ஆவுடையாரின் அபிடேகநீர் கோமுகி வழியாக வெளி வருகிறது. இதே அமைப்பில் சிவகங்கைத் தீர்த்தம் நடராசர் கோயிலுக்கு வடக்கில் சிவகாமி அம்மன் கோயிலை நோக்கி யுள்ளது. இவவிரு தன்மைகளும் சிவகங்கைத் தீர்த்தத்திற்குச் சிறப்பு அளிக்கின்றன.

8) 2. பரமானந்த கூபம்

திருச்சிற்றம்பலத்திற்குக் கீழ்த்திசையில் இக்கோயிலினுள் கிணறு வடிவில் இத்தீர்த்தம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்திற்கு ஐப்பசி மாதம் வளர்பிறை நவமியில் கங்கையே வருகிறதாகக் கருதப்படுகிறது. இத்தீர்த்தமே இக்கோயிலிலுள்ள எல்லாச் சந்நிதிகளின் அபிடேகத்திற்கும் பயன்படுகிறது. ஆனந்த சொரூப மாகிய சிவகாமியே இத்தீர்த்தமாக இருப்பதால், இது பரமானந்த கூபம் என்னும் பெயரில் விளங்குகிறது.

8) 3. குய்ய தீர்த்தம்

இத்தீர்த்தம் சிற்றம்பலத்திற்குக் கிழக்குப்பகுதியில் உள்ளது. சிவபெருமான் ஆனந்த நடனம் புரியும் சிற்றம்பலத்திற்கு ஈசானத் திக்கில் அலைகளையுடைய சமுத்திரமே தீர்த்தமாக அமைகிறது. இத்தீர்த்தத்தில் மாசி மகத்தில் நீராடுதல் சிறந்த தாகக் கருதப்படுகிறது. இத்தீர்த்தத்திற்கு வருண தீர்த்தம் என் னும் பெயரும் உண்டு.

8) 4. புலி மடுத்தீர்த்தம்

திருச்சிற்றம்பலத்திற்குத் தெற்கில் இத்தீர்த்தம் உள்ளது எத்தகைய வினை புரிந்தோரும் நீராடிக் கடைத்தேறும் பொருட்டு பரமசிவன் தமது கைச்சூல முனையினால் ஒரு தீர்த்தம் உண்டாக்கினார். இது நாளடைவில் தூர்ந்தது புலி நகம் பெற்ற வியாக்கிரபாதர் இதனைச் சீர்திருத்தியதன் காரணமாக இதற்கு புலிமடு என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

8) 5. வியாக்கிரபாதர் தீர்த்தம்

திருச்சிற்றம்பலத்திற்கு மேற்கே வியாக்கிரபாதர் பூசை செய்த போது அவரால் உண்டாக்கப்பெற்ற தீர்த்தம் இதுவாகும். இத்தீர்த்தம் நடராசர் கோயிலுக்கு மேற்கேயுள்ள இளமையாக்கி னார் கோயிலுக்கு எதிரில் உள்ளது.

8) 6. அனந்த தீர்த்தம்

இத்தீர்த்தம் சிதம்பரத்திற்கு மேற்குக் கோடியில் இருக்கின்றது. எல்லாம் அழிந்துவிடினும் எஞ்சி நிற்பது சேடம் எனப்படும். இவ்வகையில் எல்லாம் அழிந்த பின்னரும் இருப்பவர் ஆதிசேடன். இவர் பதஞ்சலி என்னும் பெயரில் இங்கு வழிபாடாற்றிய போது இவர் உண்டாக்கிய தீர்த்தம் 'அனந்த தீர்த்தம்' எனப்படுகிறது.

8) 7. நாகச்சேரித் தீர்த்தம்

இத்தீர்த்தம் அனந்தேசுவரத்துக்கு மேற்கில் உள்ளது. பாதாள பிலத்திலிருந்து ஆதிசேடன் பதஞ்சலியாகச் சிதம்பரத்திற்கு வந்து சேர்ந்தார். இப்பாதாள பிலம் ஒரு தீர்த்தமாக ஆகி நாகச்சேரி என்னும் பெயர் பெற்றது.

8) 8. பிரமதீர்த்தம்

திருச்சிற்றம்பலத்திற்கு வாயு திக்கில் பிரமதேவர் சிவலிங்கம் நிறுவி பூசை செய்தார். இச்சிவலிங்கம் பிரமலிங்கம் என்னும் பெயரால் விளங்கிற்று. பிரமர் உண்டாக்கிய தீர்த்தம் பிரம தீர்த்தம் ஆகும்.

8) 9. சிவப் பிரியைத் தீர்த்தம்

திருச்சிற்றம்பலத்திற்கு வடக்கில், பிரமதீர்த்தத்தின் ஒரு கூறாகப்பிரமசாமுண்டி என்னும் சக்தி வடிவில் மேற்றிசைநோக்கி எழுந்தருளியுள்ள தில்லையம்மனுக்கு உரிய தீர்த்தம் இதுவாகும். சிவபெருமானிடம் அன்புகொண்டு இதில் நீராடுவோருக்கு நன்மை உண்டு என்பதற்காக இதற்குச் சிவப் பிரியை என்னும் பெயர் திருவருளால் சூட்டப்பெற்றது.

8) 10. பாற்கடல்

சிவப்பிரியை என்னும் தீர்த்தத்திற்குத் தென் திசையில் பாற்கடல் தீர்த்தம் இருக்கின்றது. இது வியாக்கிரபாதரின் புதல்வராகிய உபமன்னியர் தமக்குப் பசிக்குப் பால் வேண்டும் என்று சிவபெருமானிடம் முறையிட்டு அழுதபோது, சடாமகுடம் தரித்த பரமசிவன் திருப்பாற்கடலை வருவித்துக் கொடுத்தார். அந்தத் தீர்த்தமே பாற்கடலாகும்.

இப்பாற்கடலில் உபமன்னியர் மூழ்கியதாலும், அதன் பாலை உட்கொண்டதாலும் சொல்லுதற்கரிய மேலாகிய சிவஞானம் இவர் பெற்றார். இதனால்தான் கிருட்டிணன் இவரிடம் சிவ தீட்சை பெற்றுக் கொண்டார். உபமன்னியர் முனிவர் மற்ற முனிவர்களுக்கும் சிவஞான போதனை செய்தார். தில்லைக்கு வந்த மாணிக்கவாசகர் இப்பாற்கடலுக்கு அருகில் தங்கியிருந்தார் என்றும் கருத்து நிலவியுள்ளது.

இப்பாற்கடல் தற்போது அழிவுற்ற நிலையில் இருந்து வருகிறது. தை அமாவாசைதோறும சிவகங்கை முதல் பரமானந் கூவம் இறுதியாகவுள்ள தீர்த்தங்களில் நடராசர் எழுந்தருளித்தீர்த்தம் கொடுத்தருளுகிறார்.

9) கோபுரங்கள்

9) 1. தெற்குக் கோபுரம்

இக்கோயிலின் நான்கு திசைகளிலும் நான்கு இராச கோபுரங்கள் உள்ளன. இக்கோபுரவாயில்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நிலைத் தூண்கள் 1 மீட்டர் சதுரமும், 9 மீட்டர் உயரமும் கொண்ட ஒரே கல்லால் ஆனவை. இவற்றின் அடிப்பகுதிகள் கருங்கற்களாலும் மேற்பகுதிகள் செங்கல்லாலும் சுதையாலும் கட்டப்பட்டவை. இக்கோயிலின் கோபுரங்கள் ஒவ்வொன்றும் 7 தளங்களும் 13 கலசங்களும் பெற்றுள்ளன. இவை அடிப்பகுதியில் ஏறத்தாழ ஒரே அளவினதாகிய 27 1/2 மீட்டர் நீளமும், 19 மீட்டர் அகலமும் கொண்டுள்ளன. வடக்கு இராசகோபுரம் 42 1/2 மீட்டர் உயரத்திலுள்ளது ஏறத்தாழ இதே உயரத்தை மற்றக் கோபுரங்களும் கொண்டுள்ளன.

கோப்பெருஞ்சிங்கனுக்குச் சொக்கசீயன் என்னும் பெயரும் இருந்து வந்தது இவரால் கட்டப்பட்ட தெற்குக்கோபுரம் 'சொக்கசீயன் கோபுரம்' என்னும் பெயரிலும் விளங்கி வந்தது. இவர் கி.பி. 1237 ஆம் ஆண்டில் இதனைக் கட்டத்தொடங்கி கி.பி. 1240 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்.

இங்கு இரு மீன் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதைக் கொண்டு இக்கோபுரம் பாண்டியர்களால் கட்டப்பட்டது என்னும் கருத்தைச் சிலர் கொண்டுள்ளனர். கோப்பெருஞ்சிங்கன் இக்காலத்தில் பாண்டியர்களின் கீழ்க் குறுநில மன்னராக இருந்ததால் இவர் பாண்டியர் சின்னங்களாகிய இக்கயல் மீன் உருவங்களை இங்குப் பொறித்தார் எனக் கொள்ளலாம்.[1]

9) 2. மேற்குக் கோபுரம்

இக்கோபுரம் பாண்டிய மன்னன் சடவர்மன சுந்தரபாண்டியனால் கட்டப்பெற்றத தெனக் கல்வெட்டுகள் தெரிகின்றன.[2] இக்கோபுரத்திற்கருகில் உள்ள கற்பக விநாயகரை உமாபதி சிவாசாரியார் தாம் இயற்றிய கோயிற் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

1. எஸ்.ஐ.ஐ. 12, 119, 1937
2. எஸ்.ஐ.ஐ. 4, 628, 629, 630

9) 3. வடக்குக் கோபுரம்

விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் தாம் எய்திய ஒரிசா வெற்றிகளின் நினைவாகத் தில்லைச் சிற்றம்பலவரைத் தரிசித்து இக்கோபுரத்தை கி. பி. 1516 ஆம் ஆண்டில் கட்டினார்.

9) 4. கிழக்குக் கோபுரம்

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-1150) இக் கோபுரத்தைக் கட்டத் தொடங்கியதாகக் குலோத்துங்க சோழன் உலா கூறுகிறது. பிறகு காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனால் (கி பி.1248-1279) இது திருத்துயமைக்கப்பெற்றது. பின்பு இது பச்சையப்ப முதலியாராலும், (கி.பி. 1754-1794) அவர் தமக்கையார் சுப்பம்மாளாலும் திருப்பணி செய்யப் பெற்றது.

10) பிராகாரங்கள்

இக்கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள் உள்ளன. ஆகமங்களில் பிராகாரத்திற்கு ஆவரணம் என்னும் பெயர் காணப்படுகிறது. நடைமுறையில் இது சுற்று எனவும் திருச்சுற்று எனவும் குறிக்கப்படுகிறது. ஐந்தாம் பிராகாரத்தைக் கடந்து படிப்படியாக சிற்றம்பலவனார் சந்நிதியைக் கொண்டுள்ள முதல் பிராகாரத் திற்குச் செல்லவேண்டும்.

10) 1. ஐந்தாம் பிராகாரம்

இப்பிராகாரம் தற்போது நாற்புறங்களிலும் தெற்கு இரத வீதி, மேற்கு இரத வீதி, வடக்கு இரத வீதி, கிழக்கு இரத வீதி என்னும் பெயரில் நான்கு வீதிகள் உள்ளன, இவ்வீதியின் அகலம் 18 மீட்டராகும். முன்பு இக்கோயில் அரணாக இருந்த போது,இது ஓர் அகழியாக அமைந்திருந்தது. இது தற்போது நிரப்பப்பட்டு வீதியாக்கப்பட்டுள்ளது

10) 2. நான்காம் பிராகாரம்

நான்காவது பிராகாரம் இரத வீதிகளையொட்டி இருபுறமும் உயர்ந்த மதில்களைக் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தின் வெளிச் சுற்று மதிலைக் கட்டியவர் மதுரை வீரப்ப நாயக்கன் ஆவார், இப்பிராகாரத்திலுள்ள கோபுரத்திற்கும் இதிலுள்ள மொட்டைக் கோபுரத்திற்கும் இடையிலுள்ள நடைவழிப் பகுதிகள் தவிர மற்றப் பகுதிகள் நந்தவனங்களும் தோட்டங்களும் பரவலாக உள்ளன. இவையாவும் இக்கோயிலுக்குச் சேர்ந்தவை.

10) மூன்றாம் பிராகாரம்

மூன்றாவது பிராகாரம் தென்வடலாக 272 மீட்டர் அளவும் கிழமேலாக 226மீட்டர்அளவும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தில்

மதில்களையொட்டித் திருச்சுற்று மண்டபங்கள் தெற்கிலும் மேற்கிலும் தொடர்ச்சியாக இருக்கின்றன. திருவிழாக் காலங்களில் மக்கள் இங்கு நின்று இறைவனைத் தரிசனம் செய்கிறார்கள்.

நாற்பது ஆண்டுகள் (கி. பி. 1178-1218) ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்கன் இக்கோயில் மூன்றாம் பிராகாரத்தை அமைத்து அதன் சுற்று மதிலையும் எடுத்தார் என்பதைத் தாம் திருபுவனம் பெருங்கோயிலைக் கட்டி அதில் தம்மால் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டில் குறித்துள்ளார். இப்பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருவதி எனவும் இதன் மதில்பகுதி தருமாளிகை எனவும் குறிக்கப்படுகின்றன.

10) 4. இரண்டாம் பிராகாரம்

இரண்டாம் பிராகாரத்தில் மடைப்பள்ளியும், நிருத்த சபை, மகாலட்சுமி சந்நிதி, திருமுறை காட்டிய விநாயகர், தாயுமாணவர், நால்வர், திருமூலநாதர் முதலியோர் சந்நிதிகள் உள்ளன.

10) 5. முதலாம் பிராகாரம்

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120)28-ஆவது ஆட்சி ஆண்டு முதல் விக்கிரம சோழன் ஆறாவது ஆட்சித் ஆண்டு வரை சோழர் ஆட்சியில் படைத்தலைவராக விளங்கிய நரலோக வீரன் இப்பிராகாரம் குலோத்துங்கன் திருமாளிகை என்னும் பெயரில் விளங்குமாறு செய்வித்தார்.

முதலாம் பிராகாரத்தில் திருச்சிற்றம்பலமும், கனகசபையும் உள்ளன. இப்பிராகாரத்தில் நர்த்தன கணபதி, இலிங்கோற்பவர் சுப்பிரமணியர், பிட்சாடனர், வயிரவர், சண்டிகேசுவரர் முதலியோர் சந்நிதிகள் உள்ளன. இப்பிராகாரத்தில் கருவறை மேற்பரப்பைச் சுற்றிலும் நந்தி தேவர் திருவுருவங்கள் உள்ளன.

இப்பிராகாரத்திற்கு விக்கிரமசோழன் மாளிகை எனப் பெயரிட்டு இதனை விளங்க வைத்தவர் நரலோக வீரன் ஆவார். இதனை உறுதிப்படுத்தும் வகையில் சிற்றம்பலம், கனகசபை ஆகிய இவ்விரண்டுக்கும் மூலட்டானத்திற்கும் இடையே உள்ள சுவரில் விக்கிரம சோழன் மூன்றாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு காணப்படுகின்றது.

11) மண்டபங்கள்

இக்கோயிலில் பெரும்பான்மை மண்டபங்கள் மூன்றாம் பிராகாரத்திலும் இரண்டாம் பிராகாரத்திலும் உள்ளன.

மூன்றாம் பிராகாரத்து மண்டபங்கள்

11) 1. முக்குறுணி விநாயகர் கோயில் முன்மண்டபமும் கற்பக விநாயகர் கோயில் மண்டபமும்

முக்குறுணி விநாயகர் கோயில் மண்டபம் 200 சதுரமீட்டர்ப் பரப்பிலும் கற்பக விநாயகர் கோயில் மண்டபம் 36 சதுர மீட்டர்ப் பரப்பிலும் அமைக்கப்பட்டுள்ளன.

11) 2. ஒற்றைக்கால் மண்டபம்

இம்மண்டபம் திருமூல விநாயகர் சந்நிதியில் கட்டப்பட்டு ள்ளது. இதன் தென்புறம் ஒரே தூண் உள்ளது. இதன் மற்றப் பக்கங்களில் இம்மண்டபத்துச் சுவர்களே இதற்கு ஆதாரமாக உள்ளன. இதன் நீளம் 3 மீட்டர்; அகலம் 1 1/4 மீட்டர் ஆகும்.

11) 3. நூற்றுக்கால் மண்டபம்

இம்மண்டபம் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை அடுத்து உள்ளது, இது காலத்தால் பழமையானது. இம்மண்டபம் 43 மீட்டர் நீளத்திலும், 36 மீட்டர் அகலத்திலும் காணப்படுகிறது. இம்மண்டபத்தை முதலாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1120) ஆட்சிக்காலத்தில் அமைச்சர் தலைவனாக விளங்கிய காளிங்கராயன் என்கிற நரலோக வீரன், விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் அவ்வேந்தன் விரும்பிய வண்ணம் அழகுற அமைத்தார் எனக் கூறப்படுகிறது. இவர் தம்மாற் முடிக்கப் பெற்ற இம்மண்டபத்தைத் தம் வேந்தனாகிய விக்கிரம சோழன் பெயரில் விக்கிரம சோழன் திருமண்டபம்எனப்பெயரிட்டார். இச் செய்தி இம்மண்டபத் தூண்ஒன்றில் 'விக்கிரம சோழன் திருமண்டபம்' என்னும் பெயர் பொறிக்கப் பெற்றிருப்பதிலிருந்து விளங்கு கிறது. இங்கு இச்செய்தியைக் கூறும் பாடலும் உள்ளது.

இம்மண்டபத்தில் திருவிழாக் காலங்களில் சிவகாமி அம்மை திருவோலக்கம் எழுந்தருளவும், திருமுறை பாராயணம், புராண நூல் விரிவுரை முதலியவை நிகழ்வதற்கும் பயன்படுத்தப் பெற்றது இம்மண்டபத்தின் மேல் நடுமுகடு செங்கலும் சுண்ணாம்பும் சேர்த்து உள்ளே வளைவுடையதாகக் கட்டப் பெற்றுள்ளது. இம் மண்டபத்தை ஒட்டிச்சிறிய மண்டபம் ஒன்றைக் கட்டி, இதனைத் தெற்கு நோக்கிய மண்டபமாக மாற்றியவர் சடையவர்மன் வீர பாண்டியன். இவர் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் சோழநாட்டிலும் தொண்டை நாட்டிலும் அரசுப் பிரதி நிதியாக இருந்து ஆட்சி புரிந்தவர். இவர் இம்மண்டபத்தில் கி. பி. 1267 ஆம் ஆண்டில் வீராபிடேகம் செய்து முடிசூட்டிக் கொண்டார். இது காரணமாக இம்மண்டபம் 'வீரபாண்டியன் திருமண்டபம்' என்னும் பெயரும் பெற்றுள்ளது,

இம்மன்னர் முடி சூட்டிக் கொண்ட இடம் இப்போது நூற்றுக் கால் மண்டபத்தின் முகப்பு வாயிலாகத் தெற்கு நோக்கியுள்ளது,

இதன் உள்ளே ஏறிச் செல்வதற்கு இருபுறங்களிலும் யானை உருவம் அமைந்த படிவரிசை ஒன்று உள்ளது. இவ்வரிசையில் கீழ்ப்பக்கத்தில் வலப் புறம் கிழக்கு நோக்கியவாறு முனிவர் ஒருவர் வடிவமும், இடப்பக்கத்தில் ஆடல் புரியும் மகளிர் உருவம் காணப்படுகின்றன. இங்குச் சில தூண்களில் வீரப்பாண்டியன் திருமண்டபம் என்பது பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

இந்நூற்றுக்கால் மண்டபத்திற்குத் தென்புறமுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், தம் குலதெய்வமாகிய சோமசுந்தரக் கடவுள் சந்நிதியில் தாம் முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்னும் தமது விருப்பம் காரணமாக இம்மன்னனால் புதிதாக கட்டப்பட்டிருக்கக் கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

11. 4. சிவகங்கைத் தீர்த்தக்கரை மண்டபங்கள்

சிவகங்கைத்தீர்த்தத்திற்கு மேற்புறத்தில் ஒரு மண்டபமும் வடபுறத்தில் ஒரு மண்டபமும், கிழ்ப்புறத்தில் ஒரு மண்டபமும் என மூன்று மண்டபங்கள உள்ளன.

11) 5. சிவகாமியம்மன் கோயில் மணடபங்கள்

சிவகாமியம்மன் கோயில் நுழைவாயிலில் ஒரு மண்டபமும், இந்தச் சந்நிதியின் இரண்டாம் பிராகாரத்தில் ஒரு மண்டபமும் இருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்திலுள்ள இம்மண்டபத்தை இரண்டாம் குலோத்துங்கன் அழகுற அமைத்தார்.

சிவகாம சுந்தரி அம்மன் கோயில் கருவறை முன்புறத்திலும் ஒரு மண்டபம் உள்ளது.

11) 6. பாண்டியநாயகர் சந்நிதி முன்மண்டபம்

இக்கோயில் மூன்றாம் பிராகாரத்தில் வடக்கு கோபுரத்திற்கு அருகில் உள்ளது. இதிலுள்ள முன்மண்டபம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் (கி. பி. 1216 - 1251) கட்டப்பட்டது. தேர் போன்று உருளைகளால்இணைக்கப்பட்டு யானைகள் பூட்டப்பட்ட தோற்றம் இதில் காணப்படுகிறது.

11) 7. ஆயிரக்கால் மண்டபம்

இம்மண்டபம் சிவகங்கைத் தீர்த்தத்திற்குக் கிழக்கில் 207.31 மீட்டர் நீளத்திலும் 115.85 மீட்டர் அகலத்திலும் இருக்கின்றது. இம்மண்டபம் இராச சபை என்று குறிப்பிடப்படுகிறது. இம் மண்டபத்தில் 24 தூண்களைக் கொண்ட 41 வரிசைத் தூண்கள் உள்ளன வெளிப் பகுதியிலுள்ள தூண்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இதற்கு ஆயிரம் கால்கள் உள்ளன என்பதாகக் கருதப்படுகிறது. இம்மண்டபம் 3 மீட்டர் உயரத்தில் உள்ள மேடையின் மீது 7 1/2 மீட்டர் உயரத்தில் உள்ளது.

இம்மண்டபத்தில் ஆண்டுதோறும் மார்கழி, ஆனி ஆகிய மாதங்களில் நடராசர் எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளு கிறார்.

11) 8. பத்தி மண்டபம்

இம்மண்டபம் 62 மீட்டர் நீளமும் 9.14 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இம்மண்டபம் ஆயிரக்கால் மண்டபத்தையும் கிழக்கு நுழைவாயிலையும் இணைக்கிறது. இம்மண்டபத்தில் 96 தூண்கள் உள்ளன.

11) 9. இரண்டாம் பிராகாரத்து மண்டபம்

மூன்றாம் பிராகாரத்திலிருந்து இரண்டாம் பிராகாரத்திற்கு 21 படிகள் இறங்கி வருவோமெனில், சிற்றம்பலவனார் சந்நிதிக்குச் செல்லும் வழியில் இருபுறமும் இரண்டு நீண்ட மண்டபங்களைக் காண்கிறோம். இவற்றைப்போன்று இப்பிரா காரத்தின் தென்புறம் கிழமேலாக நீண்டமண்டபம் ஒன்று அமைந் துள்ளது. திருமூலநாதர் சந்நிதியின் முன்புறமும் ஒரு மணடபம் உள்ளது.

11) 10) முதற்பிராகாரத்து மண்டபங்கள்

கனகசபைக்கு எதிரில் ஒரு மண்டபமும், வடக்கிழக்கில் மற் றொரு மண்டமும் இருக்கின்றன. தென்கிழக்கில் உள்ள மண்டபம் 14.25 மீட்டர் நீளமும் 7 1/2 மீட்டர் அகலமும் கொண்டமைந் துள்ளது இம்மண்டபத்தில் எட்டு வட்ட வடிவத் தூண்கள் 4 1/2 மீட்டர் உயரத்திலுள்ளன. இதற்கெதிரில் நிலைக்கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது.

12. சிற்பங்கள்

இக்கோயில் கோபுரங்களில் காணப்படும் சிற்பங்கள் பல; மற்றப் பகுதிகளில் காணப்படுவன சில. எடுத்துக்காட்டுகளாகச் சில இங்கே குறிக்கப்படுகின்றன.

சிவமூர்த்தங்கள்

12) 1. தட்சினாமூர்த்தி

ஆகமங்கள் குறிப்பிடும் இருபத்து நான்கு சிவமூர்த்தங்களுள் ஒன்றாகிய தட்சிணாமூர்த்தியின் சிற்பம் இங்கு இவரது இடப வாகனத்துடன் காணப்படுகிறது.

12) 2. இலிங்கோற்பவர்

சிற்சபையின் மேற்குப் பக்கத்தில் தீப்பிழம்புகளால் சூழப்பட்ட நிலையில் இலிங்கோற்பவர் சிற்பம் காணப்படுகிறது.

12) 3. கிராதர்

சிவபெருமான் வில்லும் அம்பும் ஏந்தி வேடர் வடிவத்தில் அருச்சுனனுக்குப் பாசுபத அத்திரம் வழங்கும் காட்சி கிழக்குக் கோபுரத்தில் வடக்குப் பகுதியில் உள்ள மாடத்தில் சிற்ப வடிவில் காட்டப்படுகிறது.

12) 4. சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தியும் சண்டேசுவரரும்

கிழக்குக் கோபுரத்தில் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி திருவுருவமும், சண்டேசுவரர் திருவுருவமும் சிற்பவடிவில் காணப் படுகின்றன. தெற்குக் கோபுரத்தின் மேற்கு பக்கத்தில் சண்டே சுவர அனுக்கிரக மூர்த்தி உருவம் சிற்ப வடிவத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

12) 5. கங்காள மூர்த்தி

வடக்குக் கோபுரத்தில் தென்புறத்திலும் கிழக்குப் புறத்துத் கோபுரத்தில் மேற்குப் பகுதியிலும் கங்காளமூர்த்தி திருவுருவங்கள் இருக்கின்றன.

தம் காதுகளில் குண்டலங்களையும் தலையில் மகுடமும் காலில் செருப்புகளையும் அணிந்து கொண்ட நிலையில் இவரது உருவம் சிற்ப வடிவில் காட்டப்படுகிறது. இவர் பக்கத்தில் பூத கணங்களும், முனிவர்களும், தேவர்களும் அஞ்சலி செய்யும் முறையில் காட்சியளிக்கிறார்கள்.

12) 6. இடபவாகனர்

கிழக்குக் கோபுரத்தின் மேற்குப் பக்கத்திலுள்ள ஒரு மாடத்தில் இடபவாகனரின் அழகிய வடிவச் சிற்பம் இருக்கிறது.

12) 7. திரிபுராந்தகர்

அசுரர்களை அழித்து அவர்களின் நகரங்களை எரித்த திரி புராந்தகர் உருவம் தெற்குக் கோபுரத்தில் இருக்கின்றது. இவரது முன்புறத்து வலக்கையில் அம்பும், இடப்புறக் கையில் வில்லும் இருக்கின்றன. மற்றக் கைகளில் மழுவும், வில்லும் இருக்கின்றன. இவருடைய சடைகள் விரிந்துள்ளன. இவரது இடப்பக்கத்தில் கௌரி நின்று கொண்டிருக்கிறார்.

12) 8. பிட்சாடனர்

நிருத்தசபையில் சிற்ப வேலைத்திறன் மிட்க பிட்சாடனர் திருவுருவம் காணப்படுகிறது. தாருகவனத்து முனிவர்கள், அவர்கள் துணைவியர் ஆகியோர் சொக்கடக்கச் சிவபெருமான் ஆடையின்றி, வெற்றரையுடன் இடக்கையில் பிச்சைக் கலனும், மற்றோர் இடக்கையில் சூலமும், தலையில் சடாபாரமும், இடுப்பில் பாம்பும், திருநேத்திரமும், காண்போரைக் கவரும் கூர்ந்த கண்களும் விளங்கத் திருவடியில் / பாதுகையுடைனும் காட்சியளிக்கிறார்.

12) 9. கணபதி

அம்மன் சந்நிதி மண்டபத்தின் தூண் ஒன்றில் நர்த்தன கணபதி சிற்பம் காணப்படுகிறது.

10. சுப்பிரமணியர்

மேற்குக் கோபுரத்தில் கிழக்குப் பகுதியில் சுப்பிரபணியர் மயில் மீது அமர்ந்த நிலையில் தாரகாசுரன் முதலிய அசுரர்களை வதைக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

11. நந்தி தேவர் திருவுருவங்கள்

ஆயிரக்கால் மண்டபத்தில் முகப்பில் நிந்திதேவர் திருவுருவங்கள் ஒழுங்காகப் பொறிக்கப்பட்டுள்ளன.

பிற தெய்வங்கள்

12. கருட நாராயணர்

கருட வாகனத்தில் திருமால் தமதுகையில் அம்பும் சக்கரமும் ஏந்திச் செல்லும் சிற்பங்கள் கிழக்குக் கோபுரத்தின் மேற்குப் பக்கத்திலும் மேற்குக் கோபுரத்தில் கிழக்குப் பக்கத்திலும் காணப்படுகின்றன, இவற்றைவிட அழகிய கருடவாகனத்தில் திருமால் வீற்றிற்கும் காட்சி வடக்குக் கோபுரத்தின் தெற்குப் புறத்தில் காணப்படுகின்றது.

13. பிரமதேவர்

சிவன் கோயில்களின் கருவறையின் வடபகுதியில் பிரம தேவர் உருவம் பொறிக்கப்படுவது வழக்கம். பிரமதேவர் மகுடத்தோடு தம்முடைய இரு கைகளையும் வணக்கம் செலுத்தும் முறையிலும் மற்றொரு கையில் அவர் அட்சர மாலையும், மற்றக்கையில் கமண்டலமும் ஏந்திக் கொண்டும் அன்ன வாகனத்தில் செல்லும் காட்சி இக்கோயிலின் கோபுரத்தில் மேற்குப் பக்க மாடத்தில் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளது.

14. அக்கினி

கிழக்குக் கோபுரத்தில் தெற்குப் பக்கத்திலுள்ள மாடத்தில் சிறந்த மேனியுடனும், ஏழு கைகளுடனும் வேள்விக்குரிய நெய்க் கலம் ஏந்தி காளை வாகனத்தில் அக்கினி உருவம் காட்டப் படுகிறது.

15. துர்க்கை

மேற்குக் கோபுரத்தில் துர்க்கை திருவுருவம் மகிடாசுரனை வதைத்தவண்ணம் காணப்படுகிறது.

16. பத்திரகாளி

மேற்குக் கோபுரத்தில் வடக்குப்பக்கத்தில் கிழக்கு நோக்கிய வாறுபத்திரகாளியின் திருவுருவம் கோரவடிவில் காணப்படுகிறது.

17. சரசுவதி

மேற்குக் கோபுரத்தில் சரசுவதி திருவுருவம் காணப்படுகிறது.

18. தன்வந்திரி

தன்வந்திரி திருவுருவம் பெயர் குறிப்பிட்டு மேற்குக் கோபுரத்தில் சிற்பவடிவில் பொறிக்கப்படுள்ளது.

19. வைஜெயன்

வைஜெயன் திருவுருவம் குறிப்பிடப்பட்ட பெயருடன் மேற்குக் கோபுரத்தில் காணப்படுகிறது.

20. அசுவனி தேவர்கள்

தேவர்களின் மருத்துவர்களாகிய அசுவனி தேவர்கள் இருவர் சிற்பங்கள் தெள்ளியமுறையில் கிழக்குக் கோபுரத்தில் காணப்படுகின்றன. அசுவனி தேவர்களுடைய வலக்கைகள் ஊசின் முத்திரை கொண்டுள்ளன. உருவங்கள் உடற்கட்டுடன் காட்சியளிக்கின்றன.

21. இராகு, கேது

கிழக்குக் கோபுரத்தின் வடபகுதியில் மாடத்தில் இராகு, கேது ஆகியோர் உருவங்கள் இணைந்து காணப்படுகின்றன.

22. சூரியன்

வடக்குக் கோபுரத்தில் கிழக்குப் பக்கத்தில் சூரியனின் அழகிய திருவுருவம் சிற்ப வடிவில் இருக்கின்றது. இதில் அருணன் ஐந்து

குதிரைகளைச் செலுத்துதல் காட்டப்படுகிறது. மேற்குக் கோபுரத்தில் சூரியன் நின்ற நிலையில் சிங்கத்தின் முன் நிற்கும் காட்சியைக் காணலாம்.

23. இந்திரன்

கிழக்குக் கோபுரத்தின் கிழக்குப் பகுதியின் பக்கத்திலுள்ள மாடத்தில் இந்திரன் ஐராவதத்தில் செல்லும் காட்சி சிற்ப வடிவில் இருக்கின்றது.

24. இயமன்

கிழக்குக் கோபுரத்தின் தெற்குப் பக்கத்தில், ஒரு கையில் கதையும் மற்றொரு கையில் பாசமும் கொண்டு மகுடம் தரித்துக் கொண்டு, தம் வாகனமாகிய எருமையின் பின்புறம் நிற்கும் நிலையில் இயமன் உருவம் காட்டப்பட்டுள்ளது.

25. பதஞ்சலி

மனித உடலும் இடுப்பின் கீழ்ப்பாம்புச் சுருள்களுமுடைய பகுதியும் கொண்ட பதஞ்சலியின் உருவம் அமர்ந்த கோலத்தில் கிழக்குக் கோபுரத்தின் வடபுறத்தில் காணப்படுகிறது.

26. வியாக்கிரபாதர்

கிழக்குக் கோபுரத்தின் தென்புறத்திலுள்ள மாடத்தில் வியாக்கிர பாதர் உருவம் சிற்ப வடிவில் காணப்படுகிறது. இவருடைய கைகளிலும் கால்களிலும் புலி நகங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. இவர் தமது வலத்தோலில் ஓர் இடுக்கியும் பூக்கூடையும் தாங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம்

27. அகத்தியர்

கிழக்குக் கோபுரத்திலுள்ள மாடத்தில் குள்ள வடிவில் அகத்தியர் திருவுருவம் காணப்படுகிறது.

28. நாரதர்

கிழக்குக் கோபுரத்திலுள்ள மாடத்தில் வீணையைத் தம் கையில் ஏந்திய வண்ணம் நாரதமுனிவருடைய சிற்பம் அமைக்கப்பட்டு உள்ளது.

29. திருமூலர்

கிழக்குக் கோபுரத்தில் திருமூலர் திருவுருவம் உள்ளது. தமது கையில் அவர் திருமந்திர ஏட்டை ஏந்தியுள்ளார்.

30. புருடாமிருகங்கள்

ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து இக்கோயிலுக்குள் செல்லும் வாயில் கீழ்ப்புற வாயில் இருமருங்கிலும் உட்பகுதியிலுள்ள குடவரையில் ஆண், பெண் வடிவங்களில் திரு உருவங்கள், ஒன்று ஆடவர் முகமும், விலங்கின் உடலும் மற்றது மகளிர் முகமும் விலங்கின் உடலும் கொண்டுள்ளன. இவை புருடா மிருகங்கள் என்னும் பெயரில் குறிக்கப்படுகின்றன.

கோயிலினுள் செல்வோர் தம்மையும் அறியாது தூய்மையைக் கெடுக்கும் தங்கள் செயலால் நிகழும் தீய விளைவுக்குத் தீர்வு காண இப்புருடா மிருகங்களை வணங்குகிறார்கள்.

31) மன்னர் உருவங்களும் சிற்பங்களின் உருவங்களும்

நிருத்த சபையில் மன்னர் சிற்ப உருவம் உள்ளது. இச்சிற்ப உருவம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தியது எனத் தோன்றுகிறது.

வடக்குக் கோபுரத்தில் கிருட்டிண தேவராயர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

கிருட்டிணதேவரராயர் உருவத்திற்குக் கீழே, 1) விருத்தகிரியில் சேவகப்பெருமாள், 2) இவர் மகன் விசுவமுத்து, 3) திருபிறைக்கொடை ஆசாரி திருமருங்கன், 4) இவர் உடன்பிறந்தார் காரணாசாரி ஆகியோர் உருவங்கள் உள்ளன.

13) 2. சுதைச் சிற்பங்கள், விநாயகர், சுப்பிரமணியர்

இக்கோயில் கற்பக விநாயகர்சந்நிதியின் முகப்பில், விநாயகர் சித்தி புத்தி ஆகியோரைத் திருமணம் செய்த காட்சி காணப்படுகிறது. இச்சிற்பத்தில் சிவபெருமானும் உமாதேவியும் வீற்றிருக்கின்றனர், மற்றுமொரு சுதைச் சிற்பத்தில் விநாயகர், இடர்வாகனர். சுப்பிரமணியர் ஆகியோர் திருவுருவங்கள் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு மையத்தில் சிவபெருமான் இடப வாகனத்தில் காட்சியளிக்கிறார். சிவபெருமான திருவுருவத்திற்கு இரு புறங்களிலும் துவாரபாலகர் இருவர் திருவுருவங்கள் இருக்கின்றன.

13) 3. உற்சவ மூர்த்திகள்

உமையம்மை

எழுந்தருள் மூர்த்திகள் எனப்பெறும் உற்சவ மூர்த்திகள் பேரம்பலத்தில் இருக்கின்றன. இவை கலைத்திறன்வாய்ந்தவை. இங்குக் குறிப்பிடதக்கவை சில தலையில் மகுடமும், கைம்மணிக் கட்டில் இரண்டு வளையல்களும், தோள் பகுதியில் கடகமும், கழுத்தில் காசு மாலையும், திகழ்கின்ற, திருமாங்கல்யமும் இடையில் அணிகலனும், காலில் தண்டைகளும் அணிந்த நிலையில் வட்ட வடிவப் பீடத்தில் இடப்பக்கம் சற்றுச் சாய்ந்தவாறு, தம் இடக்கையைப் பீடத்தின் மீது ஊன்றிய வண்ணம், தம் வலக்கை விரல்கள் இரண்டை விரித்து யாதோ ஒரு செய்தி தெரிவிப்பார் போன்றதொரு நிலையில் தேவி காட்சியளிக்கிறார்.

13) 3. 2. பிரதோடநாயகர்

மகுடம் தரித்துக்கொண்ட நிலையில் நான்கு கைகளில் பின் வலக்கையில் மழுவும், பின் இடக் கையில் மானும உள்ளன. முன் வலக்கை அபயம் அளிக்கிறது, முன் இடக்கை ஆட் கொள் ளும் நிலையைக் காட்டுகிறது.

13) 3. 3. பார்வதி

கிரீடம் தரித்துக் கொண்டு காலில் தண்டைகளும் இடுப்பிலும் கழுத்திலும் அணிகலங்களும் பூண்டு வலக்கை விரல்களைச் சற்று விரித்துக் கொண்டு இடக்கையை அடக்கமாக உட்பகத்துல் சாய்த்துக் கொண்டு பார்வதி காட்சியளிக்கிறார்.

13) 3. 4. பதஞ்சலி

ஐந்துலைப் பாம்பின் படத்தின் நிழலில் பதஞ்சலியின் உருவம் உடல் மேற்பகுதி மனித வடிவிலும் கீழ் நிலைப்குதி பாம்பின் எட்டுச் சுருள்களைக் கொண்ட வடிவிலும் நின்ற நிலையில் காணலாம்.

13) 3. 5. சோமக்கந்தர்

நீண்ட சதுர வடிவமுடைய பீடத்தில் சோமக்கந்தர் நான்கு கைகளோடு கால்களில் கழல்கள் விளங்கவும் இடையில் உதரபந் தம் சுருள் வடிவில் அமையவும் மார்பில் காசுமாலை அகலமாக விளங்கவும் காதுகளில் தோடுகள் திகழவும். திருமுகப் பொலிவு ஓங்கவும், தலையில் கரண்டமகுடம் தாங்கியும் அமர்ந்திருக்கிறார். பின் வலக்கையில் மழுவும், பின் இடக்கையில் மானும் கொண்டுள் ளார். முன் வலக்கை அபயம் அளிக்கிறது. முன் இடக்கை விரல்கள் அருள் பாலிக்கும் நிலையில் உள்ளன.

இடப்புறத்தில் உமையம்மை தம் கால்கள், இடை, கைகள், கழுத்து ஆகியவற்றில் நகைகள்அணிந்து, தலையில்மகுடம் தரித்து வலக்காலைப் பீடத்தின் மீது மடக்கி வைத்துக்கொண்டு இடக் காலைத் தொங்கவைத்துக் கொண்டு இருக்கிறார். சிவபெருமான் இடக்காலை மடக்கி வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டுள் ளார். இவ்விருவருக்கும் இடையில் கந்தர் தம் உடல் முழுவதும் பல்வேறு நகைகள் அணிந்து மகுடம் தாங்கி வீற்றிருக்கிறார்.

13) 4. நாட்டியச் சிற்பங்கள்

சிவபெருமான் ''ஆடல் புரிந்த நிலை'' ''அரங்கிடை நூலறி வாளர்அறியப்படாததோர்கூத்தும்'' எனவும்அக்கூத்துபல்லாயிரம் கொள்கருவி இருப்பினும் அக்கருவிகளைக் கொண்டு நாடற்கரிய தாகவுள்ளது எனவும் திருநாவுக்கரசு நாயனார் சுட்டிக்காட்டு

கிறார். (4-2-16, 18) இத்தகைய கூத்தினை நூலறிவாளர்கள் ஒருவாறு 108-ஆக வகுத்தனர்.

கூத்தில் கரம், சிரம் முதலிய உறுப்புகள் பெரும்பங்கு கொள்கின்றன. இவை கரணங்கள் எனப்படும் இக்கரணங்களின்த்துணை கொண்டு நடிக்கப்பெறும் கூத்துகளும் கரணங்கள் என்னும் பெயரில் குறிப்பிடப் பெற்றன. இவற்றைப் பற்றிப்பரதர் ஒரு நூலை இயற்றினார். இதுவே 'பரத சத்திரம்'; இந்நாட்டியக் கரணங்கள் சிற்ப வடிவில் சிதம்பரம் சிற்றம்பலவனார் கோயில் கோபுரங்களிலும் பிற பகுதிகளிலும் வடிக்கப்பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டுகளாகக் கீழே மூன்று கரணங்களின் தன்மைகள் கொடுக்கப்படுகின்றன.

நிருட்டகம்

தோளுக்கும் சிரத்திற்கும் இடையில் கைகளைத் தூக்கியும் தாழ்த்தியும் கால்களையும் அவ்வாறு செய்தலாம். இதில், கால் நுனியில் நின்று குதிகாலை நிலத்தில் தட்ட வேண்டும்.

அஞ்சிதம்

கால்களை மாறிவைத்து, வலப்புற உள்ளங்கால் வெளியில் தெரியும்வண்ணம் வைத்து இடப்புறத்துக் கையை மூக்கு நுனி நோக்கி நீட்டி வலக்கையைக் குறுக்காக இடப்பக்கம் நீட்டி நின்று ஆடுதலாகும்.

ஊர்த்துவம்

வலப்புறத்து முழந்தாளை மார்பின் அளவாக உயர்த்தி அதற்கேற்ப வலக்கையை வீசி நின்று, இடக்கையை இடப்புறத் தோளுக்கு நேராக நிறுத்தி நின்று ஆடுதலாகும்.

நிருத்த சபையில் 2 1/2 மீட்டர் உயரத் தூண்களில் அழகிய முறையில் இத்தகைய நாட்டிய சிற்பங்கள் வரையப்பெற்றுள்ளன.

கிழக்குக் கோபுரத்தின் வடக்குப்புறத்தில் ஒரு மாடத்தில் ஊர்த்தவத் தாண்டவர் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கோபுரத்தின் நிலைப்படியின் மேல்பகுதியில் இக்கோபுரத்திற்குத் திருப்பணி செய்த சுப்பம்மாள் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இவர் பச்சையப்ப வள்ளலின் தமக்கையார். இப்பெயர் பொறிக்கப்பட்டுள்ள இடத்தினைச் சுற்றிலும் மகளிர் ஆடும் நாட்டியங்களின் காட்சிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

வடக்குக் கோபுரத்தின் மையப்பகுதியில் கிருட்டிணதேவராயர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்திற்குக் கிழக்கில் மகளிர்மூவரும் மேற்கில் மகளிர் மூவரும் நடனம்புரியும் காட்சிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேற்குக் கோபுரத்திலும் நாட்டியச் சிற்பங்கள் சில காணப் படுகின்றன.

சிவகாமி சுந்தரி அம்மன் கோயில் முதல் பிராகாரத்திலுள்ள திருமாளிகைப் பத்தி மண்டபத்தின் பதுமவரி திரணை வரிக்கு மேற்பட்ட பட்டிகையில் மகளிரின் நாட்டியங்கள் சிற்ப வடிவில் காணலாம்.

கிழக்குக் கோபுர நாட்டியச் சிற்பங்களின் கீழே அவற்றிற்குரிய நாட்டியச் சாத்திரப் பாடல் பகுதிகளின் சுருக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. நாட்டியச்சாத்திரத்தில் 108 கரணங்கள் குறிப்பிடப் படுகின்றன. இரண்டுக்கு மேற்பட்ட கரணங்கள் கலந்து விளை யாடுவது அங்ககாரங்கள். 108 கரணங்களோடு 32 அங்ககாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இக்கோயிலில் 93 கரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எஞ்சிய 15 கரணங்கள் சிதைந்து விட்டனவோ கோயில் திருப்பணி செய்யப்பட்ட காலத் தில் அப்புறப்படுத்தப்பட்டனவோ முழு விவரங்கள் தெரிய வில்லை. இவற்றில் ஏறத்தாழ 60 சிற்பங்கள் மட்டுமே பரத நாட்டியச் சாத்தித்துச்சிற்பங்களோடுஒத்துள்ளன. 1914ஆம்ஆண்டு தொல் பொருள் அறிக்கை இவற்றை பற்றி ஆய்வு செய்துள்ளது.

13. 5. ஓவியங்கள்

இக்கோயிலில், சிற்பங்களின் எண்ணிக்கைஅளவில் ஓவியங்கள் காணப்படுவதில்லை. இங்கு மிகச் சில ஓவியங்களே காணப் படுகின்றன. அவையாவன :

திருமூலநாதர் கோயில்களின் வெளிப்பகுதிகளில் காணப் பெறும் ஓவியங்கள் - வடக்குப் பகுதிஓவியங்கள்

1) தட்சிணாமூர்த்தி —சின்முத்திரையுடன் தெற்கு நோக்கிய வாறு அமர்ந்த நிலையில் காட்சி.

2) சுகாசனமூர்த்தி —ஒழியாத இன்பத்திற்குக்காரணமான வர் இம்மூர்த்தி. இது இவரது கருணை வடிவக் காட்சி.

3, ஏகபாதர் —இடத்திலும் வலத்திலும் நடுவிலும் முறையே திருமால், பிரமன், உருத்திரர்ஆகியோர்களைக்கொண்ட சிவமூர்த்தி

4) சோமகந்தர் —இடையே முருகப்பெருமான் இரு புறங்களில் சிவபெருமான் உமையம்மை ஆகியோர் திருவுருவங்கள்

5) விக்கின விநாயக அனுக்கிரக மூர்த்தி —விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகருக்கு அருள்புரியும் அனுக்கிரகமூர்த்தி

6) சக்கரதான மூர்த்தி —சிவவழிபாட்டுக்குரிய ஒரு மலர்குறைய அதனை நிறைவுபடுத்த தம்கண்ணைப் பெயர்த்து அதனை மலராக அருச்சனை புரிந்த திருமாலுக்கு ச்சக்கரம் அளித்த சிவபெருமான்

7) விடாபகார மூர்த்தி —இமையோர் வருந்தாவண்ணம் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை ஏற்றுக்கொண்ட சிவபெருமான்

8) சண்டேசுவர —சிவவழிபாட்டுக்கு இடர் விளைவித்த தம் தந்தை காலை மழுவால்வெட்டிய சண்டேசுவரருக்கு அருள் புரிந்த சிவபெருமான் திருவுருவம்

9) கங்காள மூர்த்தி —மாவலியை அழுத்திய திருமாலை அடக்கி அவரது கங்காளத்தை (எலும்பை) ஆயுதமாகக் கொண்ட சிவபெருமான்

மேற்குச் சுவர்ப்பகுதி ஓவியங்கள்

10) இலகுலீசர் —ஆணவமலம் கெட மாணவருக்கு அருள் நோக்கால் சிவபெருமான் உபதேசம் செய்யும் காட்சி

11) அர்த்தநாரீசுவரர் —இடப்புறத்தில் உமை அம்மையும் வலப்புறத்தில் சிவபெருமானும் கொண்ட ஓருருவம்

12) சங்கரநாராயணர் —சங்கரரும் நாராயணரும் இணைந்து நிற்கும் ஒருருவம்

13) வீரபத்திரர் —தக்கன் வேள்வியை அழிக்கச் சிவபெருமான் நெற்றிக்கண்ணில் தோன்றிய வீரபத்திரக் கடவுள்

14) கச சம்மாரமூர்த்தி —மதயானையைக்கொன்று அதன்தோலை போர்த்துக் கொண்ட சிவபெருமான்

15) சலந்தரர் —அசுரன் சலந்தரனைச் சக்கரத்தால் பிளந்து அழித்துக் கொன்ற மாலை சூட்டிக் கொண்ட சிவபெருமான்

16) திரிபுராந்தகர் —திரிபுரங்களைச் சிரிப்பால் எரித்த சிவபெருமான்

17) காலசம்மாரர் —மலரவனும் மாயனும் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டபோது அவர்களை அடக்கித் தாம் பரம்பொருள் என விளக்கிய சிவபெருமான்

18) காம தகன மூர்த்தி —தம்மீது மலர் எய்த காமனை அழித்த சிவபெருமான்

19) பிட்சாடனர் —தாருகவனத்துமுனிவர்களின்துணைவியரிடம் பிட்சை ஏற்கச் சென்று அவர்களைத் திருத்திய சிவபெருமான்

தெற்குச் சுவர்ப்பகுதி ஓவியங்கள்

20) கலியாண சுந்தரர் —உமையம்மையுடன் மணக்கோலத்தில் சிவபெருமான்

21) நடராசர் —சிற்றம்பலத்தில் நடனம் புரியும் நடராசர்

22) இடபாருடர் —தோல்விகாணா வலிமையும் வெள்ளி மலை போன்ற கால்களையுமுடைய இடபத்தின் மீது சிவபெருமான்

23) உமாமகேசுவரர் —உமையம்மையோடு சிவபெருமான்

24) சந்திரசேகரர் —சந்திரனுக்கு அருள்புரியும் வண்ணம் சந்திரனைத் தமது முடியில் சூட்டிக் கொண்ட சிவபெருமான்

பாண்டியநாயகர் கோயில் எனப்படும் ஆறுமுகர் கோயிலின் முன்மண்டபத்தின் உட்புறத்தில் திருமுருகாற்றுப்படையில் விளக்கம்பெறும் ஆறுபடை வீடுகள் ஓவியங்களாக வரையப் பெற்றுள்ளன.

சிவகாமிசுந்தரி அம்மை கோயிலில் காணப்படும் ஓவியங்களுள் திருமால் மோகினி வடிவில் சென்றபோது, முனிவர்கள் அம்மோகினியைக் கண்டு அவ்வடிவத்தின் அழகில் மூழ்கிவிட்ட காட்சியும் பிட்சாடனராகத் திகழ்ந்த சிவபெருமான் அழகிய உருவத்தைக் கண்டு முனிவர்கள் துணைவியர் உள்ளம் நெகிழ்ந்த காட்சியும் சிறப்புமிக்க ஓவியங்களாகும்.

14) கல்வெட்டுகள்

இக்கோயிலில் முந்நூறு கல்வெட்டுகளுக்கு மிகுதியாக உள்ளன. இவற்றுள் சிலவற்றின் படிகளை மட்டும் தொல் பொருள் துறை வெளியிட்டிருக்கின்றது. இவற்றில் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் பெரும்பான்மையின் இக்கோயிலின் நான்கு கோபுர நுழைவாயில்களிலும் இரண்டாம் பிராகாரச் சுவர்களிலும் காணப்படுகின்றன. இக்கோயில் கோபுரங்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் அந்த அந்தக் கோபுரங்கள் கட்டப்பட்ட காலத்தை ஒருவாறு தெரிவிக்கின்றன.

இத்தலத்தின் பெயர்களையும் இங்கு எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமான் பெயர்களையும் கல்வெட்டுகளில் காணலாம்.

''சிற்றம்பலம்'' என்பது இத்தலத்தின் பெயராகும் எனவும் இது வடமொழியில் ''சிதம்பரம்'' எனத் திரிபு எய்தியதாகவும் அரசுக் கல்வெட்டறிக்கை கூறுகிறது.[1] இத்தலம் புலியூர், பெரும் பற்றப் புலியூர், பொற்புலியீர், தில்லை, தில்லையூர் என்னும் பெயர்களில் காணப்படுகிறது.[2] மூன்றாம் இராசேந்திரசோழன் திருக்கண்ணபுரத்துக்கல்வெட்டில்[3] வியாக்கியாபுரத்தில் கனக சபாபதியின் தெய்வக் கமலத் திருவடிகளை இம்மன்னர் வணங்கு வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வியாக்கிரபுரம் என்பது புலியூர் என்பதன் வடமொழி ஆக்கமாகும்.

இங்கு எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமான் பொன்னம் பலக்கூத்தன், பொன்னம்பலநாதன்,[4] ஆனந்தம் தாண்டவப் பெருமாள், நாயனார்,[5] அழகிய சிற்றம்பல உடையார்,[6] ஆளுடைய நாயனார்,[7] சிதம்பரேசுவரர்,[8] தில்லை நாயகத் தம்பிரானார் முதலிய பல பெயர்களில் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளார்.

பிற்காலச் சோழர்கள் செங்கோலோக்கிய காலம் கி.பி.9 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிலுமாகும். சோழன் விசயாலயன் முதல், இறுதியில் ஆட்சிபுரிந்த மூன்றாம் இராசேந்திரன் வரையில் ஒவ்வொருவரும் நடராசப் பெருமான் கோயிலுக்குப் பல திருப் பணிகள் செய்துவந்ததை இக்கோயில் கல்வெட்டுகளும் அக்காலத் திய இலக்கியங்களும் தெரிவிக்கின்றன. இக்கோயிலில் காணப் படும் கல்வெட்டுகளில் விசயாலயன் புதல்வராகிய ஆதித்தன் (கி.பி.870—907) காலத்திய தொன்மைக் கல்வெட்டும் ஒன்றாகும். இது அக்கோயிலின் மூன்றாம் பிராகாரமாகிய இராசாக்கள் தம்பிரான் வீதியில் காணப்படும் நூற்றுக்கால் மண்டபத்திற்கு அருகில் பொறிக்கப்பட்டுள்ளது, திருமூலட்டானப் பெருமானுக்கு நந்தாவிளக்கு எரிப்பதற்காக வகுக்கப்பட்ட அறக்கட்டளையை இது குறிக்கிறது. நம்பி ஆண்டார் நம்பி தாம் இயற்றிய திருத் தொண்டர் திருவந்தாதியில், ''சிற்றம்பலமுகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்'' எனக் குறிப்பிடுவதால் ஆதித்தன் கொங்கு நாட்டை வென்று கொணர்ந்த பொன்னால்அம்பலத்திற்குப்பொன் பொன் வேய்ந்தார் எனக் கருதலாம்.

---

1) 1914 ஆம் ஆண்டறிக்கை ; பத்தி 113
2) ஆண்டறிக்கை 1888 எண் 117; ஆண்டறிக்கை 1913 எண் 339
3) ஏ ஆர் இ – 515/1922
4) ஏ ஆர் இ - 622-1988
5) ஏ ஆர் இ - 353-13
6) ஈ பி ஐ - 1914
7) எஸ்.ஐ.ஐ. 280 - 13
8) எஸ்.ஐ.ஐ. 332 - 13

முதல் பராந்தகன் (கி. பி. 907 - 948)

ஆதித்தன் புதல்வன் முதல் பராந்தகன். ''சிவனது பாதத் தாமரையில் உறையும் வண்டு'' எனத் திருவாலங்காட்டுச் செப் பேட்டின் 53 ஆவது பாடல் இவரைச் சிறப்பிக்கிறது. இவரும் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தார் என இலேடன் செப்பேடும் விக்கிரமசோழன் உலா, கண்டராதித்தர்(கி பி. 949-957)இயற்றிய திருவிசைப்பா ஆகியவை கூறுகின்றன. இவற்றின்அடிப்படையில் இவருக்குக் ''கோயில் பொன்வேய்ந்த பெருமாள்'' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவர் காலத்தில் சிதம்பரம் இரண்ய சபை, கனக சபை, பொன்னம்பலம் என விளங்குவதாயிற்று.

முதல் இராசராசன் கி.பி. 985 - 1014)

தில்லைச் சிதம்பரம் கோயில் மீது பற்றுக்கொண்ட இம்மன்னர் காலத்திய கல்வெட்டுகள் மறைந்தொழிந்தன. தமது காலத்தில் மறைந்திருந்த தேவாரப் பாக்களைத் தேடிக் கொணர்ந்ததை முன்னிட்டுத் தில்லை மூவாயிரவர் இவருக்குச் சிவபாதசேகரன் என்னும் பெயரைச் சூட்டினர்.

முதல் இராசேந்திரன் (கி. பி.1014 - 1044)

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளுள் முதல் இராசேந்திரன் 24 ஆம் ஆண்டு கல்வெட்டு மிகத்தொன்மை வாய்ந் தது. இது விரவு நிலத்தில் 'எழுபதேகால் எறைக் காணியில்' களர், கொல்லை நத்தம் ஆகியவை நீங்கலாகவுள்ள நிகரம் முப்பத்து நான்கே காலரைக்கால் நிலத்தின் நாற்பது வேலி நிலத் திற்குரிய 4,500 கலம் நெல்லில், மேல்வாரத்தின் 2250 கலத்திற் குரிய 264 1/2 காசும், வேறு வகையில் வந்த 40 காசும் இக் கோயில் செலவுகளுக்காக ஒரு நிதி அமைக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இராசேந்திர சோழன் (கி.பி.1063 - 1069)

இம்மன்னர் தில்லையில் பார்வதி நாயகனுக்குத் திரைலோக் கிய சாரம் என்னும் மாணிக்கத்தைக்காணிக்கையாகச்செலுத்தினார் என்பதாகக் கன்னியாகுமரிக் கல்வெட்டொன்று கூறுகிறது.

முதல் குலோத்துங்கன் (கி. பி. 1070 - 1120)

ஐம்பது ஆண்டுகள் செங்கோலோச்சிய இம்மன்னர் ஆட்சிக் காலத்தில் தில்லைச் சிற்றம்பலவனார் கோயில் இம்மன்னராலும் இவருடைய படைத்தலைவர்களாலும் சிறப்புற்றது. இதனைச் சயங்கொண்டார் இயற்றியுள்ள கலிங்கத்துப்பரணி

போற்றுகிறது.[10] பெரும்பற்றப் புலியூரில் இம்மன்னருக்கு ஒரு மாளிகை இருந்ததைக் காஞ்சிக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இம்மன்னர் காலத்தில் சொன்னவாறறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு கோயிலும், புராணச் சொற்பொலிவாற்ற ஒருமண்டபமும் கண்டமாதவன் அமைத்ததை நீடூர்க்கல்வெட்டு விளம்புகிறது. சொன்னவாறறிவார் என்னும் சொற்றொடர் விலங்குகள் முதலியன பேசிக் கொண்டதையும் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர் என்பதைக் குறிப்பிடுகிறது. இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

கனகசபை, கோவிந்தராசர் சந்நிதி ஆகியவற்றைச் சுற்றியுள்ள இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரின் வெளிப்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள இம்மன்னர் 44 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1114) இம்மன்னர், இவர் தேவியர் சோழகுல வல்லி இவர் தங்கை குந்தவை ஆகியோர் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளதைக் குறிப்பிடுகிறது. ஒரு நந்தவனம் அமைப்பதற்காகவும், மகேசுவரர்களுக்கு உணவளிக்க ஒருமடம் அமைப்பதற்காகவும் தேவைப்பட்ட நிலத்தை இம்மன்னரின் தங்கை மதுராந்தகிஆழ்வார் அளித்ததை ஒரு கல்வெட்டுதெரிவிக்கிறது.[11] இதில் இவர் கம்போசு(கம்போடிய) மன்னரிடமிருந்து பெற்ற விலைமதிப்புடைய ஒரு கல்லை எதிரம்பலத்திற்கு முன்புறம் நிறுவியதாகவும் கூறுகிறது.[12] குந்தவிஆழ்வார் ஒரு பொன் கலசம் அளித்ததையும் இது கூறுகிறது. இவர் திருக்கண்ணாடி அளித்ததையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.[13]

இரண்டாம் பிராகாரத்தின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 45 ஆம் ஆண்டு (கி.பி 1115 ஆம் ஆண்டு)க் கல்வெட்டு இளங்கார்குடி இராசேந்திரசோழ அனந்தபாலன் என்கிற இராசாதிராசன் நந்தவனம் அமைப்பதற்காகவும், தில்லைவாழ் அந்தணர் மடத்தில் வழிபடுவோர்களுக்கு உணவு அளிப்பதற்காகவும் பணம் கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

---

9) தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி - 4 எண்-223 - (கிருஷ்ணசாஸ்திரி பதிப்பு)

10) "பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருநைக் கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழ்த்தினவே"

11) 117 - 1888

12) எபிகிராபிகா இந்தியா - தொகுதி-4; பக்கம் 70-71.
இந்தியன் ஆண்டிகுவரி - தொகுதி–23; பக்கம் 298

13) 119 - 1888

விக்கிரம சோழன் (கி. பி. 1118- 1136)

இம்மன்னர் இக்கோயிலின் சில பகுதிகளைக் கட்டியதைப் பற்றியும் தமது 10 ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1128) இக்கோயிலுக்கு விலைமதிப்புடைய நன்கொடைகள் அளித்ததையும் திருமால்வாடிக் கல்வெட்டு கூறுகிறது.[14] இங்கு இவர் கோபுரங்கள், கூடங்கள் ஆகியவற்றிற்குத்திருப்பணி புரிந்தார் எனபதும் பொன்னம்பலத்திற்குச் சுற்றிலும் பொன்வேய்ந்தார் என்பதும் இக் கல்வெட்டிலிருந்து தெரியவருகின்றன.

கிழக்குக் கோபுரத்திற்கு வடக்கில் மூன்றாம்பிராகாரத்திலுள்ள தூணில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு [15] இத்தூணைக் கொண்டுள்ள மண்டபம் அகளங்கனால் (விக்கிரம சோழனால்) கட்டப்பட்டது என்பதைக் கூறுகிறது.

நடராசர் கோயில் முதல் பிராகாரம் கீழ்ப்புறத்துச் சுவரின் இடப்புறத்தில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் மூன்றாவது ஆட்சி ஆண்டு 95 ஆவது நாளிட்டகல்வெட்டு நந்தவனத்திற்காகத் திரு மெய்யூர் உய்ய கொண்டார் வளநாட்டில் வட்டம் மணார்க்குடி செயங்கொண்ட சதுர்வேதி மங்கலத்தில் நான்கு குடிகளோடு ஒரு கிராமம் திரைமுனாட்டுத்திரைமூர்வாசி அளித்த செய்தியும்,திருச்சிற்றம்பலமுடையார் கோயிலில் மந்திரப் புட்பத்திற்காக, பெரும்பற்றப் புலியூரிலுள்ள பண்ணங்குடிச்சேரி என்கிற பரகேசை நல்லூர்க் கிராமத்தில் நிலமளித்த செய்தியும் அறிவிக்கப்படுகின்றன.

முதல் குலோத்துங்கன் 28 ஆவது ஆட்சி ஆண்டு முதல், முதல் விக்கிரமசோழன் ஆறாவது ஆட்சி ஆண்டு வரையில் அதாவது கி.பி. 1098 முதல் கி.பி.1124 வரையில் சோழர் ஆட்சியில் பணி புரிந்த நரலோக வீரனின்அறச்செயல்களை இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. [17] இச்செயல்கள் முப்பத்தொரு வடமொழிப் பாக்களிலும் முப்பத்தேழு தமிழ் வெண்பாக்களிலும் பாராட்டப்பெறுகின்றன. இவற்றில் பல இத்திருக்கோயிலைப் பற்றியவை; சில சமுதாயப்பணிகள் பற்றியவை; ஒன்று அரசுப் பணி பற்றியது.

கீழ்க்காணும் பணிகளை ஆற்றியுள்ளான்.

கோயில் பணிகள்

1) சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததும். பேரம்பலத்திற்குச் செம்பு வேய்ந்ததும்

---

14) எஸ். ஐ.ஐ. - தொகுதி 3 பகுதி 2; பக்கங்கள் 183 - 186
15) ஏ. ஆர்.இ. - 109/1935
16) 268/1913
17) 120/1888- எஸ்.ஐ.ஐ. தொகுதி எண் 225

2) பொன்னம்பலத்தைச் சுற்றிலும் பொன் விளக்கு அமைத்தது
3) நூற்றுக்ககால மண்டபம், மாகிக் கடலாட்டு மண்டபம், திருப்பதிக மண்டபம் வீதி விளக்கு மண்டபம் ஆகியவற்றை அமைத்தது
4) அம்பிகை கோயிலும் அதன் திருச்சுற்றும் அமைத்தது
5) அம்பிகை திருமஞ்சனத்திற்கு நிவந்தமும், பீதாம்பரமும் அமைத்தது. ஆயிரம் தாழி அமைத்தது.
6) கோயிலுக்குப் பொற்படிக்கம், பொன் எக்காளம், கற்பூரதீபம், பாலமுதம், ஆயிரம் பழம்நெய் அபிடேகம் ஆகியவற்றை அமைத்தது
7) நடராசர் வீதி உலாவின்போது தூபம் இட ஏற்பாடு செய்தது
8) கோயிலில் ஒளித் திருக்கோலத்திற்கு ஏற்பாடு செய்தது
9) பெருமானுக்கு ஆயிரம் பசுக்கள் அளித்தது
10) பெருமானுக்கு யானை அளித்தது
11) கோயிலுக்கு நந்தவனம் அமைத்தது
12) தில்லைவாழ் அந்தணர்களுக்குத் திருமடம் கட்டியது
13) தீர்த்தத் திருப்பணி செய்தது
14) மூவர் தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்தது

சமுதாயப் பணிகள்

1) வீதியில் விளக்கும் பொற்கொடியும் அமைத்தது
2) தில்லையில் கல்வி பரப்பியது
3) தில்லைக் குழந்தைகளுக்கு எண்ணெயும் பாலும் வழங்கியது
4) ஏரிக்கு மதகு கட்டுதல் முதலிய பணிகள் புரிந்தது.

நடராசப் பெருமான் கோயில் பிராகாரத்தையும் கோவிந்தராசர் சந்நிதி பிராகாரத்தையும் விக்கிரமசோழன் திருமாளிகை எனவும், திருமூலட்டானேசுவரர்கோயில் அமைந்துள்ள இரண்டாம் பிராகாரம் குலோத்துங்கன் திருமாளிகை எனவும் விளங்குமாறு செய்வித்தது

மேலும் இவவீரன் தில்லைப் பெருமானைத் தம் குலநாயகம் எனக்கொண்டாடியதாக ஒரு கல்வெட்டுப்பாடல் தெரிவிக்கின்றது.

இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133 - 1150)

விக்கிரமசோழனின்புதல்வனாராகியஇரண்டாம்குலோத்துங்கன் இக்கோயிலுக்குச் செய்த பணிகள் பல. தாம் தில்லை நகருக்கு ஒளியூட்டிய மன்னர் எனவும் ஒரு கல்வெட்டில்தெரிவித்துள்ளார். [18]

18 ஏ ஆர் இ 157/1902

இவர் ஏழு நிலைக் கிழக்கு கோபுரத்தையும் சிவகாமி சுந்தரி கோயிலையும் கட்டியதோடன்றி இக்கோயிலின் பல்வேறு பகுதிகளுக்குப் பொன்வேய்ந்தார் என்பதாக இவர் மீது ஒட்டக்கூத்தர் பாடிய உலா தெரிவிக்கின்றது. இம்மன்னர் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததால் இவருக்குப் 'பொன் வேய்ந்த பெருமாள்' என்னும் பெயர் விளங்குவதாயிற்று.[19] இதே பணிக்காகத் திருப்பாலைவனம் கல்வெட்டுகள்[20] குறிக்கிறவாறு இவர் பேரம்பலம் பொன்வேய்ந்தருளிய இராசகேசரிவர்மன் என்னும் பெயர் தாங்கினார்.

மூன்றாம் குலோத்துங்கன்

இம்மன்னர் இரண்டாம் ஆண்டு 121 ஆம் நாளிட்ட கல்வெட்டு வைதும்பராயன் வேண்டுகோளின்பேரில், வில்லவராயனால் வெளியிடப்பட்டது. இது இம்மன்னரின் அலுவலர்பதின்மரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. இம்மன்னர் இரண்டாம் ஆட்சி ஆண்டு 125 ஆம் நாளிட்ட கல்வெட்டு. இவ்வூர் அருள்மொழி ஈசுவரன கோயிலில் உள்ள சுப்பிரமணியர், பிள்ளையார் சந்நிதிக்கு உரிய நிலங்களின் பெயரிலுள்ள தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களில் எட்டாம் வகுப்பிற்கு மேற்பட்டவை என அறிவிக்கப்பட்டவற்றை எட்டாம் வகுப்பில் (தரத்தில்) பாகுபாடு படுத்தப்பட வேண்டும் எனவும், எட்டாம் தரத்திற்குக் கீழ்ப்பட்டவை அவ்வாறே இருந்து வரவேண்டும் எனவும், வரிவிதிக்கப்பட்ட நிலங்களின் பட்டியலில் இதுவரையில் சேர்க்கப்பட்டிருந்த திருத்தொண்டத் தொகை ஈசுவரமுடையார்கோயிலின் இடம் அதனைச்சார்ந்துள்ள பகுதிகள் புனிதகுளம் ஆகியவற்றை தீர்வை விதிக்கப்பட்டற்வற்றிகுரிய அப் பட்டியலிலிருந்து நீககிவிட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது. இந்த ஆணை பெரும்பற்றப் புலியூர் அவையின் நிலம் அளவிடும் பெருமக்களால் (நில அளவைக் குழுவினரால்) நிறைவேற்றப் பட்டது[20]

நல்ல வளம் பெருக எனத் தொடங்கும் இம்மன்னர் மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, தொண்டைமான் ஆணைகளுக்கேற்ப தன விநோதநல்லூர் என்கிற மிதினிக்குடியில் நந்தவனத்திறகாக அளிக்கப்பட்ட நிலம் வரியிலி நிலமாக்கப்பட்டது என்பதையும், இது விக்கிரமசோழன் திருமாளிகையில் பொறிக்கப்பட்டது என்பதையும் கூறுகிறது.

இம்மன்னர் ஆறாம் ஆண்டு ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, இராசாதிராச வளநாட்டுப் பெரும்பற்றப் புலியூர்த் தனியூரில் இரண்டு விளக்கு வைப்பதற்காகத் திருக்கிலாஞ்சேரி மகாதேவர் கோயிலுக்கு மணலூர் சிற்றூர் நிலத்தை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது[21]

19) ஏ ஆர் இ 349-315/1928-29
20) 263/1913; 262/1913
21) 260/1913

இம்மன்னர் ஏழாம் ஆண்டு, 26 ஆம் நாளிட்ட கல்வெட்டு ''புயல்வாய்த்து வளம் பெருக'' எனத் தொடங்குகிறது. இது உய்யக் கொண்டார் வளநாட்டின் உட்பிரிவாகிய பாம்பூர் நாட்டிலுள்ள விசயராசன் என்கிற இராசேந்திர சோழ வளநாட்டு மதுராந்தக தேவன் பொன்னம்பலக் கூத்தன், இராசேந்திர சோழ வளநாட்டின் உட்பிரிவாகிய வெந்தலை வேலூர்க் கூற்றத்தின் தலைவன் (பொன்னம்பலக் கூத்தன் என்கிற விசயராகவ உதையஞ்சன்) ஆளுடையார் தெய்வத்திற்காகவும், தவம் புரிவோர்களுக்காகவும் விலைக்குவாங்கிய நிலங்கள் தோட்டக்காரர்கள் நால்வரால் கவனித்துப் பார்க்கப்பட வேண்டும் எனவும் அந்நிலங்களுக்கு வரி நீக்கப்பட்டது எனவும் கூறுகின்றது.[22]

இம்மன்னர் ஏழாம் ஆண்டு 225 ஆம் நாளிட்ட கல்வெட்டு இக்கோயிலுக்கு மலர்கள், தேங்காய்கள் ஆகியவை வழங்கப்படுவதற்காக ஒரு நிலத்தைப்பற்றி ஏற்பாடு செய்வதற்குத் தொண்டைமான் பிறப்பித்த ஆணை விக்கிரமசோழன் திருமாளிகையில் பொறிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது.[23]

இம்மன்னர் 7 ஆம் ஆண்டு 240 ஆம் நாளிட்ட கல்வெட்டு தோட்டக்காரர் நால்வரால் நந்தவனம் வைப்பதற்காக இராசாதிராச வளநாட்டு தனி ஊராகிய பெரும்பற்றப்புலியூர் மூலப்பருடை அவையோரிடமிருந்து, எயில் நாட்டுக் களத்தூர்த் தொண்டைமான் என்கிற உய்யவந்தான் திருமலைப்பாடி உடையானால் வாங்கப்பட்டு அளிக்கப்பட்ட நிலங்களுக்குரிய வரிதள்ளுபடி செய்ததைக் குறிக்கிறது.[24] இம்மன்னர் 9 ஆம் ஆட்சி ஆண்டு 88ஆம் நாளிட்ட கல்வெட்டு நந்தவனம் அமைப்பதற்காகக் கேரளராசன் என்பான் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு நிலங்களின் அளவுகள், நில அளவை முதலிய விவரங்களை நுட்பமான முறையில் தெரிவிக்கின்றது.[25]

இம்மன்னர் 11ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நந்தவனத்திற்காக வாழுவராயன் என்போன் நிலம் அளித்ததற்கு இம்மன்னர் ஒப்பளிப்பு வழங்கியதையும் இக்கோயில் நந்தவனம் பற்றிக் குடியானவர்களுக்கு இருந்து வந்த உரிமைகள் கடமைகள் ஆகியவை இன்னவை என்பதையும் பெரும்பற்றப்புலியூர் மூலப்பருடை அவை வகுத்த ஒழுங்குமுறையையும் குறிப்பிடுகிறது.[26]

இம்மன்னர் 11ஆம் ஆட்சி ஆண்டு 53ஆம் நாளிட்டகல்வெட்டு கங்கராயனால் அளிக்கப்பட்ட சில நிலங்களுக்கு வரியும் மற்ற வரி விதிப்புகளும் விலக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இக்கோயில் தேர்த் திருவிழா நடத்த வேண்டும் என்பதாகவும், குடிமை வரித்தொகையாக 100 காசும், ஒவ்வொரு வேலி நிலத்தின் பேரில் வீரபோக்கியமாக 100 காசும் பெறவேண்டும் என்பதாகவும் ஆணை பிறப்பிக்கப் பட்டதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.[27]

22) 8/1936
23) 287/1913
24) 4/1936
25. 457 / 1902
26. 458 / 1902
27. 294 / 1913

இம்மன்னர் 11ஆம் ஆட்சி ஆண்டு 115ஆம் நாளிட்ட கல்வெட்டு, இறைவனுக்காகப் பெரும்பற்றப்புலியூரின் சிற்றூராகிய தில்லை நாயக்க நல்லூர் என்கிற கடவாய்ச் சேரியிலுள்ள தாயினும் நல்ல பெருமாள்தோட்டத்தைப்பராமரித்துவருவதற்காகப்பாண்டிகுவசலி வளநாட்டின் உட்பிரிவாகிய எயில் நாட்டின் களத்தூர் ஆரய்யனால் பலரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு அளிக்கப்பட்ட நிலங் களுக்கு வரிவிதிப்பு விலக்கு அளிக்கப்பட்டதைக் கூறுகிறது [28]

இம்மன்னர் 12-ம் ஆண்டு, 125 ஆம் நாளிட்ட கல்வெட்டு இருங் கோளர்ன் என்கிற எதிரிலி சோழன்என்பான்பலரிடமிருந்து,தேவை பட்ட நிலங்களை விலைக்கு வாங்கிய பின்னர், பெரும்பற்றப் புலி யூரின் சிற்றூராகிய பரகேசரி நல்லூரில் விக்கிரம சோழீசுவரம் உடையார் என்னும் ஒரு கோயில் அமைத்ததன் பேரிலும் இங்குப் பிராமணர்களுக்கும் கோயில் பணியாளர்களுக்கும் வீடுகள் ஏற்பாடு செய்ததன் பேரிலும், அந்நிலத்திற்குரிய தீர்வையை அரசுக்குச் செலுதத வேண்டிய நில வருவாயிலிருந்து கழித்து விடுவதற்காக இமமன்னர் பிறப்பித்தமூல ஆணையின் ஆவணங்கள் இக்கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும் எனவும், இந் நடவடிக்கை கோயிலின் சுவர்களில் பொறிக்கப்பட வேண்டும் எனவும் கூறுகிறது. [29]

இம்மன்னர் 16ஆம் ஆட்சி ஆண்டு 224 ஆம் நாளிட்ட கல் வெட்டு நந்தவனம் வைப்பதையும் பணியாளர்களுக்குத் தேவைப் பட்ட நிலம் நன்கொடை அளித்ததையும் குறிக்கிறது. அப்போது ஊர் கணக்காளர் பராமரித்து வந்த கணக்குகளோடு ஒப்பிட்டுப் பார்த்தலில் மிகுதியான நிலம் இருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டால் முந்திய நிலப்பரப்பு திருத்திக் கொள்ளப்பட்டது மற்றும் நிபந்தக் காரருக்குரியவை என வழக்கமாகவுள்ள பணிகளிலிருந்து தோட்டப் பணியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. [30]

இம்மன்னர் 17ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு விளக்கும் அதன் நிலையும் பராமரிக்கப்படுவதற்காக 1100 காசுகளின் வட்டி அளித்ததைக் குறிக்கின்றது. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளின் இறுதியில் இந்நன்கொடை புதுப்பிக்கப்பட வேண்டும், எனவும் அசல்தொகை ஒவ்வொரு கால அளவின் இறுதியிலும் மூலப்பருடை அவையின் முன் கொண்டு வந்து காட்ட வேண்டும் எனவும் நிபந் தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. [31]

இம்மன்னர் 20ஆம் ஆட்சி ஆண்டு, 121 ஆம் நாளிட்ட கல் வெட்டு ஒரு விளக்கு எரிப்பதற்காக வழங்கப்பட்ட நன்கொடை யைத் தெரிவிக்கிறது. [32]

---

28. 7 / 1936
29. 309 / 1913
30. 311 / 1913
31. 264 / 1913
32. 310 / 1913

இம்மன்னர் 20ஆம் ஆண்டு 121ஆம் நாளிட்ட கல்வெட்டு ஒரு நந்தவனம் வைப்பதற்காக ஒரு நிலமும் அதற்கு நான்கு பணியாளர்களை நியமிப்பதற்காகமற்றொரு நிலமும் வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்நிலம் இக்கோயிலில் மற்ற நிலங்களோடு சேர்க்கப்பட வேண்டும் எனவும் அளவுகளில் காணப்படும் மிகுதி (மடக்கு) கணக்குகளிலிருந்து கழிக்கப்படவேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டதைக் குறிக்கிறது. [33]

இம்மன்னர் 32ஆம் ஆண்டு 160 ஆம் நாளிட்ட கல்வெட்டு, பெரும்பற்றப் புலியூர்ச் சிற்றூராகிய கோயில்பூண்டி ஊர் நந்தியுன்மன் என்கிற பொன்னம்பலக் கூத்தன் ஆளுடையார் கோயிலுக்கு நன்கொடை அளித்ததையும் இதனைப்பராமரிப்பதற்காக மேற்கு நாட்டு தியாகவல்லி சதுர்வேதி மங்கலத்தின்சிற்றூராகிய சேருண்டி மங்கலத்தில் உள்ள ஓர் நிலத்தை அவர் நன்கொடை அளித்ததையும் குறிப்பிடுகிறது. நந்திபன்மன் வேண்டுகோளின் பேரில், இம்மன்னர் அலுவலர்கள் இந்த நடவடிக்கையையும் நனகொடைகளையும் கோயிலில் சுவர்களில் பொறித்தார்கள். [34]

இம்மன்னர் 34 ஆம் ஆண்டு 45 ஆம் நாளிட்ட கல்வெட்டு தலைவர்களாகிய பொத்தப்பச்சோழன் காரணை விழுப்பேரையன் ஆகியோர்களின் வேண்டுகோளின் பேரில், இக்கோயிலில் நந்தவனம் வைப்பதற்காக இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தின் நன்கொடை பற்றிய மூல ஆவணங்கள் இக்கோயில் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன எனவும் அவற்றின் விவரங்கள் கோயிலின் சுவர்களில் பொறிக்கப்பட்டன எனவும் கூறுகிறது, [35]

இம்மன்னர் 34 ஆம் ஆண்டு 52 ஆம் நாளிட்ட கல்வெட்டு, தாம் மதுரை, கருவூர், ஈழம் வென்று பாண்டியர் ஆட்சியைக்கைக் கொண்டு முடிசூட்டிக் கொண்டதையும், இம்மன்னர் தம் வீரர்களைப் பாராட்டியதையும், நந்தவனப் பணியாளர்கள் நால்வர் இருவாட்சி, மல்லிகை, நந்தியாவட்டை ஆகியவற்றின் பூக்களை ஒழுங்காகக் கோயிலுக்கு வழங்கிவர வேண்டும் என்பதையும் இம் மலர்கள் கிடைக்கவில்லையெனில் மற்றப் பூக்கள் அளிக்கவேண்டும் என்பதையும் கூறுகிறது. [36]

இம்மன்னர் 36 ஆம் ஆண்டு 100 ஆம் நாளிட்ட கல்வெட்டு நந்தவனத்திற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் பல ஓரளவு தோட்டப் பணியாளர்களால் அனுபவிக்கப்படுகின்றனஎனவும், நன்கொடை அளித்தவர்கள் வேண்டுகோளுக்கேற்ப, இந்நிலங்கள் கோயிலின் திருநாமத்துக் காணி நிலங்களுடன் சேர்க்கப்பட்டன எனவும் இவ் விவரம் கோயில்சுவர்களில் பொறிக்கப்பட்டதுஎனவும் கூறுகிறது.

---

33) 310/1913
34) 273/11913
35) 298/1913
36) 313/1913

திருமந்திர ஓலை (ஆவணம் எழுதியவர்) (மூன்றாம் குலோத்துங்கன் அரசுச் செயலாளர்களில் ஒருவராகிய) நெறியுடைச் சோழ மூவேந்த வேளான்[37] அம்மன் கோயிலுக்குப் பூக்கள் வழங்குவதற்காக ஒரு நந்தவனம் அமைக்க நிலம் வழங்கியதை இம்மன்னர் 39 ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகிறது. இது இம்மன்னர் 33 ஆம் ஆட்சி ஆண்டில் எடுத்த நடவடிக்கை ஒன்றையும் குறிப்பிடுகிறது.[38]

இம்மன்னர் 39 ஆம் ஆண்டு 224 ஆம் நாளிட்ட கல்வெட்டு இக்கோயிலுக்கு 200 செந்தாமரை மலர்கள் வழங்கக் கிளியூர் இலங்கேசுவரன் என்போன் நிலங்கள் அளித்ததையும் அவற்றில் செடிகளை வைத்தவர்களின் பராமரிப்புக்காகவும் நிலங்கள் அளித்ததையும் விக்கிரமசோழன் திருமாளிகையில் பொறிக்கத் தொண்டைமான், திருவையாறு உடையசர், மதுராந்தக பிரமராயன் ஆகியோர் பிறப்பித்த ஆணையையும் குறிப்பிடுகிறது. மற்றும்பழைய ஆவணம்கிழிந்துவிட்டபடியால் அக்கொடையாளரே இம்மன்னர் 34 ஆம் ஆண்டு 52 ஆம் நாளில் நந்தவனம் அமைக்க ஒரு நிலம் அளித்தது பொறிக்கப்பட்டது.[39]

இராசகேசரி மூன்றாம் இராசராசன்

இம்மன்னர் இரண்டாம் ஆண்டு 14 ஆம் நாளிட்ட கல்வெட்டு இக்கோயிலில் நந்தவனம் அமைக்க நிலம்அளித்ததைக் கூறுகிறது. இந்நிலக்கொடை இக்கோயிலின் சுவரில் பொறிக்கப்படவேண்டும் எனவும், மூல ஆவணங்கள் கோயில் கருவூலத்தில் வைக்கப்படவேண்டும். எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[40]

இம்மன்னர் 3 ஆம் ஆண்டு 57 ஆம் நாளிட்ட கல்வெட்டு நிகரில்லாச் சோழ சோழமண்டலம் என்கிற நூலம்பாடி தலைவர் விசய அணுலம்பன் புதல்வி உமையாள், தாம் பலரிடமிருந்து விலைக்கு வாங்கிய நிலத்தை நந்தவனத்திற்காக அளித்ததைக் குறிப்பிடுகிறது. இதற்கு அரசு அதிகாரிகள் சிலரும் கோயில் அதிகாரிகளில் மூன்று தொகுதியினரும் கையொப்பமிட்டுள்ளனர்.[41]

இம்மன்னர் மூன்றாம் ஆண்டு 115 ஆம் நாளிட்ட கல்வெட்டு இராசாதிராசன் வேள் நாட்டின் உட்பிரிவாகிய வெண்ணையூர் வல்லத்திலுள்ள நிலம், ஒவ்வொரு நாளும் 130 தாமரை மலர்கள் கொண்ட ஒரு மாலை வழங்குவதற்காக அளிக்கப்பட்டது எனவும் இந்தநிலக்கொடைஆவணம் தொண்டைமான் ஆணையின் பேரில் சுவரில் பொறிக்கப்பட்டது எனவும் கூறுகிறது.[42]

---

37) 313/1913 38) 314/1913
39) 284/1913 40) 299/1913
41) 303/1913 42) 283/1913

இம்மன்னர் 3 ஆண்டு 204 ஆம் நாளிட்ட கல்வெட்டு, பெரும்பற்றப்புலியூர் மூலப்பருடையாரிடமிருந்து உத்தரபாத உத்தர ராட்டிரத்து உத்திரக் கிரகத்துக்குச் சேர்ந்த சாந்திலிய கோத்திர உடையார் சுவாமி தேவர் என்கிற சோமநாத தேவரால் பெறப்பட்ட நிலம் நந்தவனத்திற்காக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. 43

இம்மன்னர் மூன்றாம் ஆட்சி ஆண்டு 224 ஆம் நாளிட்ட கல்வெட்டு செந்தாமரை மலர்கள் வழங்குவதற்காகவும் அத்தகைய செந்தாமரைச் செடிகளைப் பாதுகாக்கும் தோட்டக்காரர்களுக்கு உணவும் உடையும் வழங்குவதற்காகவும் வழங்கப்பட்ட நன் கொடையைத் தெரிவிக்கிறது 44

இம்மன்னர் 4 ஆம் ஆண்டு 250 நாளிட்ட கல்வெட்டு, தை மாதம் பூசநாளில் ஆளுடையார் இறைவனுக்குத் திருப்பாவாடைப் பூசை நடத்துவதற்காக நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. இக்கல்வெட்டு குலோத்துங்கசோழன் – திருமாளிகையில் பொறிக் கப்படத் திருமந்திர ஓலை ராமநாராயண மூவேந்த வேளானால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 45

இம்மன்னர் 9 ஆம் ஆண்டு 85 ஆம் நாளிட்ட கல்வெட்டு, கங்கராயன் வேண்டுகோளுக்கேற்ப, மலர் வழங்குவதற்காகவும், நந்தவனப் பணியாளர்களின் பராமரிப்புக்காகவும் வழங்கப்பட்ட சில நிலங்கள் குடிமையிலியாக்கப்பட வேண்டும் எனவும் இந்நட வடிக்கை கோயிலின் சுவர்களில் பொறிக்கப்படவேண்டும் எனவும் இம்மன்னரின் அலுவலர்கள் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது. 46

இம்மன்னர் 10 ஆம் ஆண்டு 121 ஆம் நாளிட்ட கல்வெட்டு, இம்மன்னர் குடும்பத்தில் பணிப்பெண்ணாக இருந்து வந்த திருத்தலை சேர நின்றாள், இராசாதிராச வளநாட்டின் பெரும் பற்றப்புலியூர்ச் சிற்றூராகிய எருக்கட்டான்சேரி சயங்கொண்ட சோழநல்லூரிலிருந்த ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி, அம்மனுக் காகஒரு நந்தவனம் அமைப்பதற்காகவழங்கியதைக்குறிக்கிறது. 47

இம்மன்னர் 10ஆம் ஆண்டு 235 ஆம் நாளிட்ட கல்வெட்டு, தளிப் பட்டவர் இருவரால் இக்கோயில் நந்தவனம் வைக்கப்படுவதற் காகவும் இந்நந்தவனத்தைக் கவனித்துவரும் பணியாளர்களின் நன்மைக்காக ஓர் ஏற்பாடு செய்வதற்காகவும் அளிக்கப்பட்ட நன் கொடையைக் குறிப்பிடுகிறது. 48

---

43) 9/1936 44) 317/1919
45) 267/1913 46) 306/1913
47. 13/1936 48. 281/1913

திருபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 10ஆம் ஆண்டு 360–ம் நாளிட்ட கல்வெட்டு, இக்கோயிலுக்காக ஒரு நந்தவனம் இராசாதிராசபல்லவராயன் என்கிற கருப்பாருடையானால் கோயில் பூண்டி சிற்றூரில் அமைக்கப்பட்டதாகவும், இந்நந்த வனத்திற்கு நீர்வார்த்துப் பூக்களைப் பறித்து அவற்றை கோயிலில் வழங்குவதற்காகவும் தோட்டர்காரர்களைப் பராமரிப்பதற்காகவும் பல்வேறு மூன்று ஊர்களிலுள்ள நிலம் வழங்கப்பட்டதையும் இந் நிலம் இம்மன்னர் ஆணையில் பேரில் கோயிலின் மற்ற நிலங்களுடன் சேர்க்கப்பட்டதையும் இந்நடவடிக்கை இக்கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டதையும் மூல ஆவணங்கள் கோயில் கருவூலத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டதையும் தெரிவிக்கிறது. [49]

இம்மன்னர் 14ஆம்ஆட்சி ஆண்டு 107ஆம் நாளிட்ட கல்வெட்டு 500 கொய்யாப்பழங்களும் 5,000 மாம்பழங்களும் 5,000 வாழைப் பழங்களும் ஆளுடைய நயனார் கோயிலுக்குக் காளிங்கராயன் என்போன் நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது. இதற்குரிய வரிகளைப் பொறுத்தவரையில், இந்நிலத்தின் தீர்வையை மற்ற நிலங்கள்மீது விதித்து இந்நிலத்தை இறையிலி நிலமாக்க அவ்வூர் அவை ஒப்புக்கொண்டதைக் கூறுகிறது. [50]

இம்மன்னர் 17ஆம் ஆண்டு 197ஆம் நாளிட்ட கல்வெட்டு, இக் கோயில் இறைவனுக்கும் இறைவிக்கும் மாலைகள் வழங்குவதற் காக பெரும்பற்றப்புலியூரின் சிற்றூராகிய கோயில் பூண்டியின் தோட்ட நிலத்தை வானாதிராசன் என்போனால் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்கொடை பற்றிய ஆணை வழக்கம் போல் இக்கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளது, [51]

இம்மன்னர் 17ஆம் ஆண்டு 272ஆம் நாளிட்ட கல்வெட்டு, இராசாதிராச வளநாட்டுக்குலோத்துங்கசோழன் வல்லம் என்கிற பாண்டுருக்குச்சேர்ந்த நிலத்தை,முடித்தலை கொண்ட பெருமான் திருவீதி எனப்படும் மேற்கு வீதியில் உள்ள அறப்பெருஞ்செல்வி சோலை எனப் பெயரிடப்பட்ட உணவளிப்பு இல்லத்தைப் பராமரிப்பதற்காக அளித்ததைக் குறிக்கிறது. [25]

இம்மன்னர் 24ஆம்ஆண்டு 350ஆம் நாளிட்ட கல்வெட்டு இக் கோயிலில் நந்தவனம் அமைக்கத்தலைப் பள்ளி குதிரை காணிகன் செல்வி நாயக்கன் ஒரு நிலத்தை வாங்கி அதனை இக்கோயிலுக்கு திரு நந்தவனம் அளித்ததைக் கூறுகிறது. இதில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின்படி மூல விற்பனை ஆவணமும் இந்நிலக் கொடையும் கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டன என்பதையும் கூறுகிறது. [53]

---

49. 316/1913
50. 280/1913
51. 285/1913
52. 256/1913
53. 15/1936

இம்மன்னர் 24ஆம் ஆண்டு 364ஆம் நாளிட்ட கல்வெட்டு ஆளுடைய நாயனார் தெய்வத்திற்கும் அவர் தேவியருக்கும் நாள் தோறும் மலர்மாலை வழங்கத் திருநிலை ஏழு கோபுரத் பெருந் தெருவில் வாழ்ந்த இராசராச பிரம்மராயன் என்கிற மருங்கூர் வாப்பிரயன் சொக்கப்பெருமான் அளித்த ஒரு நிலத்திற்குரிய வரியை வானாதிராசன் வேண்டுகோளுக்கேற்பத் தள்ளுபடி செய்வதற்குப் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையைக் கொண்டுள்ளது.[54]

இம்மன்னர் 26 ஆம் ஆண்டு 85 ஆம் நாளிட்ட கல்வெட்டு இறைவனுக்கும் இறைவிக்கும் மலர்கள் வழங்குவோர்களின் பராமரிப்புக்காகவும், எதிரிலிசோழன் திருத்தோப்புக்குச் செல்லும் வீதியில் தன்னால் கட்டப்பட்ட மடத்தை நடத்துவதற்காகவும் அரசு இல்லத்தின் (பணிப்பெண்) அடுக்கலைப் பெண்டு முப்பூச் சூண்டாள்வியால திருச்சிற்றம்பலப்பட்டணத்திலுள்ள தில்லை வளாகம் என்கிற 4 1/2 வேலி நிலத்தை அளித்ததைக் குறிப்பிடுகிறது. இக்கொடை அரசுச் செயலாளர் இராசேந்திர சோழ மூவேந்த வேளாளன் கையொப்பமிடப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.[55]

இம்மன்னர் 26 ஆம் ஆண்டு 39 ஆம் நாளிட்ட கல்வெட்டு இக்கோயிலுக்கு ஒவ்வொரு நாளும் 700 செந்தாமரை மலர்கள் அளிப்பதற்காக முன்னமே அளிக்கப்பட்ட நிலத்திற்குக் கூடுதலாக ஒருநிலம் இலங்கேசுவரன் என்கிற குந்தனால் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. இந்த நடவடிக்கை இக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டது.[56]

சோழகுலவல்லி கோயில் சோழ மன்னரால் கட்டப்பெற்றது என்பதையும் (சைவ சமய ஆசிரியர்கள் அருளிய) பாமாலைகள் திருமூலத்தானமுடையார் கோயிலில் பாடுவதற்கு ஏற்பாடு செய்ததைக் கூறும் கல்வெட்டும் உள்ளது.[57]

மேற்குக் கோபுரத்தின் சுவர் மாடங்களில் காமதேவன், அகத்தியன், சீதேவி, தேவேந்திரன், கணேசுவரர், துர்க்கைதேவி ஆகியோர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் உருத்திரதேவர், இராகு கேதுகள், நாரதர், சந்திரன், கிரியாசக்தி, சனிபகவான், வாயுபகவான் ஆகியோர்களின் உருவங்களின் பெயர்கள் காணப்படுகின்றன.[58] மற்றும் சேத்திரபாலபிள்ளையார் காமகதேவி, தன்வந்திரி, சுந்தரிதேவி, சுக்கிரன், வாயுகன், நாகன் யமுனை, பத்திரகாளி, ஆதிசண்டேசுவரர் ஆகியோர்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[59]

---

54) 1/1936
55) 8/1936
56) 315/1913
57) 341/1913
58) 21-26/1936
59) 35-44/1936

வடக்குக் கோபுரத்தில் உட்புறத்துச் சுவரில் சிற்பங்களின் கீழ் நான்கு பெயர்களாகிய (1) விருத்தகிரியில் சேவகப் பெருமாள் (2) அவர் புதல்வர் விசுவமுத்து (3) திருபிறைக் கொடை ஆசாரி திருமருங்கன் (4) அவர் உடன்பிறந்தார் காரணாசாரி ஆகியோர் களின் பெயர்கள் காணப்படுகின்றன. [60]

சடவர்மன் சுந்தரபாண்டியன்

இம்மன்னர் 7 ஆம் ஆண்டு 252 ஆம் நாளிட்ட கல்வெட்டு, 'பூமலைமிடந்து' எனத்தொடங்கிஇக்கோயில்நந்தவனத்திற்காக இந்நந்தவனப் பணியாளர்களுக்காக அளிக்கப்பட்ட நிலங்கள் கடல் அருகில் இருப்பதாலும் இங்கு மணலும் கொடிகளும் பரவி விட்டன எனபதற்காகவும் அவற்றின் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டதைக் கூறுகிறது. [61]

இம்மன்னர் எட்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, கடலாட்டுக் காக இறைவன் திருவுருவம் திருவுலாவில் செல்லும் சாலைக்குத் தெற்கில் அமைக்கப்பட்ட திருச்சிற்றம்பல மாகாளி கோயிலில் சில திருவிழாக்களும் வழிபாடுகளும் செய்வதற்காக அளிக்கப்பட்ட சில நிலங்களைத் திருநாமத்துக்காணியாகப் பதிவு செய்யக் காலப்பால ராயர் பிறப்பித்த ஆணையைக் கொண்டுள்ளது. [62]

இம்மன்னர் 11 ஆம் ஆண்டு 55 ஆம் நாளிட்ட கல்வெட்டு, இக்கோயிலின் நந்தவனத்திற்காக அளிக்கப்பட்ட சில நிலங்களின் வரி தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது. இந்நடவடிக் கைகள் விக்கிரமசோழன் திருமாளிகையில் பொறிக்கப்பட்டன. [63]

இம்மன்னர் 12 ஆம் ஆண்டு 175 ஆம் நாளிட்ட கல்வெட்டு, இறைவனுக்கும் தேவிக்கும் நந்தவனம் வைப்பதற்காகவும் நந்தவனப் பணியாளர்களின் பராமரிப்புக்காகவும், தெண்டை மண்டலத்துமானார்ப்பாக்கம்ஊர்த்தலைவர் சோழகநாகன்என்கிற ஆரய்யன் நீராணி பவழக் குன்றார், பெரும்பற்றப் புலியூர்ச் சிற்றூ ராகிய சயங்கொண்ட சோழநல்லூர் என்கிற எருக்காட்டன் சேரி நிலங்களை வாங்கி அவற்றை அளித்ததில் அவற்றின் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது இதற்குக் கையொப்ப மிட்டவர் கங்கராயர். [64]

இம்மன்னர் 13 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பெரும்பற்றப் புலியூரின் மேற்குப்பகுதியில் விக்கிரமபாண்டிய சதுர்வேதிமங்கலம் என்னும் அக்கிரகாரம் அமைக்கப்பட்டதையும், அது 108 பிராமண அறிஞர்களுக்கு அளிக்கப்பட்டதையும் இதனைப் பராமரிக்கும் கிராமப் பணியாளர் முதலியோர்களைப் பராமரிப்பதற்காகப்

---

60) 7-20/1936
61) 289/1913
62) 297/1913
63) 293/1913
64) 6/1931

பொன்வேரியில் மேற்குக் கரையிலுள்ள புளியங்குடி என்கிற இராச சிகாமணி நல்லூர் கையகப் படுத்தப்பட்டு 147 - 3/4 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அளிக்கப்பட்டன என்பதாகவும் கூறுகிறது.[65]

இம்மன்னர் 14 ஆம் ஆட்சி ஆண்டு 124 ஆம் நாளிட்ட கல் வெட்டு, இறைவனுக்கும் இறைவிக்கும் நந்தவனங்கள் அமைப்பதற் காக அளிக்கப்பட்ட நிலக்கொடைகளைக் குறிக்கிறது.[66]

இம்மன்னர் 15 ஆம் ஆட்சி ஆண்டு 363 ஆம் நாளிட்ட கல் வெட்டு தேவர்கள் நாயனார் கோயிலில் வழிபாடுகள் நடத்தப்பட்டு வதற்கானசெலவுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களின் வருமானத்திலிருந்து செய்யப்பட வேண்டுமென வில்லவராயன், மன்னரின்மற்ற அலுவலர்கள்ஆகியோர் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது.[67]

இம்மன்னர் 17 ஆம் ஆட்சி ஆண்டு 60 ஆம் நாளிட்ட கல் வெட்டு நந்தவனம் வைப்பதற்காகப் பாண்டி மண்டலத்து நரசிங்க தேவன் என்கிற பாண்டியனிடமிருந்து பரிவர்த்தனை முறையில் பெறப்பட்ட மூன்று வேலி நிலங்களுக்குரிய வரிகளைத் தள்ளுபடி செய்யக்*குலசேகரசோழன்பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது.[68]

மாறவர்ம வீரபாண்டியன்

இவர் நான்காம் ஆண்டு 123 ஆம்நாளிட்ட கல்வெட்டு வில்லவ தாரையன் என்போன் தோட்ட நிலங்களும், இத்தோட்டப் பணி யாளர்கள் 18 பேர்களின் பராமரிப்புக்காகத் தேவைப்பட்ட நிலங்கள் அளிக்கப்படுவதற்குச் செடியராயன் பிறப்பித்த ஆணை கோயில் சுவர்களில்பொறிக்கப்பட்டதைக் கூறுகிறது[69]

இம்மன்னர் 4ஆம்ஆண்டு192ஆம் நாளிட்ட கல்வெட்டு, பவித் திர மாணிக்கிய நல்லூர் என்கிற கொற்றங்குடிச் சிற்றூரில், பிராமணர் ஒருவரால் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கோயில் வழிபாட்டுக்காக அளிக்கப்பட்ட நிலக்கொடையைக் குலோத்துங்க சோழன் திருமாளிகையில் பொறிக்கப் பல்லவராயன் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது.[70]

மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன் 6 ஆம் ஆண்டு 57 நாளிட்ட கல்வெட்டு, ஒவ்வொர் ஆண்டும் சிவ காமி சுந்தரிக்குத்திருப்புடியிடுதிருவிழாவின் போது புதிய ஆடை களும் திருஞான சம்பந்தர் கோயிலுக்கு வேறு ஐந்து ஆடைகள் வழங்கிவதன் பேரிய் முற்றிலும் நெசவு செய்வோர்களே (சாலியர்)

---

65) 277/1913
66) 275/1913
67) 274/1913
68) 10/1936
69) 351/1913
70) 279/1913

குடியிருப்பதற்காக கட்டடம் கட்டுவதற்குவிக்கிரம பாண்டியகாங்கேயராயன் சில நிலங்களை அளித்ததை பற்றிக் கூறுகிறது. [71]

9ஆம் ஆண்டு 166ஆம் நாளிட்டகல்வெட்டு சோழ குல வல்லி நல்லூர்த் திபத்ராயன் என்போன் ஒரு திருவோடையும், அதைப் பராமரிக்க அளிக்கப்பட்ட நிலமும் கோயில் தேவதான நிலங்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்பதாகவும் இந்நடவடிக்கை இக்கோயில் சுவரில் பொறிக்கப்பட வேண்டுமெனவும்வீரபாண்டிய வானாதிராயன் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது. [72]

12ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திய கல்வெட்டு பாண்டி மண்டலம் தென்வல்லத் திருக்கையில் உள்ள இத்திராவதார நல்லூர் என்கிற இளங்குடி நாராயணதேவன் என்கிற ஆட்கொண்டான் பெருப்பற்றப்புலியூர் எருக்காட்டான் சேரியில் ஒரு நிலத்தை வாங்கித்திருசிற்றம்பலமுடையார்நந்தவனத்திற்காக இதனைக் கோயிலுக்கு அளித்ததைக் கூறுகிறது. [73]

கோர்பெருஞ்சிங்கன்

இக்கோயிலில் மூன்றாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 5ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு நான்கு பணியர்ளர்களைக் கொண்ட இக்கோயில் நந்தவனத்திற்காகத் திருவண்ணாமலை இராவலார் கயிலாசதேவர் பல இடங்களிலுள்ள நிலங்களை வாங்கி அவற்றை அளித்ததைக் கூறுகிறது. இம்மன்னர் இதற்கு ஏற்பளித்த ஆணை சோழங்கனால் கைப்யொப்பமிடப்பட்டுள்ளது. [74]

இக்கோயிலின் மூன்றாம் பிராகரத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளஇம்மன்னர் 5ஆம்ஆண்டு234ஆம்நாளிட்ட கல்வெட்டு, சயங்கொண்ட சோழ மண்டலம் ஊற்றுக்காட்டுக் கோட்டத்தின் உட்பிரிவாகிய பழையூர் நாட்டு இராசேந்திர சோழ நல்லூர் என்கிற பழையூர்க்குறுக்கல்ராயன் என்கிற பொன்னப்பலக் கூத்தன் துலையாத செல்வன் நந்தவனம் அமைக்க நிலங்களை வாங்கி அவற்றை அளித்ததற்குச் சோழங்கனால் ஆணை கையொப்பமிடப்பட்டதைக் கூறுகிறது. [75]

இக்கோயிலில் இரண்டாம் பிரர்காரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 6 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலுக்கு நந்தவனம் அமைப்பதற்கும் அதனைப் பராமரிக்கும் பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்ட கொடை பற்றிக் கோயில் அதிகாரிகளும் ஊர் அவையும் செய்த ஏற்பாடுகள் இக்கோயிலின் சுவர்களில் பொறிக்கப்படச் சோழகன் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது [76]

71, 269/1913
72. 320/1913
73. 5/1913
74. ஏஆர்இ-11, 1936
75. ஏஆர்இ-12/193
76. 296/1913

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் வடக்குச் சுவரில் பொறிக்கப்பபட்ட இம்மன்னர் 7 ஆம் ஆண்டுக் கல்வெட்டு நந்த வனத்திற்காக நடனமகளிர் ஒருத்தி நிலம் அளித்ததைக் கூறுகிறது. [77]

இரண்டாம் பிராகாரத்து வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 7 ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலுள்ள மூலத் தானம் உடையார் கோயிலில் செய்யப்படுவதுபோல தட்சிணா மூர்த்தி கோயிலிலும் எட்டு சந்திப் பூசைகள் நடத்தச் சோழகன் ஆணை பிறப்பித்ததையும் இந்த எட்டுச் சந்நிதிகளில் ஐந்துக்குத் தேவைப்பட்ட நிலக்கொடை வரியிலியாக்கப்பட்டதையும் குறிக்கிறது. [78]

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்து வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 8 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (நகர) சாலிய வணிகர் இறைவனுக்கும் இறைவிக்கும் பரிச்சட்டத்திற்குத் தேவைப்பட்ட துணிகள் வழங்கவேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில், அவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்குத் தேவைப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. [79]

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் காணப்படும் இம்மன்னர் 8 ஆம் ஆண்டுக் கல்வெட்டு செங்கழுநீர்ப் பூக்களுக்காகக் குட்டைகள் அமைக்க வழங்கப்பட்டது பற்றிச் சோழகன் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது. [80]

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 9 ஆம் ஆண்டுக் கல்வெட்டு நந்த வனப் பணியாளர்களைப் பராமரிக்க நிலங்கள் அளிக்கப்பட்டதைச் சோழகன என்கிற பெருமாள் பிள்ளை பிறப்பித்த ஆணை கோயில் சுவர்களில் பொறிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. [81]

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கோப்பெருஞ்சிங்கதேவன் 10 ஆம் ஆண்டு 9 ஆம் நாளிட்ட கல்வெட்டு சோழகன் என்னும் பெருமாள் பிள்ளையால் மன்னர் நலத்திற்காகப்பிறப்பிக்கப்பட்ட ஆணையைக்குறிப்பிட்டுப், பரிவர்த்தனையில் ஒரு நிலம் பெறப்பட்டதையும், இறைவன் திரு வுருவம் உலாவரும் விக்கிரமசோழன் தெற்குத் திருவீதியிலுள்ள திருச்சிற்றம்பல மாகாளி எனப்படும் பிடாரி கோயிலைக் குறிப்பிடுகிறது. [82]

---

77) 304/1913
78) 305/1913
79) 308/1936
80. 460 / 1902
81. 318 / 1913
82. 312 / 1913

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் 1 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, தைப்பூசத் திருவிழாவின்போது திருப்பாவாடைச் செலவுக்காகவும் இறைவனுக்கு இட மலர்களுக்காக நந்தவனம் வைப்பதற்காகவும் திருவண்ணாமலையிலுள்ள வடக்கு மடத்து இராவலர் கயிலாய தேவன் நிலக்கொடை அளித்ததை ஏற்றுக் கொள்ளும் வகையில் சோழகன் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது. [83]

இக்கோயிலின் 2 ஆம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் இம் மன்னர் 1 ஆவது ஆண்டுக் கல்வெட்டு திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்குத் திருப்பாவாடை வழிபாட்டுக்காக மகளிர் இருவரால் கோயிலுக்கு அளிக்கப்பட்ட சிலநிலங்களுக்குவரிவிதிப்பு விலக்கம் பிறப்பிக்கப்பட்ட ஆணையைக் குறிப்பிடுகிறது. [84]

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இம்மன்னர் முதலாம் ஆண்டு முதல் கல்வெட்டு இம்மன்னர் நலத்தை முன்னிட்டு இறைவனுக்கு மலர்கள் வழங்கு வதற்காகவும் நந்தவனப் பணியாளர்கள் பராமரிப்புக்காகவும் பல நிலங்கள் நன்கொடையாக அளித்ததற்குச் சோழகன் பிறப்பித்த ஆணையைக் கொண்டுள்ளது. [85]

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் கோப்பெருஞ்சிங்கன் 12 ஆம் ஆண்டுக் கல்வெட்டு நந்தவனம் அமைப்பதற்காகச் சோழகன என்னும் பெருமாள் பிள்ளை பிறப் பித்த ஆணையைக் கொண்டுள்ளது. [86]

இக்கோயிலின் மகிடாவர்த்தினி கோயிலின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கோப்பெருஞ்சிங்கன் 12 ஆம் ஆட்சிக் ஆண்டுக் கல்வெட்டு அண்ட பரதாதேவர் கோயிலுக்காக ஒரு நந்தவனம் அமைக்க ஒரு நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதற்காகவும் இக் கொடை இக்கோயில் சுவரில் பொறிக்கப்பட வேண்டும் என்பதற் காகவும் இதற்குத்தொடர்பானமூலஆவணங்கள் கோயில்கருவூலத் தில் வைக்கப்படவேண்டும் என்பதற்காகவும் பிறப்பிக்கப்பட்ட ஆணையைக் கொண்டுள்ளது. [87]

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளகோப்பெருஞ்சிங்கன் 16 ஆம்ஆட்சிக் ஆண்டுக் கல்வெட்டு சோழகன் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது. சொக்கசீயன் காமுகு திருநந்தவனம் என்னும் நந்தவனத்திற்காக நன்கொடை அளிக்கப்பட்டதையும் இது குறிக்கிறது. [88]

---

83) ஏ ஆர் இ 106/1935
84) ஏ ஆர் இ 107/1935
85) ஏ ஆர் இ 108/1935
86) 302 / 1913
87) 396 / 1913
88) 467/468-1902

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கோப்பெருஞ்சிங்கன் 17 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, தட்சிணாமூர்த்தி கோயிலில் கூடுதல் வழிபாட்டுக்காக நிலம் அளிக்கப்படுவதற்காகவும் அந்நிலம் வரியிலியாகத் திருநாமத்துக் காணியாக மாற்றப்படுவதற்காகவும் மன்னர் ஆணைப்படி சோழகன் பிறப்பித்த உத்தரவைக் கொண்டுள்ளது. 89

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கோப்பெருஞ்சிங்கன் 19ஆம்ஆண்டுக் கல்வெட்டு, தோப்புக்காக வரியிலியாக நிலக்கொடை வழங்கச் சோழகன் பிறப்பித்த ஆணையைக் கொண்டுள்ளது. 90

இக்கோயிலின் முதல் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட சகலபுவனச் சக்கரவர்த்தி 34 ஆம் ஆண்டுக் கல் வெட்டு அவனி ஆளப் பிறந்த தேவி கோயில் பணிக்காகத் தேவ தானமாக ஒரு நிலம் வரியிலியாக அளிக்கப்படச் சோழகன் உடன்பிறந்தான வேணாடுடையான் பிறப்பித்த ஆணையைக் கொண்டுள்ளது. 91

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கோப்பெருஞ்சிங்கன் 36 ஆட்சி ஆண்டுக் கல் வெட்டு நிலம் அளிக்கப்பட்டது பற்றியும் நிலக்கணக்குத் தன்மப் பிரியானாலும், தில்லை மூவாயிர வேளானாலும் அளிக்கப்பட்ட நிலங்களின் வருமானத்திலிருந்து தேர்த்திருவிழாப்பணி செய்வதற் காக ஊர்ச்சபை செய்த ஏற்பாடுகளையும் குறிக்கிறது. 92

நடராசர் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கோப்பெருஞ்சிங்கன் 36 ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயில் நாயகரின் பல்வேறு திருவிழாக்களின் பணிகளுக்காகத் திருவையாறுடையார் 10 வேலி நிலங்களை வாங்கிஅவற்றை அளித்தலில் அவற்றிற்குவரிவிலக்குஅளித்ததற்கு வேணாடுடையான் பிறப்பித்த ஆணையைக் கொண்டுள்ளது. 93

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் மேற்கு வாயில் தூணில் ஆண்டு குறிக்கப்படாத இம்மன்னர் கல்வெட்டு இவ்வாயிலி லுள்ள தூண் கோப்பெருஞ்சிங்கன் படைத்தலைவர்களுள் ஒருவ ராகிய சோழகன் என்கிற பெருமாள் தன் தலைவர் நலனுக்காக அன்பளிப்பு வழங்கியதைக் கூறுகிறது. 94

விசயநகர மன்னர்கள்

இக்கோயில் வீரபூபதிராயர் மேற்குக் கோபுரத்தில் ஆண்டு குறிக்கப்படாத வகையில் உள்ள கல்வெட்டு நிருத்தநாதர் முன் னிலையில் நிரந்தரமாக விளக்கு வைப்பதற்காக 64 பசுக்களை

89) 307/1913
90) 319/1913
91) 461/1902
92) 455/1902
93) 104/1935
94. 321/1913

அமைச்சர்கள் சவுந்தரசன், ஆதித்தரசன் ஆகியோர் அளித்ததைக் குறிக்கிறது. [95]

இக்கோயிலின் மேற்குக் கோபுரத்தை அடுத்துள்ள கற்பக விநாயகர் கோயில் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட விசய நகர மன்னர் வீரப் பிரதாப தேவராயர் மாமன்னர் சக 1349 ஆம் ஆண்டுக் கல்வெட்டு கோயில்களிலும், கோயில் நிலங்கள் பற்றியும் காணப்பட்ட சில ஒழுங்கினங்கள் தொடர்பாகப் மன்னர் பிறப்பித்த ஆணைகளைக் கொண்டுள்ளது. [96]

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் மேற்குநுழைவாயிலினுள்ள இரண்டாம் தூணில் பொறிக்கப்பட்டுள்ள 1422 சக ஆண்டுக் கல்வெட்டு நரசநாயகர் முகவராகத் திருமலைக் கொழுந்தார் இருந்த காலத்தில் நரசநாயகர் நலனுக்காகப்பத்துப்பட்டைச் சோறும் வெற்றிலையும் குறிப்பிடப்பட்ட சிலருக்கு அளிக்க அவர் செய்த ஏற்பாடு செயற்பட வேண்டும் என்றும் அது நிறுத்தப்படக் கூடாதுஎன்றும் வேறுவகையில் பயன்படுத்தப்படக்கூடாது என்றும் கூறுகிறது. [97]

வீரபிரதாப தமராயர் தெற்குக்கோபுரத்தில் பொறிக்கப்பட்ட (சாளுவ பரம்பரை) சக 1425 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஒவ்வொரு நாளும் இரண்டு மாலை அளிப்பதற்காகப் பெரும்பற்றப் புலியூரின் சிற்றூராகிய கரிக்குடியை [மொண்டுக்குடி இராம நாயகர் மல்ல நாயகர் அளித்ததாகக் கூறுகிறது. இது பொற்புலியூரைக் குறிக்கிறது. [98]

முதல் பிராகாரத்தின் தெற்கு நுழைவாயிலில் இடப்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள விசயநகரமன்னர் வீரப்பிரதாப வீர கிருஷ்ண தேவராய மகாராயர் 1432 ஆம் சக ஆண்டுக் கல்வெட்டு அழகிய சிற்றம்பலம் உடைய தம்பிரானார் கோயிலின் பூசைக்காகப் புவனேசுரன் பட்டண சீர்மையில் சேர்க்கப்பட்டுக் கொல்ரூன் வடகரையிலுள்ள ராசாதி ராச வேள நாட்டின் உட்பிரிவாகிய அரசுக் கீழ்ப்பற்று 1400 ரேகை வருமானமுள்ள மூன்று ஊர்களை அப்பா பிள்ளை என்போர் பராமரித்து வந்த உணவு இல்லத்திற்காக அளித்ததைக் கூறுகிறது. [99]

இக்கோயில் கிழக்குக் கோபுரத்தில் பொறிக்கப்பட்ட கிருஷ்ண ராயரின் 1444 ஆம் சக ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கு மங்கராசன் என்போன் சிதம்பரநாதபுரம் ஊரை அளித்ததைக் குறிப்பிடுகிறது. [100]

---

95) 358/1913
96) 376/1913
97) 322/1913
98) 344, 345/1913
99) 323/1913
100) 333/1913

இக்கோயிலின் வடக்குக் கோபுரத்தின் வாயிலுக்கு இடப்புறத்தில் ஆண்டு குறிக்கப்படாத கல்வெட்டில் இக்கோபுரம் தாம் கட்டியதைக் கிருஷ்ணதேவராயர் கூறுகிறார்.[101]

நடராசர கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் தமிழிலும் கிரந்தத்திலும் பொறிக்கப்பட்டுள்ள சக ஆண்டு 1451 விரோதி பாலகுண காலத்திய கல்வெட்டு, சாளுவ தன்ன நாயகன் வேண்டிக் கொண்டதற்கேற்பப், பெரும்பற்றப் புலியூர் சிதம்பர ஈசுவரர் கோயில் தேர்த் திருவிழாத் மற்றப் திருவிழாக்கள் கோயில் பழுதுபார்த்தல்பணி ஆகியவற்றிற்காகக் கிருஷ்ணராய நாயகரால் முதலில் ஒதுக்கப்பட்டிருந்த 82 ஊர்களில் வருமானமாகிய 3,000 பொன், மறுபடியும் அறக்கொடையாக அளிக்கப்படவும் இதன் பொறுப்பு பெரியதேவர் துறவியிடம் இருக்குமாறும் மன்னர் அச்சுத தேவராயர் பிறப்பித்ததைக் கூறுகிறது. இங்கு கிருஷணராயர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளவர் இம்மன்னர் கீழ்ப்பணி புரிந்த அலுவலர் என்பது தெரியவருகிறது.[102]

கோவிந்தராசர் கோயிலின் மையத்தில் பொறிக்கப்பட்டுள்ள சக 1460 ஆம் ஆண்டுக் கல்வெட்டு முற்றிலுமாக எழுதப்படவில்லை. சித்திரக்கூடத்தில் கோவிந்தராச சுவாமியை மறுபடியும் அச்சுத தேவராயர் நிலைப்படுத்தியதாகக் கூறுகிறது.[103]

நடராசர் கோயில் முதல் பிரர்காரத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட விசயநகர் மன்னர் அச்சுத மகாராயர் சக 1461 ஆம் ஆண்டுக் கல்வெட்டு இராசாதிராசன் வளநாட்டிலுள்ள வெண்ணையூர் நாட்டு உட்பிரிவாகிய வாழுதளம் பத்துஉசவாதி பெரும்பற்றப் புலியூர்த் தில்லை கோவிந்தராசர்திருவுருவம் வைசாசனசூத்திரத்து சடங்கு முறைப்படி நிறுவப்படவேண்டும் எனவும் இக்கோயில் நாட்பூசைக்காக விடப்பட்ட நான்கு ஊர்களின் வருமானமாகிய 500 பொன் அளிக்கப்பட்டது எனவும் கூறுகிறது.[104]

திருவெட்களத்தில் பசுபதீசுவரம் கோயில் அருகிலுள்ள கல்லில் பொறிக்கப்பட்டுள்ள சக 1488 ஆம் ஆண்டு, கல்வெட்டு அட்சய ஆண்டு தை மாதம் 25 ஆம் நாள் திருவேட்களம் கிராமம் சிதம்பரேசுவரர் கோயிலுக்கும் திருமூலத்தானத்துச் சிவகாமிசுந்தரி கோயிலுக்கும் கர்நாடக மன்னர் முதலாம் திருமலையின் நலனுக்காக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[105]

வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர் நன்மையை முன்னிட்டு வீரப்பிரதாப வேங்கட தேவ மகாராயர் சக 1500 ஆம் ஆண்டு கல்வெட்டு, சிதம்பரேசுவரர் கோயிலுக்கும் சிவகாமசுந்தரி கோயிலுக்கும் விடியற்காலையில் புனித நீராட்டுக்கர்க நான்கு கிராமங்கள் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[106]

---

101) 174/1892
102) ஏ ஆர் இ 2/11936
103) 1'/ 1915
104) 272/1913
105) 259/1913
106) 334 / 1913

இக்கோயில் தெற்குக்கோபுரத்திலுள்ள இரண்டாம் சீரங்கதேவ மகாராயர் சக 1503 ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயில் இறைவனுக்கும், இறைவிக்கும் வழிபாடுகளுக்காகவும் திருவிழாக்களுக்காகவும் வையப்ப கிருஷ்ணப்ப கொண்டப்ப நாயகனால் ஏழு கிராமங்களும் மிளகுதரகு வருமானமும் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[107]

இக்கோயில் தெற்குக் கோபுரத்திலுள்ள வேங்கட தேவ மகாராயர் சக 1510 அட்சய தை 25 ஆம் நாளிட்ட கல்வெட்டு, இக்கோயில் 20 வழிபாட்டு உணவளிப்புகள் பரதேசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயகனால் வகுக்கப்பட்ட ஏற்பாடு எல்லாக் கட்டளைகளுக்கும் கண்காணிப்பாளராக இருந்த நமசிவாய உடையாரிடம் ஒப்புவிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[108]

இக்கோயிலின் வடக்குக் கோபுரத்தில் பொறிக்கப்பட்ட வெங்கடதேவ மகராயர் சக 1510 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கிருஷ்ணதேவராயர் சிம்மாத்திரி பொட்டுனூரை எதிர்த்துப் போர் நடத்தி அங்கு வெற்றித்தூண் நாட்டித் திரும்பும் வழியில் சிதம்பரம் பொன்னம்பலத்தில் வழிபாடு செய்தபோது வடக்குக் கோபுரம் கட்டியதாகக் குறிப்பிடுகிறது.[109]

இக்கோயிலின் கிழக்குக் கோபுரத்தின் நுழைவாயில் வலப்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள வெங்கடதேவ மகராயர் சக 1510 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வீரநாராயணச்சீர்மை மாவட்டத்தில் தான் ஏற்பாடு செய்திருந்த 50,000 கலம் நெல் பயன்படுத்தியதில் பெறப்படும் 30 வழிபாட்டு அன்னப்பட்டைகள் சிவ துறவிகளுக்கு வழங்கப்படவேண்டும் என்னும் ஆணையைக் கொண்டுள்ளது.[110]

வடக்குக் கோபுரத்தில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாடல், முடிசூடிய மன்னர் அளித்த நன்கொடைகளைக் குறிப்பிடுகிறது. வடக்குக் கோபுரம் கடவுளாலே கட்டப்பட்டது. இது கிருட்டிண தேவராயர் கட்டியது என்பதை 371 எண் கல்வெட்டு தெரிவித்துள்ளது.[111]

மேற்குக் கோபுரத்திற்கு அருகிலுள்ள ஒரு கல்லில் பொறிக்கப்பட்ட வெங்கட தேவ மகராயர் சக 1515 ஆம் ஆண்டுக் கல்வெட்டு வையப்ப கிருஷ்ணப்ப கொண்டமயக்கரின் நலனுக்காக முற்காலத்திலிருந்தசிதம்பரேசுவரர் கோயிலால் அனுபவித்துவரப்பட்டு வந்த தேவ மண்டல சீர்மை, வீரநாராயணச் சீர்மை, தெற்கு நாடு, வடக்கு நாடு ஆகிய ஊர்களின் கீழ் இணைக்கப்பட்டுள்ள ஐந்து கிராமங்கள் வரியிலி ஆக மாற்றப்பட்டதையும் நாள்தோறும் 750

107) 48, 349/1913
108) 349, 362/1913
109) 371/1913
110) 339/1913
111) 374/1913

தளிகை வழங்கப்படுவதற்காக வகுக்கப்பட்ட ஏற்பாட்டையும் குறிக்கிறது.[112]

இக்கோயில் தெற்குக் கோபுரத்திற்கு அருகிலுள்ள கல்லில் பொறிக்கப்பட்ட சக 1520-ஆம் ஆண்டுக் கல்வெட்டு வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயகர் நலனுக்காக இக்கோயிலில் குறிப்பிட்ட பழுதுபார்த்தல் பணிகள் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டதைக் குறிக்கிறது. இந்நன்கொடையாளராலே கொள்ளிடத் திற்கு அருகில் அதன் கரையில் ஒரு மண்டபம் கட்டப்பட்டதையும் குறிப்பிடுகிறது.[113]

நடராசர் கோயில் முதல் பிராகாரத்தின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள விசயநகர மன்னர் மகாமண்டலேசுவரர் மூன்றாம்சீரங்கராயர் சக 1555ஆம்ஆண்டுக் கல்வெட்டில் தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் கோயில் முன்புறமண்டபம், இக்கோயில் கோபுரம், புண்டரிகவல்லி நாச்சியார் ஆடித் கொடுத்த நாச்சியார் விமானங்கள் திருவாழி ஆழ்வான் முன்புற மண்டபம் ஆகியவற் றிற்குத்திருப்பணி செய்ததாகக் இவர் கூறியுள்ளார் வைணவர்கள் வாழ்ந்துவந்தஆரூர் கருங்குழி, குறியமங்கலம், மதுராந்தகநல்லூர், உதயூர் ஆகியஐந்து ஊர்களை வரியிலியாக மாற்றினார்.[114]

மேற்கு கோபுரத்திலுள்ள சக 1498 ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேரமான் பெருமாள் நாயனார் வழிவந்த கொச்சி இராமவர்ம-மகா ராயர் மாமன்னர் குடும்பத்தினரைக்குறிக்கிறது. இம்மன்னர் விசாக நட்சத்திரத்தில் தோன்றியதாக இதில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனந்தத் தாண்டவம் பெருமாளுக்கு 33 தளிகை படைக்கப் பெறுவ தற்கு அவை பிராமணர்களுக்கும் மகேசுவரகளும் கோயில் மடைப் பள்ளியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடு கிறது.[115]

கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக் காரர்களுக்கும் இடையே நிகழ்ந்த போர்களில், தில்லைச் சிதம்ப ரேசுவரர்கோயில்போர்காரணமாகப்பாதுகாப்புதேவைப்பட்டது[116] இரண்டாம் கர்நாடகப் போரின்போது, கி. பி. 1781 ஆம் ஆண்டில் இக்கோயிலின் மேற்குக் கோபுரத்திற்கு அருகில் போர் நிகழ்ந்தது[117] இச்சூழ்நிலையில், இக்கோயிலில் பூசை செய்து வந்தவர்கள் பாதுகாப்புக்காக நடராசர் திருவுருவத்தைத் திரு வாரூருக்குஎடுத்துச்சென்று அதனைப் பாதுகாப்பில்வைத்தார்கள். பின்னர் அமைதி நிலவியபோது நடராசர் திருவுருவத்தை இக் கோயிலுக்கு கொண்டுவந்து சேர்த்தனர்.

---

112) 369/1913 113) 352/1913

114) 271/1913 115) 350/1913

116) ஏ ஆர் இ 271 – 1913

117) மாவட்ட விவரச் சுவடி - பக்கங்கள் 266 - 267

இவ்வாறு நடராசர் இக்கோயிலின் சிற்சபைக்கு வந்து சேர்ந்தது சக ஆண்டு 1695 கலி 4874 மாசி மாதம் கிருஷ்ண பட்சம் மூலநட்சத்திரம் திரியோதசி என்னும் விவரத்தை இக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் எழுதி வைக்கப் பட்டுள்ள சுலோகம் குறிப்பிடுகிறது. இது சக ஆண்டு 1695 கி.பி. 1783 ஆம் ஆண்டாகும். ஏறத்தாழ இவ்விரண்டு ஆண்டுக் காலத்திலும் நடராசருக்கு இங்கிருந்த தீட்சிதர்கள் ஞான வெளியில் நிலைபெற்றுள்ள அப்பெருமானின் சிதம்பர ரகசியத்திற்குப் பூசை செய்து வந்தார்கள் என்பதாக தற்போதுள்ள தீட்சிதர்கள் கூறுகிறார்கள்,

15) பூசைகளும், திருவிழாக்களும்

15) 1. பூசைகள்

தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயிலில் நாள்தோறும் முதல்முதலில் நடைபெறும் பூசை திருவனந்தல் எனப்பெறும். இப்பூசை காலை ஆறுமணி அளவில் தொடங்குகிறது. பள்ளியறையில் பால் பழம் முதலியவற்றின் நைவேத்தியத்திற்குப்பின் தீபாராதனை செய்யப்படுகிறது. இதன்பின்னர், இறைவர் பாதுகை பல்லக்கில் எழுந்தருளி நடராசர் சந்நிதியை எய்துகிறது. அப்போது நடராசருக்கும் சிவகாமி அம்மைக்கும் நைவேத்தியம் செய்யப்பெறுகிறது.

திருவனந்தலை அடுத்துப் பின்னர் காலை, இரண்டாம் காலை உச்சிவேளை, சாயுங்காலம், இரண்டாம் சாயுங்காலம், அர்த்த சாமம் ஆகிய ஆறு வேளைகளில் நாட்பூசை நடைபெறுகிறது.

காலைப் பூசை

காலை 7 1/2 மணி அளவில் கும்பம் வைத்துப் பூசை செய்து அபிடேகம் நிகழ்த்தப்படுகிறது. காலை 9 மணிக்குள் தீபாராதனை செய்து முடிக்கப்பெறுகிறது.

இரண்டாம் காலம்

காலை 10 மணி அளவில் படிக லிங்கத்திற்கு அபிடேகம் செய்யப்படுகிறது. இப்போதே இரத்தின சபாபதிக்குப் பால், தேன் முதலியவை அபிடேகம் செய்யப்படுகின்றன. இதற்குப் பின்னர்த் தீபாராதனை செய்யப்படும்போது இத்தரிசனத்தை அன்பர்கள் கண்டு களிக்கின்றனர். பகல் 11 மணிக்குள் இப்பூசை நிறைவுபெறுகிறது.

உச்சிக் கால பூசை

இரண்டாம் காலை நேரப் பூசை நிறைவு பெற்றபின், பகல் பன்னிரண்டு மணி அளவில் உச்சிக்காலப் பூசை நடைபெறுகிறது. இதனை அடுத்துக் கோயில் மூடப்படுகிறது.

சாயுங்காலம்

மாலை 5 மணி அளவில் கோயில் கதவு திறக்கப்படும். உடனே அபிடேகம் தொடங்குகிறது. அப்போது பதினாறு உபசாரங்களுடன் தீபாராதனை செய்யப்படுகிறது.

இரண்டாம் சாயுங்காலம்

இரவு 7 மணி அளவில் அபிடேகம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து தீபாராதனையும் செய்யப்பெறும். இச்சமயத்தில் சிதம்பர ரகசியத்திற்குப் பூசை நடத்தப்பெறுகிறது. இச்சமயத்தில் பூசை செய்பவர்கள் இருவர் மட்டுமே உள்ளிருப்பார்கள். நைவேத்தியத்திற்குப் பின் தீபாராதனை நடைபெறும்.

அர்த்த சாமம்

இரவு 9 மணி அளவில் நடராசருக்கு அபிடேகம் நைவேத்தியம் ஆகியவை செய்விக்கப் பெறுகின்றன. நடராசர் பாதுகை பல்லக்கில் வைக்கப்படுகிறது. இது உடனே பள்ளிஅறையை எய்துகிறது.

வெள்ளிக்கிழமைகளில் பாதுகைக்கு இரண்டாம் பிராகாரத்தில் ஆங்காங்கு மண்டகப்படி நிகழும். அப்போது வேத பாராயணமும் தமிழ் மறைகளும் ஓதப்பெறும் அங்கும் நைவேத்தியம் தீபாராதனை ஆகியவை செய்யப்பெறுகின்றன. இறுதியில் பிரமசண்டேசுவரர், வயிரவர், அர்த்தசாமர் ஆகியோருக்குப் பூசையும் தீபாராதனையும் செய்யப்படுகின்றன. இக்கோயிலின் பாதுகாப்பை அந்நிலையில் அர்த்தசாமர் ஏற்றுக்கொள்கிறார் என்பது மரபுவழி நம்பிக்கை.

15) 1. 2. மற்றச் சந்நதிகளில் பூசைகள்

மூலநாதர், உமையம்மை ஆகியோர் சந்நிதிகள், சிவகாமி சுந்தரியம்மை சந்நிதி ஆகியவற்றில் நாள்தோறும் இரு காலப் பூசைகள் காலையிலும், மாலையிலும், நடைபெறுகின்றன.

முக்குறுணி விநாயகர் கோயில், கற்பக விநாயகர் கோயில், பாண்டிய நாயகர் கோயில் ஆகியவற்றிலும் மற்றச் சந்நிதிகளிலும் காலையில் ஒரு தடவையும் மாலையில் ஒரு தடவையும் பூசைகள் நடைபெறுகின்றன.

15) 1. 3. நடராசர் அபிடேகம்

கூத்தப் பெருமானுக்கு ஆண்டில் ஆறுமுறை அபிடேகம் நடைபெறுகிறது. சித்திரை மாதம் திருவோணத்தில் மாலையில் கனக சபையிலும், ஆனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் உதயத்திற்கு முன் காலை 4 மணி அளவில் ஆயிரக்கால் மண்டபத்திலும், ஆவணி மாதம் வளர்பிறையில் சதுர்த்தசியில் மாலையில் கனக

சபையிலும், புரட்டாசி மாதம் வளர்பிறைச் சதுர்த்தசியில் மாலையில் கனக சபையிலும், மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் உதயத்திற்கு முன் காலை 4 மணி அளவில் ஆயிரக்கால் மண்டபத்திலும், மாசி மாதத்தின் வளர்பிறைச் சதுர்த்தசியில் மாலையில் கனக சபையிலும் இவ்அபிடேகங்கள் நடைபெறுகின்றன.

15) 2. திருவிழாக்கள்

15) 2. ஆனித்திருவிழா

நடராசருக்கு ஆண்டில் இரண்டு பெரிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன அவை ஆனி மாதம் உத்தரத் திருவிழாவும் மார்கழி மாதத் திருவாதிரைத் திருவிழாவும் ஆகும். விழாத் தொடங்க இருநாள்களுக்குமுன் முதல்நாள் விநாயகர்வழிபாடு நடைபெறுகிறது.

முதல் நாள்

ஏற்றப்பட வேண்டிய கொடி, பல்லக்கில் ஊர்வலமாக எடுத்து வரப்படும். காளை உருவம் இக்கொடியில் வரையப்பட்டிருக்கும். பஞ்சமூர்த்திகள் கொடிமரத்தின் முன்வருவர். நடராசர் கொடியேற்றச்சிற்சபையிலிருந்து புறப்பட்டு வந்து கொடியேற்றுவார்.

இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் முதலாகக் காலை இரவு இரு வேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெறும். இரவு சோமக்கந்தர் சந்திரவாகனத்தில் எழுந்தருளுகிறார்.

மூன்றாம் நாள்

சோமக்கந்தர் சூரியவாகனத்தில் எழுந்தருள மற்ற மூர்த்திகள் தமக்குரிய வாகனங்களில் எழுந்தருள்கிறார்.

நான்காம் நாள்

சோமக்கந்தர் பூத வாகனத்தில் எழுந்தருள்கிறார். இயற்கைச் சக்திகளாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் இறைவன் இயக்குகிறார் என்பதை இது காட்டுகிறது.

ஐந்தாம் நாள்

இந்நாளில் சோமக்கந்தரும், சிவானந்த வல்லியும் தனித்தனியாகக் காளை வாகனத்தில் எழுந்தருள்கிறார்கள். இரவு கொடிமரத்திடம் அத்தரராயர் எழுந்தருளச் செய்த பின்னர்ப் பூசை நடைபெறுகிறது.

ஆறாம் நாள்

சோமக்கந்தரை யானை மீது எழுந்தருளச் செய்வது வழக்கம். சிவபெருமான் கயமுகனைக் கொன்று அவன் தோலை உடுத்துக் கொண்டு அவனுக்கு அருள்பாலிக்க அவனை உயிர்பெறச் செய்து தம் வாகனமாகக் கொள்கிறார்.

ஏழாம் நாள்

சிறப்பியல் வேள்விகள் யாக சாலையில் நடைபெறுகின்றன. நடராசர் கயிலாய வாகனத்தில் எழுந்தருள்கிறார். அம்மையாரும் சுப்பிரமணியரும் காளை வாகனங்களில் எழுந்தருள்கிறார்கள். இராவணன் கயிலையைப் பெயர்க்கச் சிவபெருமான் தம் கால் விரலைக்கயிலை மலையின் மீது ஊன்ற, அவன் கதறிப் பின்பு சாமகானம் பாடிப் பேறு பெற்றான். இந்நிகழ்ச்சியை இவ்வாகனம் குறிக்கிறது. இந்நாளில் வானவேடிக்கை நிகழ்கிறது.

எட்டாம் நாள்

ஆனி மாதத்து எட்டாம் நாள் திருவிழா மக நட்சத்திரத்தில் நடைபெறுகிறது இந்நாளில் மாணிக்கவாசகர் நடராசருடன் ஐக்கியமாதலை இவ்விழாகுறிக்கிறது. காலையில் பஞ்சமூர்த்திகள் உலாவரும்போது மாணிக்கவாசகரும் வீதிவலம் வந்து கோயிலை அடைந்துமுத்திபெறும் காட்சி நிகழ்கிறது. மாலையில் பிட்சாடனர் வீதி உலா நடைபெறுகிறது. இரவில் சோமக்கந்தர் மட்டும் குதிரை வாகனத்தில் வீதி வலம் வருகிறார்.

ஒன்பதாம் நாள்

இந்நாள் தேர்த் திருவிழாவாகும். நடராசர், சிவகாமிஅம்மை சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகியோர் ஐவரும் ஐந்து தேர்களில் வீதி வலம் வருகிறார்கள். இதன் பின்னர் நடராசர் சிவகாமி அம்மை ஆகிய இருவரும் தங்கள் இருப்பிடம் வந்து சேரும்வரை மண்டகப்படி நடைபெறுகிறது. ஆடலரசரும் அம்பிகையும் ஆயிரக்கால் மண்டபம் அடைகிறார்கள்.

இங்கு அருச்சனை, ஆராதனை ஆகியவை நடைபெறுகின்றன.

பத்தாம் நாள்

காலை 3 மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் ஆடலரசுக்கும் அம்பிகைக்கும் சீரிய முறையில் நீராட்டு நடைபெறும். காலை 10 மணிக்குப் பஞ்சமூர்த்திகள் வாகனங்களில் எழுந்தருளி வீதிவலம் வருகின்றனர். தீபாராதனை முடிவுற்றதும் நடராசரும் சிவகாமி சுந்தரியும் சச்சிதானந்த நடனம் செய்துகொண்டு திருச்சிற்றம்பலம் அடைகின்றனர். இது தரிசனம் எனப்படும்.

15) 2. 2. மார்கழித் திருவாதிரைத் திருவிழா

இரவு யாகசாலையில் 10 நாள்களாகவைத்து வழிபாடாற்றப் பெற்ற கலசங்களின் நீரைக்கொண்டு படிகலிங்கத்திற்கு அபிடேகம் நடைபெறுகிறது. பின்னர்ச் சுப்பிரமணியர் முன்னிலையில் கொடியிறக்கம் நடைபெறுகிறது. இதனை அடுத்துச் சுப்பிரமணியர் அத்திரர் ஆகியஇருவரும் வீதிவலம்வருகிறார். கொடி இறக்கப் பட்டதற்குப்பின் அடுத்தநாளில் விடையாற்றித் திருவிழா நடைபெறும்.

ஆனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் நடைபெறும் விழாப் போன்று மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்திலும் திரு விழா பத்து நாள்கள் நடைபெறுகிறது. மார்கழித் திருவாதிரைத் திருவிழா பண்டைகாலத்துச் சிறப்பினையுடையது. முற்காலத்தில் மார்கழி மாதம் முழுச்சந்திரன் இருக்கும் திருவாதிரையில் இவ் விழா நடைபெற்றது என்பதைச் சங்கஇலக்கியமாகிய பரிபாடலில் ''மாயிறு திங்கள் மறுநிறை ஆதிரை'' விரிநூல் அந்தணர் விழவு தொடங்க'' எனக் கூறுகிறது. சிவபெருமான் திருவாதிரைத் திரு விழாவினன் என்பதைப் பரிபாடலின் எட்டாம் பாடல் தெரிவிக்கிறது.

மார்கழித் திருவிழாவில் தேர்த் திருவிழா நெடுங்காலமாகச் சிறப்புற்று வருகிறது. இவ்வுண்மை திருஞானசம்பந்தர் ''மதி தாங்கு சடையாய் தலைவா நல்ல தேரினார் மறுகிற்றூறு வாரணி தில்லை தன்னுள்'' எனக் கூறுவதிலிருந்தும், திருநாவுக்கரசு ''தேருலாவிய் கூத்தனை'' எனக்குறிப்பிடுவதிலிருந்தும் உணர்ந்து கொள்ளலாம். இத்தேர்த் திருவிழாவைத் திருவிசைப்பாவும் சிறப்பித்துக் கூறுகிறது. திருப்பல்லாண்டு இவ்விழாவில் ஓதப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. பத்து நாள்களிலும் நடராசர் சந்நிதிக்கு மாணிக்கவாசகர் எழுந்தருள்கிறார். அப்போது அவர் அருளிய 'திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன. நடராசருக்கு விடையாற்றி விழா நடைபெறுவது போன்று மாணிக்க வாசகருக்கும் இவ்விழா நடத்தப்படுகிறது.

15) 2, 3. மற்றத் திருவிழாக்கள்

அ) திருப்பள்ளி எழுச்சி

சித்திரை முதல் பங்குனி வரை மாதப் பிறப்பு நாள்கள், கார்த்திகை, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்கள் விழா, ஆவணி மூலநட்சத்திரப் பிட்டுவிழா, மார்கழி மாதம் நாள்தோறும் காலை 5 மணிக்குள் திருப்பள்ளி எழுச்சியும் அன்னப்பாவாடையும் நிகழ்கின்றன. ஆடி அமாவாசை நடராசர் பகலில் வீதிவலமும் தீர்த்தம் கண்டருள்கிறார் ஆடி மாதம் 18 ஆம் நாள் நடராசர் கொள்ளிடம் சென்று தீர்த்தம் கண்டருளுகிறார். கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையில் பஞ்சமூர்த்திகள் வீதிவலம் வருகிறார்கள்.

தைமாதம் பூசத்தில் நடராசர் ஆனந்த நடனம் புரிந்தநாளாதலால் அன்றிரவு பஞ்ச மூர்த்திகள் வீதிஉலா வருகிறார்கள். மாசிமாதம் மகத்திற்கு முந்திய நாள் நடராசர் கடல்தீர்த்தம் கண்டருள்கிறார். மாசிமாதம் சிவராந்திரியன்று ஆறுகாலப் பூசையோடு இரவு நான்கு காலம் பூசைகள் நடைபெறுகின்றன. அன்று விடிவதற்கு முன் நடராசர் இடப வாகனத்தில் வீதி உலா வருகிறார்.

ஆ) நால்வர் திருநாள்

சித்திரை சதயம் திருநாவுக்கரசர் முத்தி அடைந்த திருநாளும் இதுபோன்று திருஞானசம்பந்தர் வைகாசி மூல நட்சத்திரத் திரு நாளும் மாணிக்கவாசகர் ஆனி மாலம் மக நட்சத்திர விழா வும், சுந்தரமூர்த்திகளின் ஆடிமாதம் சுவாதி நட்சத்திரத் திருநாளும் கொண்டாடப் பெறுகின்றன.

இ) சிவகாமி சுந்தரி அம்மை

சிவகாமி அம்மைக்கு ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் தனிப் பூசையும் அபிடேகமும் நடைபெறுகின்றன. புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. துர்க்கைக்கும் இவ்விழா கொண்டாடப் பெறுகிறது.

ஐப்பசிமாதம் சிவகாமி அம்மை கோயிலில் பூசத்திற்கு 10 நாட் களுக்கு முன்னதாகக் கொடியேற்று விழா நடைபெறுகிறது. பின்னர் இறைவனுக்கும் இறைவிக்கும் திருக்கலியாண விழா நடைபெறுகிறது.

விநாயகருக்கு ஆவணிச் சதுர்த்தியில் திருவிழா நடைபெறு கிறது. சுப்பிரமணியருக்குக் கந்தர்சட்டி விழா நடைபெறுகிறது. சூரசம்மாரத்திற்குப் பின்னர் அடுத்தநாளில் இரவு சுப்பிரமணிய ருக்குத் திருக்கலியாண விழா நடைபெறுகிறது.

பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்திற்குப் பத்து நாள்க ளுக்கு முன் தொடங்கும் பாண்டிய நாயகர் திருவிழா 10 நாள்கள் நடைபெறுகின்றது.

கொடியேற்றப்பட்ட பின்னர் நாள்தோறும் ஆறுமுக சுப்பிர மணியர் வீதி உலா வருகிறார். தேர்த்திருவிழாவில் இவர் தேர் மீதில் அமர்ந்து நான்கு வீதிகளிலும் உலா வருகிறார்; அடுத்த நாளில் சிவகங்கையில் தீர்த்தம் காண்கிறார்.

வியாக்கிரபாதர், பதஞ்சலி, சைமினி ஆகியோர் விழா

தை மாதம் பூச நட்சத்திரத்திற்குப் பத்து நாள்களுக்கு முன்ன தாக இம்மூவர் விழா நடைபெறுகிறது. இந்நாள் காலையில் பஞ்ச

மூர்த்திகளும் வியாக்கிரபாதர், பதஞ்சலி, சைமினி ஆகியோரும் உலாவந்து சிவகங்கையில் தீர்த்தங் கண்டருள்கிறார்; இதன் பின்னர் அன்னப்பாவாடையுடன் தீபாராதனை நடைபெறுகிறது. அன்னம் பலருக்கும்பகிர்ந்து அளிக்கப்படுகிறது; இரவில் மூன்றாம் பிராகாரத்தில் வலம்வந்து திருமூலநாதர் சந்நிதியை அடைகிறார்கள். அங்கு வழிபாடு நடைபெறுகிறது. பின்னர் அர்த்தசாமருக்குப் பூசை நடைபெறுகிறது. இதன் பின்னர் இம்மூவருக்கும் தீபாராதனை நடைபெறுகிறது.

இக்கோயிலுக்குரிய ஆகமம் மகுடாகமம் என இரட்டையர் இயற்றிய தில்லைக் கலம்பகம் கூறுகிறது. ஆனால் பதஞ்சலி முனிவரால் வகுக்கப்பட்ட பூசை விதிகளுக்கேற்ப வைதிக முறையில் இக்கோயிலில் பூசைகள் நடைபெற்று வருகின்றன. இரட்டையரால் தில்லைக்கலம்பகத்தில் குறிப்பிடப்பட்ட மகுடாகமம் பொதுவாக நடராசர் கோயிலுக்குரியது என்பதும், பதஞ்சலி முனிவர் வகுத்த வைதீக பூசை தில்லை நடராசர் கோயிலுக்கு சிறப்பாக உரியது என்பதும் தீட்சிதர்கள் கருத்தாகும்.

தில்லைச் சிற்றம்பலவாணர் சந்நிதியில் வேதபாராயணம் நிகழ்த்தப்பெறுகிறது. மாணிக்கவாசகர் திருவாசகம் உட்படத் தமிழ்மறைகள் மேடைக்குக்கீழ் ஓதுவார்களால் ஓதப்பெறுகின்றன. திருவிழாக்களின் போதும் தேவாரம் திருவாசகம் கொடிக்கவி ஆகியவை போன்ற தமிழ் மறைகள் ஓதப்பெறுகின்றன.

16) சமயம், கலை, சமுதாயம், பண்பாடு

சைவ சமயத்தில் கோயில் வழிபாடு மிகச் சிறந்த இடம் பெறுகிறது என்பதைச் சைவ சித்தாந்தத் தலையாய சாத்திரமாகிய சிவஞான போதம் அழுத்தமாகக் கூறுகிறது. சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் கோயில்களுக்கெல்லாம் முதன்மைக் கோயில் தில்லைச் சிற்றம்பலவர் திருக்கோயிலே என்பதை நிலைநாட்டும் வகையில் கோயில் என்னும் பொதுச்சொல் இதனையே குறிப்பிடுகிறது. சைவத் திருமுறைகள் தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயிலைக் 'கோயில்' என்னும் பெயரிலே குறிப்பிடுகின்றன.

சைவ சமயத்திற்குத் தோத்திரங்களும், சாத்திரங்களும் இரு கண்கள் போன்றவை. தோத்திரங்களில் அடங்கிய பன்னிரு திருமுறைகளுக்குரிய தேவாரப் பதிகங்கள் தில்லைச் சிற்றம்பலவர் திருக்கோயிலில் கண்டுபிடிக்கப் பெற்றவை. பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களுள் சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் வரையிலுள்ள நூல்கள் எட்டும் தில்லையில் வாழ்ந்துவந்த உமாபதி சிவாசாரியாரால் இயற்றப் பெற்றவை. இவற்றுள் சங்கற்ப நிராகரணம் கி. பி. 1313 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் தில்லை அம்பலவாணரது ஆறாம் திருவிழாவில் இக்கோயில் மண்டபத்தில் பலரும் தத்தம் சமயக் கொள்கைளை ஒருவரை அடுத்து ஒருவராக எடுத்துக் கூறப் பின்னர் உமாபதி சிவாசாரியர் ஒருவரே பலர் கூறியவற்றைச் சுருக்கிச் சிறந்த முறையில்

எடுத்துரைத்துப் பின்னர், அவற்றைத் திறம்பட மறுத்துச் சைவ சித்தாந்தம் எத்துணை அளவுக்கு விழுமிய பெருங்கொள்கையுடையது என்பதை விளக்கினார். இது தில்லைச் சிற்றம்பலவனார் கோயில் வரலாற்றில் ஒரு மாபெருந் தத்துவப் புரட்சியாகும்.

மற்றப் பெரிய கோயில்களைப் போன்றே தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயிலும் கட்டடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை முதலியவற்றின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது. இப் பகுதிவாழ் மக்களின் பொருளாதாரத்தையும் ஓரளவு இது பெருக்கியுள்ளது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் முற்காலத்து வரலாற்றை வகுக்கப் பெரிதும் பயன்படுகின்றன. இவையெல்லாவற்றிலும்விட இக்கோயில் மிகமிஞ்சி விளங்குவது இதன் நடராசர் தத்துவமே. இத்தத்துவம் காலம் கடந்தது.

தாண்டவம்

பிறவிக் கடலின் துன்பச்சூழலில் கவலைப்புயலால் தாக்குண்டு வருத்தமுற்று வந்த உயிர்கள் யாவும் ஓய்வு எடுத்துக்கொள்ளும் நிலையில், பேருழிக்காலத்தில் சிவபெருமானிடம் ஒடுங்குகின்றன. அவ்வாறு ஒடுங்கின உயிர்கள் மேலும் வினைகளை அனுபவிக்க வேண்டியவையாக இருந்தன. இவ்வாறு அனுபவித்து அவ்வினைகளிலிருந்து விடுபட்டு நற்பேறு பெறுவதற்காக அவை மீளவும் தோன்றுமாறு சிவபெருமான் கருணை புரிகிறார். இவ்வாறு உயிர்கள் முன்னேறுவதைக் கண்டு அவர் மகிழ்ச்சி அடைகிறார். அம் மகிழ்ச்சியில் தோன்றியதுஅவரது தாண்டவம். அத்தாண்டவம் உயிர்களுக்கு ஆனந்தத்தை ஊட்டுகின்றது.

இவ்வாறு இவர் புரிந்த தாண்டவங்கள் பல. இவற்றில் 12 தாண்டவங்கள் மிக முக்கியமானவை என்பர்.[1] இவற்றிலும் சிறப்புடையவை நவதாண்டவங்கள் எனப்பெறும் ஒன்பது தாண்டவங்கள். இவற்றிலிருந்து ஏழு தாண்டவங்கள் பிரித்தறியப் பெற்றுள்ளன. அவையாவன :

1. ஆனந்தத் தாண்டவம்

இதுவே பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் காணப்பெறுவதாகும். ஆணவ இருளைப் போக்கி வினைகளை நுகர்வித்து பேரின்ப நிலையை எய்துவிக்கின்ற பெருங்களிப்பில் சிவபெருமான் ஆடுகின்ற தாண்டவம் இதுவாகும். தில்லைத் தலத்து நடராசர் திருவுருவமே எல்லா வகையிலும் சிறப்புடையதாகவுள்ளது.

---

1. சாத்தனார் இயற்றிய கூத்தநூல் - கவிஞர் பாலபாரதி ச.து.சு. யோகியர் இயற்றிய விளக்கக் குறிப்புகள், பொழிப்புரை - இயற்றியவர் மகாவித்துவான் செந்தமிழ்க் களஞ்சியம் மே. வி வேணுகோபாலப் பிள்ளை

மயிலாடுதுறையைச்சார்ந்தஆனந்தத்தாண்டவபுரத்தில் பஞ்சவடீச்சர் திருக்கோயிலில் காணப்பெறும் ஆனந்தத் தாண்டவ மூர்த்தி முனிவர் ஆனந்தருக்குக் காட்சியளித்தார் என்பது அத்தலவரலாறாகும்.

2. சந்தியா தாண்டவம்

பிரதோட நேரம் எனக் கருதப்பெறுவதாகிய பகலும் இரவும் சந்திக்கும் மாலை நேரத்தில் இறைவன் மகிழ்ச்சி பொங்க ஆடுவது இத்தாண்டவம்.

சிவபெருமான் ஆலகால விடத்தை அருந்தி, சிறிது நேரம் யாதும் புரியாது இருந்தபோது தேவர்கள் அவரை வழிபட்டனர். அந்தநாள் ஏகாதசி; அடுத்தநாள் துவாதசி; அப்போது பாரணை செய்தனர். பின்னர்த் திரியோதசியில், உமாதேவி காணச் சிவ பெருமான் சூலம் தாங்கி ஒரு யாமம் நடனம் புரிந்தனர். இதுவே பிரதோட நடனமாகும். இந்நடனத்திற்குக் காரணாகமம் சிறப்பளிக்கிறது.

மதுரை வெள்ளியம்பலத்தில் நிகழ்த்தப்பட்ட தாண்டவமும் சந்தியா தாண்டவமாக ஏற்றுக் கொள்ளப் பெற்றுள்ளது.

3. உமா தாண்டவம்

இது ஒரு முகம், முக்கண், சடாமகுடம், ஆறு கைகளோடு, உமாதேவியுடன், கங்கையைச்சடையில் தாங்கி அணிகலன்களோடு புலித்தோலாடை உடுத்துச் சிவபெருமான் ஆடும் நடனமாகும்.

4. கௌரி தாண்டவம்

ஒரு சமயம் நிறைமதி நாள் மாலை நேரத்தில் சிவபெருமான் கௌரியோடு கயிலையில் வீற்றிருந்தபோது, சிவபெருமான் புரிந்த திரிபுரசங்கார வெற்றிக்கூத்தினைக் காணக் கௌரி விரும்பினார். இவ்விருப்பத்திற்கேற்பச் சிவபெருமான் இத்தாண்டவம் புரிந்தார். சிவபெருமான் இந்நடனம் புரிந்தபோது கௌரி இடப்புறத்தில் இருந்தனர். புரட்டாசி மாதம் பௌர்ணமியில் இப்பெருமானை வழிபடுதல் சிறப்பளிக்கிறது எனக் காரண்ஆகமம் கூறுகிறது இத்தாண்டவ மூர்த்தி திருவுருவம் திருப்பத்தூர் திருக்கோயிலில் காணலாம்.

5. காளிகா தாண்டவம் அல்லது முனி தாண்டவம்

இத்தாண்டவம் ஒருமுகம், எட்டுக் கைகளோடு, வலக்காலைத் தூக்கியவாறு, இடக்காலை முயலகன் மீது ஊன்றி ஒரு கையை வலப்பக்கம் குறுக்கே நீட்டியாடுதலாகும். இத்தாண்டவமூர்த்தி திருவுருவம் திருநெல்வேலி தாமிர சபையில் இருக்கின்றது.

6. திரிபுர தாண்டவம்

இதில் கௌரி வலப்புறத்தில் இருக்க முருகப்பெருமான் அஞ்சலி செய்தவண்ணம் இடப்புறத்திலுள்ளார். இத்தாண்டவ மூர்த்தி திருக்குற்றாலம் சித்திர சபையில் காணலாம்.

7. ஊர்த்தவ தாண்டவம்

இத்தாண்டவம் வலக்காலை உடலோடு ஒட்டி உச்சி அளவுக்கு தூக்கி நின்றாடுவது. ஊர்த்துவம் என்பது 'மேல்' என்னும் பொருள் தருகிறது. திருவாலாங்காட்டில் சிவபெருமான் காளியோடாடிய தாண்டவம் இதுவாகும், ஐப்பசிப் பௌர்ணமியில் இங்குத் தரிசனம் செய்தலால்சிறப்புடைத்து எனக்காரணாகமம் கூறுகிறது.

பண்டை இலக்கியங்களில் தாண்டவம்

சிவபெருமான் ஆடிய தாண்டவங்களைப் பற்றிய குறிப்பைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் காணலாம். இறைவன் ''கொடு கொட்டி'', 'பாண்டுரங்கம்', 'காபாலம்' ஆகிய கூத்துகளை ஆடியபோது இறைவி அவருக்குத் துணை புரிகிறார் எனப தாக இக்கலித்தொகைக் கடவுள் வாழ்த்து கூறுகிறது.

சிலப்பதிகாரம் சிவபெருமானின் பதினொரு வகைக் கூத்துகளைப் பற்றிக் கூறுகிறது. சிவபெருமான் ஆடிய கூத்துகள் கொடு கொட்டியும், பாண்டுரங்கமுமாகும். தம் காலில் சிலம்பு விளங்கவும், கையில் துடி ஒலிக்கவும், கண்கள் பலவகைக் கருத்துகளை வெளிப்படுத்தவும், சிவந்த சடைகள் நாற்றிசைகளிலும் பரவுமாறும் சிவபெருமான் ஆடுகிறார். இவர் அருகில் அம்மை அச்சமும் வியப்பும் தோன்ற அடங்கி நிற்கிறார்.

இவ்வாறு கூறும் சிலப்பதிகாரத்தை அடுத்து சிவபெருமான் ஆடிய திருக்கூத்தை விரிவாக எடுத்துக் கூறியவர் திருமூலர். அண்டபிண்ட சாரசரங்கள் அனைத்தும் அவரது திருமேனியாகும். எல்லாம் அவர் ஆடுகிற சிதம்பரமாகும். இக்கூத்தினைச் ''சிவானந்தக் கூத்து'', ''சுந்தரக் கூத்து'', ''பொற்பதிக் கூத்து'', ''பொற்றில்லைக் கூத்து'', ''அற்புதக் கூத்து'' என்னும் ஐந்து வகைகளில் திருமூலர் எடுத்துரைத்துள்ளார். இவ்வைந்து கூத்துகளும் 'சிவாயநம' என்னும்சூக்குமபஞ்சாட்சரத்தின்அடிப்படையில் எழுந்தவையாகும் இவ்வைந்தெழுத்து மந்திரத்தின் ஒவ்வோர் எழுத்தின் அடிப்படையில் இவ்வைந்து கூத்துகளும் நிகழ்கின்றன என்பதைத் திருமந்திரம் எடுத்துக் காட்டுகிறது.

சிவானந்தக்கூத்து

இது 'சிவாயநம' என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தின் வகாரம் திருவருளாகிய சக்தியைக் குறிக்கிறது உலகியல் அறிவு, சாத்திரங்களைப் படித்தறியும் அறிவு முதலியவற்றிற்கு அப்பாற்பட்ட

நிலையில், ஞானானந்தம் புரிகின்ற சிவபெருமானுக்குச் சதானந்த வடிவாகிய சத்தியே அரங்கம். அந்த அரங்கத்தில் ஆனந்தமே வடிவாக வீற்றிருப்பதே சிவானந்தக் கூத்தாகும்.

(திருமந்திரம் 2724 2725 2726 2727)

1. சுந்தரக் கூத்து

இக்கூத்து சூக்கும பஞ்சாட்சரத்தின் சிகாரத்தில்சிவபெருமான் புரியும் கூத்தாகும். மேலே குறிப்பிட்டவாறு ஞானமே திருமேனி கொண்டு ஞான சத்தியாகிய அரங்கத்தில் ஞானக் கூத்தாடிய இறைவன்ஞானிகளுக்கன்றி மற்றையோர்க்கும் பயன் அளிக்கும் வகையில் தம் திருக்கூத்தை இங்கு மேற்கொள்கிறார். எல்லா நடனங்களுக்கும் இறைவனே காரணமாக இருக்கிறார்.

(திருமந்திரம் 2733 2734 2735)

2. பொற்பதிக் கூத்து

இது சூக்கும பஞ்சாட்சரத்தில் யகாரத்தில் சிவபெருமான் புரியும் கூத்தாகும். சுந்தரக் கூத்திலும் பயன் அடைபவர் சிலரே. அந்நிலையை உணர முடியாத பலருக்கும் பயன் அளிக்கும் வகையில், சிவபெருமான் அவ்வுருவத்துடன் விளங்கும் சிவலிங்கத் திருமேனியில் ஈசனாகி, ஐந்து முகங்களோடு தனிப்பெருங் கூத்தாடுகிறார். இதில் உயிர்களாகிய பசுக்களுக்குத் தலைவராக(பதியாக) சிவபெருமான் ஆனந்தத்தை அளிக்கிறார். (திருமந்திரம் 2739)

3. பொற்றில்லைக் கூத்து

இது சூக்கும பஞ்சாட்சரத்தின் மகரத்தில் அவர் புரியும் கூத்தாகும். பரிபாகம் குறைந்தவர்களும் பயன்பெறுமாறு சிவபெருமான் தில்லைத் தலத்தில் உருமேனி தாங்கித் தாண்டவம் புரிகிறார். தில்லையில் பொன்மன்றம் உள்ளது. அதிலுள்ள சிற்சபையில் சிவபெருமான் ஆடுகிறார். (திருமந்திரம் 2754)

4. அற்புதக் கூத்து

அவருடைய திருநடனத்தைக் கண்டு ''தீதறுங்கள்'' எனத் திருமூலர் அறிவுறுத்தியுள்ளது அவரது,

'' ஆடிய காலும் அதில் சிலம்போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலமும் குருபரன் கொண்டாடத்
தேடியுளே கண்டு தீர்ந்தற்றவாறே ''

என்னும் அருமைப் பாடலில் காணலாம். திருமந்திரம் - 2760

இது நகரத்தில் சிவபெருமான் ஆடும் கூத்தாகும் திருமந்திரம் 2770, 2775)

இவ்வாறு நடராசப் பெருமான் கூத்தைப் புறத்தே காண்பதை விட அகத்தே காண்பது சிறந்தது. இது பெரும்பயன் அளிக்கிறது. அனுபவமுறையில் கண்டறியப்பெற்ற கூத்து அற்புதக்கூத்தாகும். சிற்றம்பலம் நெற்றிக்கு நேரே இருபுருவங்களுக்கிடையே உற்றுப் பார்த்தால் உரிய மந்திரம் ஒளிவிட்டுத் தோன்றும் இதுவே சிவ பெருமான் ஆடுகின்ற திருவைந்தெழுத்தின்வடிவாய் அப்பெருமான் உருவையும் ஆட்டத்தைக் காட்டும் என்பதைத் திருமூலர்

" நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பாமனிருந்திடம்
சிற்றம்பலமென்று சேர்ந்து கொண்டேனே "

எனத் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

திருமூலருக்குப் பின்னர்த்திருஞானசம்பந்தர், திருநர்வுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய ஆசிரியர்கள், சேரமான் பெருமாள்நாயனார், பட்டினத்தடிகள் நம்பி ஆண்டார் நம்பி ஆகியோர்போன்ற அருளாளர்கள் தில்லைச் சிற்றம்பலவனார் திருநடனத்தைக் கண்டு களித்துப் பேரின்பம் எய்தினர்.

இவ்வாறு சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் நாட்டியக் கலையையே தோற்றுவித்தன.

இவ்வாறு தாண்டவங்கள் புரிந்த சிவபெருமான் ஆடவல்லான் ஆனார். நெடுங்காலத்திற்குப் பின்னர் சிவபெருமான் ஆணைக் கேற்பப்பரதர் அவரது ஆடல்களை ஒன்றாகத் திரட்டி நடனக் கலையை அழகுறஅமைத்தார் என நாட்டிய சாத்திரம் கூறுகிறது. தற்போது பரத சாத்திரம் என்னும் நாட்டியச்சாத்திரத்தில் காணப் பெறும் 108 வகைக்கரணங்கள் சிறப்பாக ஏற்றுக் கொள்ளப் பெற்றுள்ளன. இப்பரதர் சிவ்பெருமான் ஆணைக்கேற்ப இந் நுலை இயற்றினார் எனப்பரதசாத்திரம் கூறுகிறது.

இந்நாட்டியங்கள் நாட்டில் பரவவேண்டுமெனில் அவை திருக் கோயில்களில் பொறிக்கப்பட வேண்டும். அவற்றைப் பொறிப்ப தற்குச் சிற்பிகளுக்குத்திறன் வேண்டும்.எனவும்திருக்கோயில்களை உருவாக்கும் சிற்பிகள் நாட்டியச் சாத்திரங்களைக் கற்கவேண்டும். எனவும்விதி 'விஷ்ணு தர்மோத்திரம்' என்னும்நூல்குறிப்பிடுகிறது. இந்நூலின் அறிவுரைகளுக்கேர்ப சிற்பியாக விளங்க விரும்புவோர் முதலில் சித்திரம், ஓவியம், நடனம், இசை ஆகியவற்றைக் கற்றுத் தேற வேண்டும். இவ்வாறு தகுதி பெற்ற சிற்பிகள் தில்லைச் சிற்றம்பலவனார்திருக்கோயில் கோபுரங்களில் நாட்டியக் கலைச் சிற்பங்களைஅழகுற அமைத்துத் தந்துள்ளனர். ஆடவல்லானின் தாண்டவம், ஆகமத்தில் புசங்கத்ராசிதம் என்னும்பெயரில் விளங்கு கிறது. இந்தக் கரணத்தில் காலை வளைத்து இடுப்பு முழங்கால் களை ஒடுக்கிநின்றாடவேண்டும்இதுபாம்பைக்கண்டுஅஞ்சிஒடுவது போன்றதாகும். இக்கரணம் பரதர் நாட்டியச் சாத்திரத்தில் 108 கரணங்களில் 24ஆவது கரணமாக உள்ளது. இதுபோன்று ஆகமங்

களில் கூறப்படும் தாண்டவங்கள் நாட்டியச் சாத்திரத்தில் காணப் படும் கரணங்களோடுஇயன்றவரைஇணைக்கலாம். இக்கோயிலில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் -''ஓசையின்றி அசையாமல் அசைந்து கொண்டிருக்கின்றன''. இவை கட்டடக் கலைக்கு அணிகளாக மட்டுமல்லாமல் நடனக் கலையின் வரலாற்றுக்கும், சாத்திரத்துக் கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. நடனக் கலைகள் நடை முறையிலிருந்து நழுவி மறைந்துவிடாதவாறு நிலைபெற்று விளங்குகின்றன. ஆதலினால் இக்கரணச் சிற்பங்களைத் தாங்கும் நடராசர் ஆலயம் காலத்தைக் கடந்து வென்று நிற்கும் கலைக் களஞ்சியம்; பிறவிக் கடலிலிருந்து உயிர்கள் பேரின்பம் அடைவதற்கு எழுந்த தெய்வீகக் கோயில் களஞ்சியம்.

இவ்வாறு நடராசர் நடனக்கலையும் அவர் ஆடல் தத்துவமும் நம் நாட்டிலன்றி அயல் நாடுகளிலும் தற்போது பரவி வருகிறது. தென்னாட்டுக்குரியவர் நடராசர்.

இதனாலன்றோ மாணிக்கவாசகர்,

> '' தென்னாடுடைய சிவனே போற்றி
> எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி ''

என அப்பெருமானைத் துதிக்கின்றார்.

தில்லை நடராசர் கோயில் பற்றிய தனித்தன்மைகளுள் ஒன்று அதன் நிர்வாகமாகும். தற்போது தீட்சிதர்கள் தில்லைச் சிற்றம் பலவனார் திருக்கோயிலில் பூசை செய்து வந்த முற்காலத்திய தில்லைவாழ் அந்தணர்களின் புரம்பரையினர் என உரிமை கொண்டாடுகின்றனர் இக்கோயிலின் நிர்வாகத்தையும்இவர்களே நெடுங்காலமாக ஏற்று வருகிறார்கள்.

நடராசர் கோயிலில் தில்லைவாழ் அந்தணர்கள் பூசை செய்து வந்ததைத் தேவாரப் பதிகங்கள் தெரிவிக்கின்றன. இவர்களே தில்லைச் சித்திரக் கூடத்துக் கோவிந்தராசர் கோயிலிலும் முற் காலத்தில் வழிபாடு ஆற்றினர் என்பதைத் திருமங்கையாழ்வார் குலசேகர ஆழ்வார் ஆகியோர் அருளிய பிரபந்தப் பாடல்கள் குறிப் பிடுகின்றன.

சிவன் கோயில்களுக்கு அளிக்கப்பெறும் நிலக்கொடைகள் அக்கோயில்களின் சார்பில் சண்டேசுவரர் பெயரில் பதிவு செய்யப் பட்டு வந்தன. இம்முறையே முதல் இராசராசன் காலம் முதல் விக்கிரம சோழன் காலம் வரையில், தில்லை நடராசர் கோயிலைப் பொறுத்த வரையிலும், பின்பற்றப்பட்டு வந்தது. அக்காலத்தில் கோயிற் சொத்துக்கள் வாங்கியதும் அவற்றைக் கொடுத்து விட்டதும் பற்றிய ஆவணங்கள் "திருப்புலியூர்ச் சண்டேசுவர தேவர்" இறைவன் பிரதிநிதியாகக் கருதப்பட்டு அவர் பெயரில் அமைக்கப்பட்டன. ஆனால் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இம்முறைக்கு மாறாக நிலக்கொடைகளைப் பற்றி இம்மன்னன் பிறப்பித்த ஆணைகளைத் 'திருமந்திர ஓலை' என அக்காலத்தில் குறிப்பிடப்பெற்ற அரசுச் செயலாளர் கோயில் அவைக்கும் கோயில்

பூசை செய்வோருக்கும் கோயிலின் நிர்வாகக் குழுவினருக்கும் அனுப்பத் தொடங்கினர். முன்பு கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை வரியிலி நிலங்களாக்க அல்லது இவ்வாறு வரியிலி நிலமாக்கப்படுதலில், குறைக்கப்படவேண்டிய தீர்வையை மற்ற நிலங்களின் மீது விதிப்பதற்காக, ஊர் அவை நிறைவேற்றிய தீர்மானங்கள் அடங்கிய ஆவணங்கள் கோயிலின் "திருக்கையோட்டிப் பண்டாரம்" எனப்படும் ஓர் அறையில் பாதுகாப்பில் வைக்கப் பட்டன. [1] இவ்வாறு கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நன் கொடைகள் பற்றிய ஆணைகள் கோயில் நிர்வாகக் குழுவினருக்கு அனுப்பப்பட்டதால் அக்கொடைகள் பற்றி அவர்கள் கவனம் செலுத்திவந்தது தெரியவருகிறது.

இக்கோயில் மூர்த்திகளின் பேரில் மன்னர்கள் நிலையாகச் சொத்துகளை எழுதி வைத்ததைப்பல கல்வெட்டுகள் கூறுகின்றன. இச்சொத்துகள் இக்கோயில் பெயரில் இருக்கின்றன. இச் சொத்துகள் யார்யாரால் இக்கோயிலுக்கு விடப்பட்டனவோ அவர்கள் பரம்பரையினரிடமே தற்போது உள்ளன. அவர்கள் அவ்வப்போது இக்கோயில் பூசைகள் திருவிழா முதலியவற்றை நடத்திவருவதற்கு உதவி வருகிறார்கள். பிறரிடம் இருந்துவரும் இக்கோயில் சொத்துக்களையும் பற்றி நடவடிக்கை எடுத்து வரப் படுகிறது. [2]

கோயில்களின் பெயரில் நிலக்கொடை வழங்குவதற்குப் பதி லாகப்பிற்காலத்தில் கோயில்அறச்செயல்களுக்காக கட்டளைகள் நிறுவப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. [3] தற்போது கோயில் பூசைகள் இக்கட்டளைகளிலிருந்து கிடைக்கப் பெறும் பொருள்களைக் கொண்டோ பிறர் அளிக்கும் தொகை களைக் கொண்டோ நடத்தப்பெறுகின்றன.

நடராசர், தீட்சிதர்கள் குடும்பத் தெய்வமும் அவர்கள் வழிபடு மூர்த்தியுமாவார்.

---

1) 280/1913, 290/13

2) பிறரிடம் இருக்கக்கூடிய இக்கோயில் சொத்துகள் பற்றி அண் மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விளைவாக 40,000 ரூபாய் வரை மீட்கப்பட்டது எனவும் இத்தொகை கோயிலின் மின்செலவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது எனவும் இக்கோயில் அறங்காவலர் திரு எஸ். வைத்தியநாத தீட்சிதர் தெரிவித்துள்ளார். தற்போது இத்தொகை ஒரு இலட்சத்திற்கு எட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (சிதம்பரம் கோயில், சோமு நூலகம், பக்கங்கள் 193-195)

3) 349/1913; 362/1913

பூசை செய்வதற்காகத் தகுதிபெற்ற தீட்சிதர் ஒவ்வொருவரும் இக்கோயிலில் பூசை செய்ய உரிமை பெறுகிறார். திருமணம் செய்துகொண்ட தீட்சிதர் ஒவ்வொருவரும் இக்கோயிலின் நிர்வாகத்தில் பங்குகொள்ள உரிமை பெறுகிறார். இவ்வாறு இக் கோயிலின் நிர்வாகம் திருமணம் செய்துகொண்ட தீட்சிதர்களின் பொறுப்பில் உள்ளது. இவர்கள் அவ்வப்போது இக்கோயிலில் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றி இக்கோயில் நிர்வாகத்திற் கென வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப இக்கோயில் செயற் பாடுகளை மேலாண்மை செய்கிறார்கள். நடராசர் கோயில் நிர் வாகத்திற்காக 1850 ஆம்ஆண்டில் ஓர்ஏற்பாடு வகுக்கப்பெற்றது. 1900 ஆம் ஆண்டில் இதற்குச் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. இதற்குத் தற்போது 700 விதிமுறைகள் உள்ளன. இவற்றிற் கேற்பவே இக்கோயில் நிர்வாகம் செய்யப்படுகிறது.

முக்கியமான திருவிழாக்கள் இரு பிரமோற்சவங்களாகும். எல்லாச் சாதியினரும், ஒவ்வொரு நாள்விழாவையும் தங்கள் தங்கள் இனத்தவர்களிடமிருந்து பெறப்படும் தொகையைக் கொண்டு நடத்திவருகிறார்கள் மற்ற விழாக்களைத் தனிப்பட்ட உபய தாரர்கள் நடத்துகிறார்கள்.

இக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தின் வெளிப்புறமுள்ள நான்கு கோபுரங்களின் வழியாக நான்காம் பிராகாரத்தைக்கடந்து ஐந்தாம் பிராகாரமாகிய இரத வீதியை அடைய வேண்டும். நாற்புறங்களிலும் உள்ள இவ்வழிகள் நீங்கலாக நான்காம் பிரா காரத்திலுள்ள பகுதிகளில் நந்தவனங்கள், தென்னைமரங்கள் வாழைமரங்கள் ஆகியவை செழிப்பான நிலையில் உள்ளன.

இக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்திற்குக் கிழக்கில் 108 வில்வமரங்கள் பயிரிடப் பெற்றுள்ளன. இவற்றின் கன்றுகள் மற்றப் பகுதிகளிலுள்ள சிவன் கோயில்களுக்கு வழங்கப்பெற்று வருகின்றன.

16) நிர்வாகம்

தில்லை நடராசருக்குப் பூசை செய்யும் தீட்சிதர்கள் சிதம் பரம் கோயிலுடன் மிக்க தொடர்பு கொண்டிருக்கிறார்கள், வியாக் கிர பாதர், பதஞ்சலி ஆகியோர்களுக்குத் திருநடனக் காட்சி அளிக்கச் சிவபெருமான் கயிலாயத்திலிருந்து தில்லைக்கு வந்த போதே அவருடனே தாங்களும் தில்லைச்கு வந்ததாகவும், தில் லையில் இவர்கள நெடுங்காலமாகப்பூசைகள் செய்துவந்த காரண மாகத்தங்களுக்குத் 'தில்லைவாழ் அந்தணர்' என்னும் பெயர் அமைந்ததாகவும். அவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். புனிதத்தமிழ் இலக்கியங்கள் இவர்களைப் பெரிதும் போற்றுகின் றன. சைவ சமய ஆசிரியர்களுள் முதல்வராகிய திருஞான சம் பந்தர் இத்தலத்திற்கு வழிபாடற்ற வந்தபோது சிற்றம்பலவனா ரின் திருவடிகளுக்கு அணுக்கராய் இருந்துவந்த தில்லைவாழ் அந் தணர்கள் பெற்றிருந்த பெரும் வாய்ப்பினை எண்ணி எண்ணி அவர்களுடைய பெருமையை உணர்ந்தார். சிவபெருமான் அரு

ளால் தில்லைவாழ் அந்தணர் பலரும் சிவகணங்களாக அவர் முன் திகழ்ந்தனர். அவர்கள் அப்போது அழகிய நெற்றிக் கண்ணினராகவும். திரிசூலம் பற்றியவராகவும், நீறு பூசியவராகவும் சனட் உடையவராகவும், திருஞான சம்பந்தருக்குத் தோன்றினர் என்பதைத் திருஞான சம்பந்தர் பாடலே தெரிவிக்கின்றது [1]

திருநாவுக்கரசு நாயனார் தில்லைவாழ் அந்தணர்களின் ஒழுக்கச் சிறப்பினைப் போற்றி அவர்களைச் சீலத்தார் - சிட்டர் - உலகுக்கெல்லாம் திருவுடை அந்தணர் என்றெல்லாம் போற்றுகின்றார்.[2]

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிய திருத்தொண்டத் தொகையில் தில்லைவாழ்அந்தணர்களையேமுதலில் போற்றுகின்றார். ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என அவர்களைப் பாராட்டுகின்றார்.

சேக்கிழார் தில்லைவாழ் அந்தணர்களைக் குறிப்பிடும்போது ''இவர்கள் சிவபெருமானிடம் அன்பு செலுத்துதலே பெரும்பேறு எனக் கருதி, ஞானம் எய்தி, தானமும் தவமும் புரிந்து மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்ந்தார்'' எனவும் இவர்கள் ''செம்மையால் தணிந்த சிந்தைத்தெய்வ வேதியர்கள்,, எனவும் கூறி, இவர்கள் பெருமையை முழுவதும் கூறத் தம்மா இயலாதென விளம்பியுள்ளார்.[3]

---

1 மூன்றாம் திருமுறை பதிகம்—1 பாடல்—3

2 மூன்றாம் திருமுறை பதிகம்—1 பாடல்5

3 பெரிய புராணம் — தில்லைவாழ் அந்தணர் புராணம்—8—9

தில்லைச் சிற்றம்பலவர் கோயில் தோத்திரப் பாடல்கள் சில

1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

" கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய்
முற்றா வெண்டிங்கள்முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றாபாவமே

1 - 80 - 1

" நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் தீண்டப்
பிறைவந்திறை தாக்கும் பேரம்பலந் தில்லைச்
சிறை வண்டறை யோவாச் சிற்றம்பலமேய
இறைவன் கழலேத்துமின்ப மின்பமே "

1 - 80 - 1

" செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே "

1 - 80 - 5

" ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையொடு பல்கீதமும்
பல்சடைப் பனிகால் கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே "

3. 1. 1.

" ஆகந்தோயணி கொன்றை யாயனல்
அங்கையாய மரர்க்க மராவுமை
பாகந்தேய்ப் பகவா பலியேற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய் பொழில் மல்கு சிற்றம்பலம்
மன்னினாய் மழுவாளி னாயழல்
நாகந்தோயரையாய் அடியாரை நண்ணாவினையே"

3 - 1 - 6

2) திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

"செஞ்சடைக்கற்றை முற்றத் திளநிலா எறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறும்
மஞ்சடை சோலைத் தில்லைமல்கு சிற்றம்பலத்தே
துஞ்சடை இருள்கிழியத் துளங்கெரியாடு மாறே"
- 4 - 22 - 1

" விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா எறிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய நீண்டபுன் சடைகள் தாழக்
கருத்தனார் தில்லை தன்னுட்கருது சிற்றம்பலத்தே
அருத்தமாமேனி தன்னோடனலெரியாடுமாறே "
- 4 - 22 - 9

" பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற்பத்தி செய்கேன் என்னை நீஇகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே "
- 4 23 - 1

" கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்றன் பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர்வாளை பாயும்மல்கு சிற்றம்பலத்தே
கட்டமாங்குவி முலையாள் கூட நீயாடுமாறே "
- 4 - 23 - 3

" பொய்மினைத் தவிரவிட்டுப் புறமலா அடிமைசெய்ய
ஐயநீ அருளிச் செய்யாய் ஆதியே ஆதிமூர்த்தி
வையகந்தன்னில் மிக்கமல்கு சிற்றம்பலத்தே
பைய நின்னாடல் காண்பான் பரமநான் வந்தவாறே "
- 4 - 23 - 7

" பாளையுடைக் கமுகோங்கிப் பன்மாட நெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல் வந்தெறி வாழ்வயல் தில்லைதன்னுள்
ஆளவுடைக்கழற் சிற்றம்பலத்தரன் ஆடல் கண்டால்
பீளையுடைக் கண்களாற் பின்னைப்பேய்த் தொண்டர்காண்ப
தென்னே "
- 4 - 80 - 1

" பொருவிடை யொன்றுடைப் புண்ணியமூர்த்தி புலியதளன்
உருவுடையம் மலைமங்கை மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
திருவடியைக் கண்டகண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே "
- 4 - 80 - 2

" தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங் கொண்டெப்பொழுதும்
அடுத்துவணங்கும் அயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக் கொண்டணிந்து பொன்னாகிய தில்லைச்சிற்றம்பலவன்
உடுத்தது கில்கண்ட கண்கொண்டு மற்றினி காண்பதென்னே "

- 4 - 80 - 3

" ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாயென்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே "

– 4 – 81 – 2

" குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே "

– 4 - 81 - 4

" வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந்தீவளைத் தான்தில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட் பட்டிருப்பதன் றோநந்தங் கூழைமையே "

c – 4 – 81 – 5

" பூத்தன பொற்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டியரித்தன பல்குறட் பூதகணம்
தேத்தென என்றிசை வண்டுகள் பாடுசிற்றம்பலத்துக்
கூத்தனிற் கூத்து வல்லாருளரோ என்றன் கோல்வளைக்கே "

- 4 – 81 – 6

" படைக்கலமாக உன்நாமத்தெழுத்தஞ்சென்நாவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கிலும் போகேன் தொழுதுவணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்தரனே "

– 4 – 81 - 8

" அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என் னன் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே "

– 5 - 1 - 1

" அல்லல்என் செயும் அருவினைஎன் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லையில்ல தோரடிமை பூண்டேனுக்கே "

- 5 – 1 - 4

" அரிச்சுற்ற வினையால் அடர்ப் புண்டுநீர்
எரிச்சுற்றக் கிடந்தா ரென்றயலவர்
சிரிச்சுற்றுப் பலபேசப் படாமுனம்
திருச்சிற்றம் பலஞ் சென்றடைந்துய்ம்மினே "

5 - 1 - 3

" பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ"

5 - 2 - 1

" தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை
மூர்த்தியை முதலாய ஒருவனைப்
பார்த்தனுக்கருள் செய்த சிற்றம்பலக்
கூத்தனைக் கொடியேன் மறந்துய்வனோ"

5 - 2 - 2

"பித்தனைப் பெருங் காடரங் காவுடை
முத்தனை முளைவெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
அத்தனை அடியேன் மறந்துய் வனோ" 5 – 2 - 5

"அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை
அகல் ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தனை மேல்வரும் பயனைப் போகமாற்றிப்
பொதுநீக்கித்தனை நினையவல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" 6 - 1 – 5

" அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன்தன்னை
அமரர்கள் தம்பெருமானை அரனைமூவா
மருந்தமரர்க்கருள் புரிந்தமைந்தன் தன்னை
மறிகடலுங்குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளியதாரகையுந் திசைகளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறருமாய
பெருந்தகைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" 6 - 1 - 4

" துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலுந்
தூமதியும் பாம்புமுடையார் போலும்,
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமுந்தந்திரமுநதாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க் கன்றாலநிழல்
அறமருளிச் செய்த அரனாரிந்நாள்
புறங்காட்டெரியாடிப் பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே"

"மடித்தாடு மடிமைக்கணன்றியே மன்னே நீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார்தமர் செக்கிலிடும்போது தடுத்தாட்
கொள்வான்
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் சிற்றம்புலத்தெம் பெருமானைப்
பெற்றாமன்றே.
7-90-1

"முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தியென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப் பார்பாவமும் வினையும்போக
விட்டானை மலையெடுத்த இராவணனைத் தலைபத்து
நெரியக்காலால்
தொட்டானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றாமன்றே"
7–90-7

திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள்)

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"
- திருக்கோதும்பி 3

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி"
– திருக்கோத்தும்பி. 4

"மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி
மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச் சிவனவன்
திரள்தோள் மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும் நெக்கிலை இக்காயங்
கீறு கின்றிலை கெடுவதன் பரிசிது கேட்கவும் கில்லேனே"
– திருச்சதகம் - 33

'' இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே''

- கண்டபத்து - 1

'' சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத்தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே''

- கண்டபத்து. 5

'' ஒளிவளர் விளக்கே' உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே''

- திருமாளிகைத்தேவர் பாடல் - 1.

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன் (று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே''

– சேந்தனார் திருப்பல்லாண்டு. 9

'' மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே''

- சேந்தனார் திருப்பல்லாண்டு. 1

திருமந்திரம் (திருமூலநாதர்)

" ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே"
– திருக்கூத்துத்தரிசனம். 4

" தேவரோ டாடித் திருஅம்ப லத்தாடி
மூவரோ டாடி முனிசனத் தோடாடிப்
பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே"
- திருக்கூத்துத் தரிசனம். 36

"அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே"
- திருக்கூத்துத் தரிசனம். 54

" புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குளா னந்தத் தமுதூறும் உள்ளத்தே"
- திருக்கூத்துத் தரிசனம். 57

" தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே"
- திருக்கூத்துத் தரிசனம். 68

பதினோராம் திருமுறை

" நானே பிறந்த பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே"
– கோயில் நான்மணிமாலை. 10

" பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட

என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே"

– பொன்வண்ணத்தந்தாதி. 1.

பெரியபுராணம் (சேக்கிழார்)

" உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்பு வாழ்த்தி வணங்குவோம்"

- தில்லைவாழ் அந்தணர் புராணம். 1.

" ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி, போற்றி.

– தில்லைவாழ் அந்தணர்புராணம். 1.

" கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி, போற்றி.

- தில்லைவாழ் அந்தணர் புராணம். 2.

" எவ்வுலகம் உய்யஎடுத் தருளியசே வடியோரைச்
செல்விய அன்புற வணங்கிச் சிந்தைகளி வரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வரும் ஆனந் தக்கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை அமர்ந்திருந்தார்"

திருமூலநாயனார் புராணம். 7

சிவஞான சித்தியார் (அருணந்தி தேவர்)

" ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
யருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கி வானோர்
மகுடகோ ளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைகடாழப்
படரொளியும் பலந்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்"

- பாயிரம் / சிவ வணக்கம்

உண்மை விளக்கம்

" ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுத் திருவடியி லேநகரம் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார் "

— ஊன நாடகம்

" ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
நீங்கா வெழுத்தே நிறைசுடரா - மாங்கார
மற்றா ரதிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின் "

— ஞான நாடகம்

சிவப்பிரகாசம் (உமாபதி சிவம்)

" ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தி யாகி
யுலகமெலாமளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினு முறவணங்கிப் போற்றிசெய்வாம் "

— பாயிரம். நடராசர் வணக்கம்

கொடிப்பாட்டு (உமாபதி சிவம்)

" அஞ்செழுத்து மேட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து - நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி "

— பாட்டு. 4

சிதம்பர புராணம் (பரஞ்சோதி முனிவர்)

" அருமறையின் சிரத்தொளியா யனந்தமாய்ப் பூரணமாயசலமாகி
யொருமுதலா யுண்மையா யுணர்வாகி யானந்தவுருவமாகி
யிருமலமற்றிருப் போர்கள் விருப்பாகி மணிமன்று
ளென்றுஞானத்
திருமகிழ நின்றாடுஞ் சிதம்பரத்தை யெந்நாளுஞ் சிந்தை

— சபாநாயகர் துதி. 3

பேரூர்ப் புராணம் (கச்சியப்ப முனிவர்)

" ஒருபாலுமைதன துருவின் விரவுற, வொருகைத் துடியொலி
யெஅங்கி
ஒருவா தொருகையி னொளிரக், கவிதர வொருகை, யொருகர
மமைவெய்த,
ஒருதாள் முயலகன் வெரிநிற் பதிவுற, வொருதாள் குஞ்சித
முறவீசி,
ஒருகா ளியின்முகம் விழிநோக் குற,மணி யொளிரம் பலநட
நவில்கின்றான் "

— திருத்தப் படலம். 60

17) தில்லைத் திருச்சிற்றம்பலவனார் திருக்கோயிலுக்குரிய நூல்கள்

1. அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்குடியார்க்கு எழுதிய கைச் சீட்டு. (சிவபெருமான் உமாமதி சிவாசாரியருக்கு எழுதிய சீட்டு)
2. திருமூலர் - கி. பி. 5 - ஆம் நூற்றாண்டு — திருமந்திரம் - திருவம்பலச் சக்கரம் (914 – 1002) திருகூத்துத் தரிசனம் (2722 - 2803)
3. திருஞான சம்பந்தர் - கி.பி. 7-ஆம் நூற்றாண்டு — 1 - 80 (1 - 10), -3 – 1 (1 - 11)
4. திருநாவுக்கரசுநாயனார் – கி. பி. 7-ஆம் நூற்றாண்டு - 5 - 1 – (1 - 10), - 5 - 2 - (1 – 10), – 6 - 1 – (1 – 10), – 6 – 2 – (1 - 11). - 4 – 22- (1–11), – 4 – 80 - (1 - 10), – 4 – 81 – (1 - 10).
5. ஐயடிகள் காடவர்கோன் – கி. பி. 670 - 685 - சேத்திர வெண்பா.
6. சுந்தரமூர்த்தி சுவாமிகள் – கி.பி. 685 - 720 பாக்கள் – 7 - 90 (1 – 10)
7. சேரமான் பெருமாள் நாயனார் — (சுந்தமூர்த்தி சுவாமிகள் காலம்) - பொன்வண்ணத்தந்தாதி (1 – 100)
8. மாணிக்கவாசகர் - கி.பி. 790 - 830) - திருவாசகம், – திருக்கோவையார்
9. பட்டினத்தார் - 9-ஆம் நூற்றாண்டு — கோயில் நான்மணி மாலை (1 - 40)
10. நம்பியாண்டார் நம்பி - ஆதித்தசோழன் காலம் (கி.பி. 870 - 907) - கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 1.70. திருத்தொண்டர் திருவந்தாதி

ஒன்பதாம் திருமுறையினைப் பாடியருளிய ஒன்பதின்மரும் சிற்றம்பலவானாரைப் போற்றினர் என்பதை,

செம்பொன் மணி அம்பலத்து நிருத்தனார்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர் பேர் சொல்லில்
வம்பு புகழ் செறி திருமாளிகைத் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பிகாடவர் கோன் நற்கண்டராதித்தர்
நன்குயர் வேணாட்டடிகள் திருவாலிமுதனார்
அம்புவியோர் புகழ் புருடோத்தமர் சேதிராயர்
ஆகஅவர் ஒன்பதின்மர் காமுறை கண்டடைவே

11. கண்டராதித்தர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி – திருவிசைப்பா
12. சேந்தனார் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு இறுதியும் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் – திருப்பல்லாண்டு
13. திருவாடுதுறைத் திருமாளிகைத் தேவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி – திருவிசைப்பாப் பதிகம் – 1 – 10. – 1 – 11, – 3 – 12, – 3 – 12, – 4 - 11.
14. புருடோத்தம நம்பி – கி.பி. 985–1010 திருவிசைப்பா –
15. திருமயிலைத் திருவாலியமுதனார் (கி.பி. 985–1014) காலத்திற்கு முன்னர் – திருவிசைப்பா – 42
16. வேணாட்டடிகள் [காலம் அறிவதற்கில்லை)
17. பூந்துருதகி நம்பிகாடநம்பி– 10 ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியும் 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும்
– திருவிசைப்பா 11
18. கருவூர்த் தேவர் – கி. பி. 10 ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியும் 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும்
– திருவிசைப்பா 11
19. சேதிராயர் – முதல் குலோத்துங்கன் (கி.பி.1070–1120) காலத்தவர் அல்லது பிற்பட்ட காலத்தவர்
– திருவிசைப்பா 12
20. கல்லாடர் – 9 ஆம் நூற்றாண்டு – தனிப்பாடல்கள்
21. குன்றத்தூர்ச் சேக்கிழார் – (1178-1216)
- திருத்தொண்டர் புராணம்
22. உமாபதி சிவாசாரியார் – (1290–1340)
- கோயிற் புராணம், திருத்தொண்டர் புராண சாரம் சேக்கிழார் புராணம், கொடிக்கவி சிவப்பிரகாசம் முதலியன.
23. இரட்டையர் – (1340 - 1360) - தில்லைக் கலம்பகம்
24. அருணகிரியார் – (கி.பி. 1406 - 1465) - சிதம்பரம் திருப்புகழ் 66 பாக்கள்
25. காளமேகப் புலவர் - (கி.பி. 1455 – 1467) - 7 பாக்கள்
26. மறைஞான சம்பந்தர் - (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு
– சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம்

27. புராணத் திருமலை நாதர் - (கி.பி. 1473 – 1506)
– சிதம்பர புராணம்

கும்பகோணம் சித்தர் சிவர்பிரகாசர் - XVI நூற்றாண்டு
– அத்துவித வெண்பா

28. சீர்காளத்தி கண்கட்டி மறைஞானர் (குகை மடம்)
– (கி.பி. 1626 - 1560) - சிவதருமோத்தரம் சைவ சமயநெறி

29. அப்பைய தீட்சிதர் – (கி.பி. 1553 - 1626) - இராமாயர்
திருமலை நாயக்கர் - 108 சமஸ்கிருத நூல்கள்

30. வெள்ளியம்பலவாணர் – (கி.பி.1680–1710) - மிருகேந்திர
ஆகமம் முத்தி நிச்சய பாஷ்யம் ஞானவரண விளக்கம்

31. படிக்காசு தம்பிரான் – (கி.பி. 1686–1723) - தனிப்பாடல்கள்

32. தொண்டைநாட்டுச் சொக்கநாதப் புலவர் (கி.பி.1686-1723)
நடராசரைப் பற்றிய தனிப்பாடல்கள்

33. சீர்காழி முத்துத்தாண்டவர் XVII நூற்றாண்டு கீர்த்தனங்கள்

34. யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர் XVII நூற்றாண்டு
சித்தியார் உரை

35. குமரகுருபர சுவாமிகள் - XVII நூற்றாண்டு
திருமலை நாயக்கர் காலம் - 1) சிதம்பர மும்மணிக்கோவை
2) சிதம்பரச் செய்யுட் கோவை
3) சிவகாமியம்மை இரட்டை மணிமாலை

36. தில்லை விடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை – புலியூர் வெண்பா
புலியூர் நொண்டி நாடகம், சிதம்பரேசுவரர் விறலிவிடு தூது

37. தாயுமானவர் கி. பி. 1759 (விசயரகுநாத சொக்கலிங்க
நாயக்கர் காலம்) – பாடல்கள்

38. நரிமணம் கோபாலகிருட்டிண பாரதி - பத்தொன்பதாம்
நூற்றாண்டு - நந்தனார் கீர்த்தனைகள் சிதம்பரக் கும்மி

39. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை - பத்தொன்பதாம்
நூற்றாண்டு – திருத்தில்லை யமக அந்தாதி

40. யாழ்ப்பாணம் ; நல்லூர் ஆறுமுக நாவலர் கி.பி. 1822–1879
சிதம்பர மான்மியம்

41. வடலூர் இராமலிங்க சுவாமிகள் (கி.பி. 1823–1874)
திருவருட்பாப் பாடல்கள்

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	7	ஆகசலிங்கமாக	ஆகாசலிங்கமாக
15	33	கோவிலுக்குச்	கோலுக்குச்
		சிற்றம்பக்கோல்	சிற்றம்பலக்கோல்
27	15	தான்டவ	தாண்டவ
30	20	பொன்னம்மலம்	பொன்னம்பலம்
38	7	பதிணெண்	பதினெண்
39	8	ஒவ்வோறு	ஒவ்வொரு
44	7	இருக்குமணியுடனும்	உருக்குமணியுடனும்
48	7	திருத்து	திருத்தி
49	12	தாயுமாணவர்	தாயுமானவர்
51	5	வீரப்பாண்டியன்	வீரபாண்டியன்
52	28	தட்சினாமூர்த்தி	தட்சிணாமூர்த்தி
53	11	சண்டாசுவர	சண்டேசுவர
54	2	மிட்க	மிக்க
54	25	வீற்றிற்கும்	வீற்றிருக்கும்
56	21	தோலில்	தோளில்
58	9	உட்பகத்தில்	உட்பக்கத்தில்
58	12	ஐந்துலைப்	ஐந்துதலைப்
60	21	சாத்தித்துச்	சாத்திரத்துச்
60	38	சோமசுந்தர்	சோமக்கந்தர்
61	15	கங்காவமூர்த்தி	கங்காளமூர்த்தி
65	22	கண்ணாடி	கண்ணாடி
68	24	விதிக்கப்பட்டற்வற்றிகுரிய	விதிக்கப்பட்டவற்றிற்குரிய
69	35	புகியூர்	புலியூர்
70	7	அளிக்கப்பட்தைக்	அளிக்கப்பட்டதைக்
88	5	இவ் அபிடேகங்கள்	இவ்வபிடேகங்கள்

நடேசர் துதி

ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுளகிற்
காரணங்கற் பனைகடந்த கருணை திரு வுருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி

தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலனு பூதியதாய்
அற்புதமா யாரமுதா யானந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி யருளாகும்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி

வையகமின் புறநின்ற மருமலிபொற் பதம்போற்றி
கையமரு நிலைபோற்றி கருணை முக மலர்போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி விரவியெனையெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம் பலம்போற்றி

சிவகாமி அம்மை துதி

மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி

கற்பக விநாயகர் துதி

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபால்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி

சுப்பிரமணியர் துதி

தேராட்டிக் கயங்காட்டுந் திரண்மாக்கட் டயமூட்டிப்
போராட்டிப் புறங்காட்டிப் போங்காட்டிற் புலால்கமழும்
நீராட்டிச் சூர்மாட்டி நிகழ்நாட்டிற் புகழ்நாட்டும்
பேராட்டி சீராட்டும் பிள்ளையார் கழல்போற்றி

கோயிற்புராணம் - உமாபதி சிவாசாரியார்